# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 314 புரட்டாதி 20ஆம் நாள் சனிக்கிழமை 06 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049



குருப்பெயர்ச்சி பலன்கள் - 2018
பக் - 22


## வாகன சலுகை வேண்டும்; விக்கி விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஒக். 6
65 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகன அனுமதிப் பத்திரம் தனக்கு வழங்கபட வேண்டும் என்றும் அது தனது உரித்து என்றும் சுட்டிக்காட்டி நிதி அமைச்சர் >> 04

## அரசமைப்பு வராவிடில் ஆபத்து

யாழ்ப்பாணம், ஒக். 6
புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வராவிட்டால், ஆட்சிப் பீடத்தில் யார் இருந்தாலும் நாடு பின்னோக்கிச் செல்வதைத் தவிர்க்க முடியாதுபோய்விடும். பிரச்சினைகள் தீர்க்கப்படா >> 25

# “அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்”

வவுனியா, ஒக். 6
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் அநுராதபுரம் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 11 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. >> 25






# மைத்திரி மௌனம்

யாழ்ப்பாணம், ஒக்.6
நீண்டகாலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை குறுகியகால மறுவாழ்வளித்து விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தித் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டரசு அந்த விடயத்தில் இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. நேற்று மன்னார் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அவர் அது தொடர்பான எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. >> 23

குமரப்பா, புலேந்திரனுக்கு

## தூபி அமைக்கும் முயற்சி சிலர் எதிர்ப்பால் முடக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.6
வல்வெட்டித்துறை தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளுக்கான நினைவுத் தூபி அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டபோதும், அங்கு வந்த ஒரு சிலர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால் அடிக்கல் நடும் நிகழ்வு தடைப்பட்டது.
நேற்றுக் காலை 8.30 மணியவில் >> 04

## காதைப் பொத்திய சிவாஜி

யாழ்ப்பாணம், ஒக்.6
வல்வெட்டித்துறை, தீருவில் பொது விளையாட்டு மைதானத்தில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளுக்கு நினைவுத் தூபி >> 23

## தூபியைத் தடுப்பதற்காக வல். பொலிஸார் வழக்கு

வழக்கை ஒத்திவைத்தது மன்று

யாழ்ப்பாணம், ஒக்.6
வல்வெட்டித்துறை, தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 15 போராளிகளுக்கு நினைவுத் தூபி அமைப்பது தொடர்பாக வல்வெட்டி நகர சபைத் தவிசாளருக்கு எதிராக வல்வெட்டித்துறைப் >> 05

## மைத்திரிக்கு எதிராக முறைப்பாடு

முல்லைத்தீவு, ஒக். 6
அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா மீறிவிட்டார். இது தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்திடம் நாம் முறைப்பாடு செய்வோம். அது மட்டுமல்லாது, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கொழும்பிலும் போராட்டம் நடத்துவோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா >> 23

## தேசிய ரீதியில் தமிழ் மாணவர்கள் சாதனை

இரண்டாம், மூன்றாம் இடங்களை வடக்கு மாணவர்கள் கைப்பற்றினர்



நவாஸ்கரன் நதி மகேந்திரன் திகழ்ஒளிபவன் பாலகுமார் ஹரித்திக்ஹனுசுஜா

கொழும்பு, ஒக். 6
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் தமிழ் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். முதல் நான்கு இடங்களுக்குள் 10 தமிழ் பேசும் மாணவர்கள் இடம்பிடித்துள்ளனர். அத்துடன், தேசிய ரீதியில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை தமிழ் மாணவர்கள் பிடித்துள்ளனர்.
தேசிய ரீதியில் முதலாம் இடத்தை 199 புள்ளிகளைப் பெற்று பிலியந்தல சோமவீர சந்ரசிறி வித்தியாலயத்தைச் சேர்ந்த புமித் மெத்துனுல் விதான >> 23

## 6 வாள்களுடன் அறுவர் யாழ். நகரில் அட்டகாசம்

*3 இடங்களில் வாள்வெட்டுக்கள் பொது மக்கள் கடும் விசனம்*

யாழ்ப்பாணம். ஒக்.6
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று இரவு 3 இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அதனால் நகரப் >> 23



## பொலிஸார் ஐவர் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய உதவிப் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 பேர் நேற்று அதிரடியாக பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாண >> 23

## மாவட்ட ரீதியில் முன்னிலை பெற்றோர்



க.தேனுசன் துச்சாதனா ரி.திருக்குமரன்

யாழ்ப்பாணம், ஒக். 6
கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுக் காலை வெளியாகின. வடக்கு மாகாண மாணவர்கள் தேசிய ரீதியில் முன்னிலை பெற்றுள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில், 198 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணம் >> 24

# களவேலைகளுக்கு இடமளிக்காத செயற்பாடுகள் தொழிற் சங்கப் போராட்டத்துக்கே வழிவகுக்கும்

## சமுர்த்தி மாநாட்டில் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஒக் 6

அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தால் ஏற்கனவே மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கையின் படி சமுர்த்திப் பணியாளர்களின் கள வேலைகளுக்கு நாள்களை வழங்கும் படியாக பிரதேச செயலர்களின் நடவடிக்கைகள் அமையாது விடின் பாரிய தொழிற் சங்கப் போராட்ட நடவடிக்கைக்கு வழி வகுக்கும் என்று நேற்றைய சமுர்த்தி மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்குமாகாணத்தில்சமுர்த்திஅலுவலர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள்தொடர்பில் ஆராயும் மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. அகில இலங்கைசமுர்த்திஅலுவலர்சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் சமுர்த்தி அலுவலர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், ஓய்வூதியம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்தின் இடமாற்றல் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன. இந்த மாநாட்டிலே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

சமுர்த்திப்பணியாளர்களைஅவர்களின் கள வேலை நாள்களைக் கருத்தில் கொண்டுகடமையாற்றபிரதேசசெயலர்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். யாழ்ப்பாணமாவட்டத்தில்தான் பிரதேச செயலகங்களில் அடிக்கடி கூட்டங்களுக்குபணியாளர்கள்செல்லும்நிலைஏற்படுகிறது. இதனால் அவர்களின் பணிகள் பாதிப்படைகிறது. மாதம் ஒரு நாளில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்துக்கு பிரதேசசெயலத்துக்கு செல்லுதல், வியாழக்கிழமைகளில் பிரதேச வங்கியில் கடமையில் ஈடுபடுதல் . திங்கள் கிழமை பிரிவில் உள்ள அலுவலகத்தில் கடமையாற்றல் ஏனைய நாள்களில் கள பணிகளில்ஈடுபடுதல். இதுவேஅரசின்சுற்றறிக்கையில் சமுர்த்தி உத்தியோத்தர்களின் கடமைப் பட்டியலாக உள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள பணியாளர்களது நிலை அவ்வாறு இல்லை. அநேகம் புதன்கிழமைகளில்பிரதேசசெயலகங்களில் கூட்டங்கள் நடைபெறும். அடிக்கடி இவ்வாறுகூட்டங்கள்நடைபெறுவதால் உத்தியோகத்தர்கள்அவர்களதுகடமைகளைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதுதொடர்பில் தாய்ச் சங்கத்தின் ஊடாக பணிப்பாளர்நாயகத்தின்சுற்றிக்கையின்பிராகாரம்யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இரண்டு வாரத்துக்குமுன்னர்கடிதங்கள்அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதன் படி சமுர்த்திப் பணியாளர்களை பணியாற்ற பிரதேச செயலர்கள் ஒத்துழைக்க வேண்டும். இல்லையெனில்இதுபாரியதொழிற்சங்கப்போராடத்துக்கு வழிவகிக்கும்என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வு தொடர்ச்சியாக இன்று சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. நேற்றைய நிகழ்வில் அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கம் மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சித்சிறி கமகே. முதன்மைச் செயலாளர் எஸ்.எ.டி ஜெகத்குமார ஆகியோருடன்.சமுர்த்திப்பணியார்கள்பலர் கலந்துகொண்டனர். (21.7)

# சமூகத்தைக் கட்டமைக்கும் சிற்பிகளுக்கு வாழ்த்துக்கள்

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.6

உலகஆசிரியர்தினத்தைக் கொண்டாடும் அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். உலகத்துக்கு உயிரைக் கொடுக்கும் சூரியனைப் போன்று மாணவச் செல்வங்களின் உள்ளத்து அறியாமை என்னும் இருளை அகற்றி அவர்களை நல்வழிப்படுத்துகின்ற நற்பணியை நாள்தோறும் சளைக்காமலும் களைக்காமலும் செய்யும்ஆசிரியர்கள்உயர்ந்த இடத்தில்வைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

பன்னாட்டு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அறிவீனத்தை இல்லாதுதொழித்து தனி மனிதனைத் தரணியிலே தலைநிமிர வைப்பதே ஆசிரியர்களின் தலையாய கடமை. ஒரு சமூகத்தின் வளர்ச்சியையும்நாகரிகத்தின்முன்னேற்றத்தையும்தீர்மானிக்கும்முதற்காரணியாகக்கல்வியே அமைகின்றது. உலகில் காணப்படும் அனைத்துத் தொழில்களிலும் மேலான ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு தொழிலாக ஆசிரியத் தொழில் காணப்படுவதாலேயே ஆசிரியர்கள் தெய்வத்துக்கு அடுத்தபடியாக வைத்து நோக்கப்படுகின்றனர்

பெற்றோர்உலகுக்கு குழந்தையை வழங்குகின்றனர். ஆசிரியர் அந்தக்குழந்தையை நற்பிரஜையாக்கிஉலகுக்குவழங்குகிறார். "நான்உயிருடன் இருப்பதற்குஎன்தந்தைக்குகடமைப்பட்டிருக்கின்றேன், ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கின்றேன் ." என்றுகூறியஅலெக்சாண்டரின்கருத்தும்நோக்கத்தக்கதாகும். சமூகக்கட்டமைப்பைஉருவாக்கும் நவீன சிற்பிகளான நல்லாசிரியர்களை வாழ்த்தி அவர்கள் பணி சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். என்றுள்ளது. (ற)

# தரம் 5 புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளி வெளியீடு

| மாவட்டங்கள் | சி. மொழி மூலம் | த. மொழி மூலம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | | 164 |
| கிளிநொச்சி | | 163 |
| மன்னார் | | 162 |
| வவுனியா | 158 | 164 |
| முல்லைத்தீவு | 158 | 164 |
| மட்டக்களப்பு | | 164 |
| அம்பாறை | 164 | 163 |
| திருகோணமலை | 163 | 162 |
| கொழும்பு | 168 | 165 |
| கம்பஹா | 168 | 165 |
| களுத்துறை | 168 | 165 |
| கண்டி | 168 | 165 |
| மாத்தளை | 168 | 165 |
| நுவரெலியா | 163 | 162 |
| காலி | 168 | 165 |
| மாத்தறை | 168 | 165 |
| ஹம்பாந்தோட்டை | 166 | 160 |
| குருணாகல் | 168 | 165 |
| புத்தளம் | 165 | 162 |
| அநுராதபுரம் | 165 | 162 |
| பொலன்னறுவை | 165 | 162 |
| பதுளை | 165 | 163 |
| மொனராகலை | 165 | 162 |
| இரத்தினபுரி | 166 | 162 |
| காலி | 168 | 165 |

# புலம்பெயர் தமிழர்களின் அழைப்பில் வடக்கு ஆளுநர் வெளிநாடு பயணம்

யாழ்ப்பாணம், ஒக். 6

வடக்குமாகாணஆளுநர்ரெஜினோல்ட்குரே மற்றும்அவரதுசெயலர்இளங்கோவன்இருவரும்புலம்பெயர்தமிழர்களின்அழைப்பில் 5நாடுகளுக்குப்பயணம்மேற்கொண்டுள்ளனர்.

புலம்பெயர்ந்துவசிக்கும்தமிழ்இளைஞர்கள் ஆளுநரைத் தொடர்பு கொண்டு நேரில் வருகைதந்து வடக்கில் முன்னெடுக்கக் கூடிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கோரிக்கைவிடுத்தனர். போருக்குப்பின்னர் வடக்கு மாகாணத்தில் பெரிய அபிவிருத்திகளைவடக்குமாகாணசபைமுன்னெடுக்கும் எனவும்எதிர்பார்க்கப்பட்டநிலையில்வடக்கு மாகாண முதலமைச்சர் அந்தப் பணியை தவற விட்ட காரணத்தினால் மேற்படி திட்டங்களை ஆளுநர் ஊடாக முன்னெடுக்க விரும்புவதாக கடந்த மாதம் ஓர் குழுவினர் நேரில் வருகை தந்து ஆளுநரிடம் தெரிவித்திருந்தனர்.

இதற்கு அமைவாக புலம்பெயர் நாட்டவர்களை நேரில் சந்தித்து வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கக்கூடிய முதலீட்டுத்திட்டங்கள், மக்களிற்கு உடனடியாக நன்மை பயக்கக் கூடிய திட்டங்கள் அவற்றை முன்னெடுப்பதற்குரிய ஒழுங்குகள் தொடர்பில் ஆளுநர் இந்தப் பயணத்தில் ஆராயவுள்ளார்.

லண்டன்நோக்கிநேற்றுப்பயணமான ஆளுநர், எதிர்வரும் 18 ஆம் திகதியே நாடு திரும்பவுள்ளார். மேற்படி பயணம் கடந்த வாரம் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும்இவர்களிற்கானநுழைவுவிசைவு பெறுவதில் தாமதம் ஏற்பட்டதாலேயே, நேற்றுப் பயணத்தை ஆரம்பித்தனர்.

வடக்குமாகாணசபையில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில், மாகாணசபையின் பதவிக் காலம் முடிந்த பின்னர் ஆளுநர் கொழும்புஅரசின்விருப்புக்கேற்பஇங்குஅரசியலைமுன்னெடுக்கவுள்ளதாகசபைஉறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5.105)

# குருப்பெயர்ச்சி வழிபாட்டில் நாமல் ராஜபக்சவும் பங்கேற்பு



கொழும்பு, ஒக். 06

குருபகவான்நேற்றுமுன்தினம்துலாம்ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு மாறும் நிகழ்வை உலகளாவிய ரீதியில் உள்ள இந்துக்கள் குரு பெயர்ச்சியாக வழிபட்டார்கள். இதை முன்னிட்டு இந்து ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

குரு மாறும் போது ஒவ்வொரு ராசிக்குமான பலன்களும் மாறுபடும். சிலருக்கு நன்மை பயக்கும், சிலராசிக்காரர்களுக்கு மத்திமம் மற்றும் தீய பலன்கள் கிடைக்கும். இதற்கானபரிகாரங்களை செய்வதற்குஅனைவரும் ஆலயங்களுக்குச் செல்வார்கள்.

இலங்கையிலும் பலரும் ஆலயங்களை நோக்கி படையெடுத்ததைகாணக் கூடியதாக இருந்தது. இந்துக்கள் மட்டுமல்லாது ஏனைய மதத்தவர்களும் ஆலயங்களுக்கு வந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வெள்ளவத்தையில் உள்ள மயூராபதி அம்மன் ஆலயத்தில் குரு பகவானுக்கு நடைபெற்ற மாலை நேர வழிபாடுகளில் நாமல் ராஜபக்சகலந்து கொண்டுள்ளார். (5)

## முதியோரை மதிப்புறுத்தல்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப்பேரவை நடத்தும் முதியோரை மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிஆசிரியர் அ.குமாரவேல்தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில்அருளுரையை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப்பரமாச்சாரியார்சுவாமிகள் வழங்கவுள்ளார். ஆசியுரையை பேரவை போசகர்களானவல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தலைமைக்குருசிவஸ்ரீசோமஸ்கந்ததண்டபாணிக தேசிகர் சுவாமிகள், சிவன் கோவில்தலைமைக்குரு பிரம்ம ஸ்ரீ.ப.மனோகரக் குருக்கள்ஆகியோர்வழங்கவுள்ளனர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகர முதலவர் இம்மனுவல் ஆனோல்ட் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர ஆணையாளர் இ.தஜெயசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறிஆகியோர்கலந்து கொள்வார்கள். (ம-173)

## சிறுவர்தின நிகழ்வு

நாவற்குழிக்குடும்பமுன்பள்ளி களின் சிறுவர் தின நிகழ்வுகள்இன்றுசனிக்கிழமை சகலகலாவல்லி வித்தியாலய தலைமை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-9.159)



அம்பாறை கஞ்சிகுடிச்சாறு

## மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுத் துப்புரவுப்பணி

அம்பாறை, ஒக். 6
அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத் துக்கான சிரமதானப்பணி மாவீரர் குடும்பப் பெற்றோர்களால் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டது.

இந்தப் பணியானது அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்ல மீள் நிர்மாணிப்பு குழுவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோர்கள் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்க உறுப்பினர்கள் மக்கள் நலன் காப்பகத்தின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவீரர் குடும்பத்தின் பெற்றோர்கள், இன்று நாம் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்கின்றோம். அந்தவகையில் கடந்த வருடம் ஓரளவேனும் கார்த்திகை 27 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வை நடத்தி முடித்திருந்தோம். அதன்பிரகாரம் எதிர்வரும் கார்த்திகை 27 ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் மிகச்சிறப்பாக நினைவுகூருவதற்குச் சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்யவுள்ளோம்.

கடந்த காலங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் புலம்பெயர் தேசத்தில் மாத்திரமே நினைவு கூரப்பட்டது. ஆனால் சென்ற வருடத்திலிருந்து வடக்கு கிழக்கிலும் நினைவு கூரும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் புலம்பெயர் தேசத்தில் உள்ள எமது உறவுகள் அனைவரும் ஆதரவு வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம் என்று கருத்துத் தெரிவித்தனர்.

மாவீரர் நினைவு நாளை நடத்தக் கூடாது என்று இராணுவத் தளபதி அண்மையில் கூறியிருந்த நிலையில் நேற்றுத் துப்புரவு இடம்பெற்றது. (4)

# அரச போக்குவரத்துச் சபையினர் இணையப் பதிவை ஆரம்பித்தனர்

இருந்த இடத்திலிருந்து இனிப் பதியலாம்

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையத்தில் இருந்து வெளிமாவட்டத்துக்கான பயணத்தை மேற்கொள்பவர்கள் ஆசன முற்பதிவை இணையத்தின் மூலமாக மேற்கொள்ளக்கூடிய நடைமுறை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இலங்கைப் போக்குவத்துச் சபைக்குச் சொந்தமான அரச பேருந்துகளில் வெளிமாவட்டத்துக்குப் பயணம் செய்பவர்கள் இந்த ஆசனப் பதிவை மேற்கொள்ள முடியும். சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.

அரச பேருந்தில் பயணிக்க வேண்டுமாயின் பேருந்து நிலையத்தில் நடத்துநரிடம் பற்றுச் சீட்டைப் பணம் கொடுத்துப் பெற்றுகொண்ட பின்னர் பயணிக்கும் நடைமுறை இதுவரை காலமும் இருந்தது. நேற்று அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இணையம் மூலமான ஆசன பதிவு மூலம் நாம் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு ஆசன முற்பதிவை மேற்கோள் முடியும். SLTB EXPRESS என்ற செயலியில், sltb.express.lk என்ற இணையத்தளத்தில் நீங்கள் பயணிக்க வேண்டிய இடம், பேருந்து புறப்படும் காலம், இருக்கையின் இலக்கம் என்பனவற்றை அறிந்து முற்பதிவு செய்ய முடியும். முற்பதிவு செய்யதவுடன் அதற்கான அனுமதி குறுஞ் செய்தி ஊடாக அலைபேசிக்குக் கிடைக்கும். கடன் அட்டை மூலமாகவும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். இணைய வசதி இல்லாதவர்கள் நேரடியாக யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையத் துக்குச் சென்று அலுவலகத்தில் முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(4,7)

## குருந்தூர் ஆதிசிவனுக்கும், ஐயனாருக்கும் பொங்கல் வழிபாடு



முல்லைத்தீவு, ஒக 6
முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் ஆதிசிவனுக்கும், ஐயனாருக்கும் பொங்கல் வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. குமுழமுனைப் பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடி இந்த பொங்கல் பொங்கி, பூசை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வழிபாடுகளில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்து கொண்டார்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட

## கமநல சேவைகள் நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

வவுனியா. ஒக். 6
இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பம்பைமடு கமநல சேவைகள் நிலையத்தை கொழும்பு விவசாய் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்றுத் திறந்து வைத்தார்.

கடந்த 22 வருடங்களாக இராணுவ முகாமாகக் காணப்பட்ட குறித்த கமநலசேவை நிலையம் கடந்த வருடம் விடுவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சீரமைப்புச் செய்யப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்



பிரதி விவசாய அமைச்சர் இ.அங்கஜன் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா, கமநல சேவை ஆணையாளர், கமநல சேவை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (4,110)

## பண்டாரவன்னியன், கைலாய வன்னியன் பகுதி வீட்டுத் திட்டங்களை அமைச்சர் சஜித் திறந்தார்

முல்லைத்தீவு, ஒக். 6
முல்லைத்தீவில் பண்டாரவன்னியன் கைலாய வன்னியன் மாதிரி வீட்டுக் கிராமங்களை அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்றுத் திறந்துவைத்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் இவை அமைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் கே.கமகே தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபைப் பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கருணாதாஸ் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் தவிசாளர்கள் கலந்துகொண்டனர்.

மாந்தை கிழக்கு வடகாட்டுப்பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபை அமைத்த பண்டாரவன்னியன் மாதிரி வீட்டுத்திட்டத்தில் 30 பயனாளிகளுக்கான வீடுகளும் கைலாய வன்னியன் வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட 25 பயனாளிகளுக்கான வீடுகளையும் அமைச்சர் சஜித் பிரோமதாச திறந்து வைத்து மக்களிடம் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது முல்லைத்தீவு மாவட்





டத்தைச் சேர்ந்த 350 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் 300 பேருக்கு வட்டியில்லாக் கடனும் வழங்கி வைத்துள்ளார்.

நிகழ்வில் வரவேற்புரையை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர் உரையை வடக்கு மாகாணப் பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், ஐக்கியதேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் கருணாதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை முதன்மை விருந்தினர் அமைச்சர் சஜித் பிரேமதாச நிகழ்த்தியுள்ளார். (4,ரி3)

## முல்லை மாவட்டச் செயலக கிணற்றிலும் தண்ணீர் இல்லை

முல்லைத்தீவு, ஒக். 6
நாட்டில் நிலவிய கடும் வறட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகக் கிணற்றில் தண்ணீர் வற்றியுள்ளது. அதனால் அங்கும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போது வேறு இடங்களில் இருந்தே பவுசர் மூலமாகத் தண்ணீர் விநியோகம் இடம்பெற்றுவருகின்றது.



அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களிலும் குடிதண்ணீர்ப் பிரச்சினை காணப்படுகிறது. பல குளங்களில் தண்ணீர் வற்றியுள்ளது. அதனால் பெரும் சிக்கல் நிலை எழுந்துள்ளது. இந்த நிலையில் சில இடங்களில் இரு தினங்களாக மழை பெய்துவருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(4)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 6

திக்கம்மத்தியசனசமூகநிலையத்தால்திக்கம்பாடசாலை மாணவர்களுகான செயற்படுவோம் மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வானது இன்று நடைபெறவுள்ளது.

திக்கம்சுறோம்படிஆலயமுன்றலில்திக்கம்மத்திய சனசமூக நிலையத்தின் உப தலைவர் க.சுதேஸ் தலைமையில்நண்பகல்1.30மணியளவில்இந்த நிகழ்வுகள்நடைபெறவுள்ளன. முதன்மைவிருந்தினராகபருத்தித்துறைபிரதேசசபையின்உபதவிசாளர் கு.தினேஸ், சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி பிரதிகல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா, மதிப்புறு விருந்தினராக திக்கம் பாடசாலையின்முன்னாள்ஆசிரியாகளானந.இந்திராதேவி, வ.சிவஞானம்மா, க.கமலவேணி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

# ஆசிரியர்தின கொண்டாட்டம்

பொற்பதி மக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் இணைந்து நடத்தும் ஆசிரியர் தினக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் யாழ்ப்பாணம் குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் கலையரங்கில் இன்று காலை 10 மணிமுதல் இடம்பெறவுள்ளது. (ம-70)

# நூல்களின் காட்சிப்படுத்தலும் விற்பனையும்

கொக்குவில்பொதுநூலகத்தின்ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் வாசிப்பு மாத்தினை முன்னிட்டு உள்ளூர் எழுத்தாளர்களின்படைப்புக்களைக்காட்சிப்படுத்தலும்விற்பனையும்இன்றுசனிக்கிழமைதொடக்கம்8ஆம்திகதிதிங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. உள்ளூர் படைப்பாளர்கள் தமது நூல்களைக் காலை 9.30 மணி முதல் காட்சிப்படுத்த முடியும். மாலை 3.30 மணிக்கு எழுத்தாளர்களின் சங்கமம் என்றநிகழ்வுஇடம்பெறும். இதில்எழுத்தாளர்களுடன் கலந்துரையாடலும் மதிப்பளிப்பும் இடம்பெறும். (ம-7)

# பெண்ணின்துணிகரத்தால் திருட்டு முயற்சி முறியடிப்பு

கொழும்புத்துறை, ஒக். 6

பெண்ணின் துணிகரமான எதிர்த்தாக்குதலால் திருட்டு முயற்சியொன்று யாழ்ப்பாணம் சுண்டிக்குழிப் பகுதியில் முறியடிக்கப்பட்டது.

"கடந்த புதன்கிழமை மாலை அலுவலகப் பணி முடிந்து துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளம் பெண்ணை உந்துருளியில் வந்த இருவர்தாக்கி விட்டுசங்கிலியை அறுப்பதற்குமுயன்றுள்ளனர். எனினும்தன்னைச்சுதாகரித்துக்கொண்ட பெண், நடத்தியஎதிர்த்தாக்குதலை அடுத்து அவர்கள் இருவரும் தப்பித்துச் சென்றுள்ளனர். எனினும் சங்கிலியில் இருந்த பதக்கம் காணாமல் போயுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-135)

## வாகன...

மங்கள சமரவீரவுக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஏனைய மாகாண முதலமைச்சர்களை விட குறைந்த பெறுமதியிலான வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய மாகாண முதலமைச்சர்களுக்கு வழங்கப்படும் அதே அளவு பெறுமதியான வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கோரியிருந்தார். இந்தக் கோரிக்கை அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டபோதும், அரசின் தீர்மானத்துக்கு அமைவாக தற்போது தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் வழங்க முடியாது என்று தெரிவித்து அமைச்சரவை அதனை நிராகரித்திருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சு நேற்று ஊடக அறிக்கை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

**25ஆயிரம் அமெரிக்க டொலர் வெட்டு**

இரண்டரை வருடங்கள் பூர்த்தி செய்த வடமாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகன அனுமதிப் பத்திரங்களினூடாக 40 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு குறைவான வாகனமொன்றை தீர்வை நீக்கி இறக்குமதி செய்துபயன்படுத்த முடியும். முதலமைச்சர் என்ற வகையில் நான் கூடுதல் பெறுமதியுடைய 65 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகனமொன்றை பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையவனாக இருந்த போதும் எனக்கும் 40 ஆயிரம் அமெரிக்க டொலருக்குக் குறைவான அனுமதிப்பத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மற்றைய உறுப்பினர்களைப் போன்று எனக்கு இந்த அனுமதிப்பத்திரம் தரப்பட்டிருந்தது.

அதன் பின் தற்செயலாகவே முதலமைச்சருக்கு வழங்கப்பட வேண்டிய வாகனம் 65 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய அனுமதிப்பத்திரமே என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே முன்னைய குறைந்த பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரத்தை இல்லாமல் செய்து எனது பதவிக்கு உரித்தான 65 ஆயிரம் அமெரிக்கடொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய அனுமதிப் பத்திரத்தை வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். நாட்டின் மற்றைய முதலமைச்சர்கள் யாவருக்கும் இந்தக் கூடியபெறுமதி வாய்ந்த வாகன அனுமதிப்பத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

**மகனிடம் பணம் வாங்கவிருந்தேன்**

அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க குறைந்த பெறுமதி வாகனத்துக்காக எனக்குத் தரப்பட்ட அனுமதிப்பத்திரம் அவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு அது இல்லாமல் செய்யப்பட்டது. எனக்கு கூடிய பெறுமதியுடைய வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்றும் இது சம்பந்தமாக தவறு நேர்ந்திருந்தமையும் அமைச்சால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்தத் தவறைத் திருத்த அமைச்சர்கள் குழாம் முன் அனுமதி பெற வேண்டியிருந்ததால் அதனைப் பெற்றுத் தருவதாக அமைச்சினால் கூறப்பட்டது. 40 ஆயிரமோ, 65 ஆயிரமோ அனுமதிப் பத்திரமானது இறக்குமதித் தீர்வைமட்டுந்தான் நீக்கியது. வாகனமானது குறித்த பணத்தைச் செலுத்தியே இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. அதற்கான பணத்தை நான் என் மகனிடம் இருந்துபெற இருந்தேன்.

ஆனாலும் அமைச்சு அலுவலகங்களில் எனது அனுமதிப் பத்திரம் தொடர்பான கோரிக்கை பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டு கடந்த வாரமே அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**எனது உரித்து**

அதே காலகட்டத்தில் இந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகனங்களை இறக்குமதி செய்வது ஒரு வருடகாலத்துக்கு அரசினால் பிற்போடப்பட்டிருந்தது. எனவே அமைச்சர் பைசர் முஸ்தாபா குறித்த அனுமதிப்பத்திரத்திற்கு வடமாகாணசபை முதலமைச்சர் உரித்துடையவர் என்பதை அமைச்சரவைக்குக் கூறி அனுமதி பெறவிழைந்தபோது மங்கள சமரவீர இறக்குமதி பிற்போடப்பட்டுள்ளதால் அனுமதிப் பத்திரம் வழங்கலாகாது என்று கூறியதால் அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தை வழங்குவதைத் தடைசெய்ததாகக் கேள்விப்படுகின்றேன்.

வடமாகாண முதலமைச்சரின் உரித்துவேறு. அதை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் வேறு என்பதை மங்களச மரவீர சரியாகப் புரியாது விட்;டுள்ளார் என்றே தோன்றியது. அதனால் அவருக்கு உடனே கடிதம் எழுதி அனுமதிப்பத்திரம் எனக்கு வழங்க வேண்டியது சட்டப்படி எனது உரித்து என்றும் ஆனால் அதனை ஒரு வருடத்துக்கு நடைமுறைப்படுத்தாது வைத்திருப்பது எனது கடமை என்றும் கூறி அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறுகேட்டுள்ளேன்.

**தவறான வியாக்கியானம்**

மற்றைய உறுப்பினர்களுக்கு அவர்களுக்குரிய குறைந்த தொகையிலான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அவர்கள் ஏற்கனவே நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார்கள் என்று அறிகின்றேன். என்னுடைய குறைந்த பெறுமதி வாகன அனுமதிப் பத்திரமோ அமைச்சினால் திரும்பப் பெற்று அது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல் செய்தமைக்குக் காரணம் அமைச்சரவை, கூடிய பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரத்தைக் கட்டாயம் வழங்கும் என்ற அவர்களின் திடமான நம்பிக்கையே. தற்போது கூடிய பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரமும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனை சில கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் சரியாகப் பிரசுரித்தபோதும் ஆங்கிலப் பத்திரிகைகளும் தமிழ்ப் பத்திரிகைகளும் தங்கள் தங்கள் கைவண்ணங்களையும் இந்த அறிக்கையுடன் சேர்த்துப் புதிய கோணத்தில் நான் ஏதோ வரிச்சலுகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்திற்காக ஏங்கித் தவிப்பதாகவும் அது கிடைக்காததால் நான் குழப்பத்தில் உள்ளதாகவும் வர்ணனை செய்திருப்பது வருத்தத்திற்குரியது. அவ்வாறு வரிச்சலுகை அனுமதிப் பத்திரத்தின் மீது அவ்வளவு ஈடுபாடுடையவனாக நான் இருந்திருப்பின் கிடைத்த அந்த அனுமதிப் பத்திரம் கைவசம் வந்தவுடனேயே அதனைப் பயன்படுத்தியிருப்பேன். அல்லது உயர் பெறுமதியுடைய புதிய அனுமதிப் பத்திரத்திற்காகஉடனேயே விண்ணப்பித்திருப்பேன். தமது தவறைஏற்றுஅமைச்சுஅதனைசீர்செய்யமுன்வந்ததால்த்தான் நான் இதுகாறும் வாளாதிருந்தேன்.

**அமைச்சர்களுக்குப் புரியவில்லை**

எனினும் கடைசியாக அமைச்சர் சபைக்கு மேற்படிவிடயம் வந்தபோது பாஸ்கரலிங்கத்திடம், அனுமதிப்பத்திரம் பெறுவதுஎனது உரித்து என்றும் தடையை நடைமுறைப்படுத்துவது எனது கடமை என்றும் கூறியிருந்தேன். அதற்கு அவர் அமைச்சர்களுக்கு அது தெரியுந்தானே என்றார். அதனால் நான் நிம்மதியாக இருந்தேன். ஆனால் அமைச்சர்களுக்கு அது புரியவில்லை என்று இப்பொழுதுதான் அறிந்துகொண்டேன்.

அரசியல் ரீதியாக என் மீது ஏதாவது கோபங்களிருப்பின் எனது அரசியல் பற்றி நேரடியாக எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் விமர்சிக்க வேண்டும். அதனைவிடுத்து இது போன்ற அற்பத்தனமான செய்திகளைப் பிரசுரித்து உங்கள் பத்திரிகையின் மதிப்பையும் பத்திரிகைத் தர்மத்தையும் குறைத்துக் கொள்ளாதீர்கள் என்று குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகளிடமும் ஆங்கிலப் பத்திரிகைகளிடமும் அன்புடன் வேண்டுகின்றேன்.

**அரசியல் சூழ்ச்சியோ**

அமைச்சர் மகிந்த சமரசிங்க வடமாகாண சபை முடியுங் காலத்தில் விக்னேஸ்வரனுக்கு வாகனம் ஏன் என்று கேட்டிருப்பதாக இன்று பத்திரிகையில் வாசித்தேன்.

அவர் அவர்களின் பதவிக்கேற்றவாறு குறிப்பிட்ட காலம் பதவியில் இருந்தவர்களுக்கே தீர்வை நீக்கிய வாகனங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. மற்றவர்கள் போல் எனக்கிருக்கும் உரித்தைநான் கேட்டேனே ஒளிய சிறப்பாக எந்த ஒரு சலுகையையும் நான் கேட்கவில்லை. மூத்த அமைச்சரான அவரும் என் நண்பர் அமைச்சர் ராஜிதசேனரத்தினவும் என்னை உண்மைக்குப் புறம்பாக விமர்சிப்பதைப் பார்த்தால் எனக்கு அனுமதிப்பத்திரம் வழங்காமைக்குப் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருந்துள்ளனவோ என்று எண்ணவேண்டியுள்ளது. பொதுவாகத் தமிழ்த் தலைவர்களைத் தமது வழிக்குக் கொண்டுவரும் யுக்திகளில் ஒன்றை அவர்கள் பாவித்திருக்கின்றார்களோ என்று எண்ணவேண்டியுள்ளது. உரித்துக்கும் சலுகைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக அவர்கள் இருக்க முடியாது என்பது எனது அனுமானம் என்றுள்ளது. (5)

## தூபி...

அடிக்கல் நடும் நிகழ்வு ஆரம்பமானது. சமயக் கிரியைகள் நடத்தப்பட்டு அடிக்கல் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன், வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் கருணானந்தன், நகர சபை உறுப்பினர்கள், ஜனநாயக மக்கள் போராளிகள் கட்சியைச் சேர்ந்த வேந்தன் உட்படப் பலர் நிகழ்வுக்கு வந்திருந்தனர்.

குமரப்பா, புலேந்திரனுடன் உயிரிழந்த 12 போராளிகளில் ஒருவரின் தாய் ஒருவரும், சகோதரி ஒருவரும் அடிக்கல்லை நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**எதிர்ப்பு**

அப்போது திடீரென சுமார் 15 பேர் பதாகைகளுடன் அந்த இடத்துக்கு வந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வல்வெட்டித்துறை நகர சபையைச் சேர்ந்த சுயேட்சை உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரும் வேறு சிலருமே எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

"மக்களை ஏமாற்றதே", "தியாகிகளின் நினைவு நாளில் துரோகிகளுக்கு அடிக்கல் நாட்டாதே", "வரலாற்றை மாற்றாதே", "மாவீரர்களைக் கொஞ்சைப்படுத்தாதே தேச விரோதிகளுக்கு மகுடம் சூட்டாதே" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

நினைவுத் தூபி குமரப்பா, புலேந்திரனுக்கு அமைக்கப்படவில்லை. மாற்று இயக்கத்தினருக்கே தூபி அமைக்கப்படுகின்றது என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

40 லட்சம் ரூபா செலவில் குமரப்பா, புலேந்திரனுக்கே நினைவுத் தூபி அமைக்கப்படுகின்றது என்றும் அதை எந்த இடத்தில் தெரிவிக்கத் தயார் என்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூறினார்.

அதை ஏற்க மறுத்த எதிர்ப்பாளர்கள் சமயக் கிரியைகளில் ஈடுபட்டிருந்த மதகுருவை அங்கிருந்து அகற்றினர். அங்கு வைக்கப்பட்டிருந்த நிறைகுடத்தை எடுத்து அடிக்கல் நடுவதற்காகத் தோண்டப்பட்டிருந்த குழிக்குள் ஊற்றினர். தமது பதாகையும் குழிக்குள் வீசி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இவை நடந்து கொண்டிருந்த நேரத்தில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அந்த இடத்துக்கு அழைப்பாணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

**அழைப்பாணை**

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளருக்கான அந்த அழைப்பாணையை தவிசாளாரிடம் கொடுக்கப் பொலிஸார் முயன்றபோது, அவர் அதை வாங்க மறுத்தார். தனது அலுலகத்துக்குக் கொண்டு வந்து தந்தாலே அதை வாங்க முடியும் என்று தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை, தீருவில் விளையாட்டு மைதானத்தில், உயிரிழந்த எல்ரீரீஈ உறுப்பினர்களை நினைவூட்டும் வகையில் அமைக்கப்படும் நினைவுத் தூபி தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக 05.10.2018 ஆம் திகதி மதியம் 12 மணிக்கு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு இத்தால் பணிக்கப்படுகின்றது என்று தவிசாளர் கருணானந்தராசாவின் பெயரிட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

பொலிஸாரின் நடவடிக்கையை அடுத்து அந்த இடத்தில் இருந்து அனைவரும் வெளியேறினர். அந்த இடத்துக்குப் பொலிஸ் காவல் போடப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளருக்கான அழைப்பாணையைப் பொலிஸார் அவரது அலுவலகத்தில் வைத்து கையளித்தனர்.

வல்வெட்டித்துறை நகர சபை அமர்வில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளின் நினைவாகத் தூபி அமைப்பது என்றும், அதன்பின்னர் அதற்குச் சமாந்தரமாகப் போரில் இறந்த 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும், 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் மற்றும் போராளிகள் அனைவருக்கும் இன்னுமொரு தூபி அமைப்பது என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தூபியை அமைப்பதற்காக வடக்கு மாகாண உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தார். (ற-26)

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 6

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுக் காலை வெளியாகின. பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைத்துள்ளனர். நேற்று மாலை வரையில் கிடைக்கப் பெற்ற யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை**

நுவாஸ்கன் நதி 198, சுரேசன் அஸ்வினியா - 190, ஶ்ரீமோகன் தஜ்வின் - 186, பாஸ்கரன் யேபவன் 186, காஞ்சீவன் கதுரிகா - 175, ஜெயரட்ணா ரகுராம் - 184, மகேந்திரன் சுஜானிகா - 182, ரவிச்சந்திரன் லக்சன் - 178, சுஜீகரன் கதிர்வாணன் - 178, அசோகன் அனுக்ஷயா - 178, நந்தகுமார் கார்திகன் - 176, தவராசா மகிசன் 176, சிவநேசன் சிவப்பிரிந்தன் 174, சிவரூபன் சுவேனிக்கா - 173, செவ்வேள் நாவலன் - 171, செந்தூரன் தீபிகா - 171, சிவசோதிலிங்கம் யதுர்சனன் - 170, நிமலராங்கன் ஹரிதர்சன் - 170, திவாகரன் அபிஷன் - 170, ஶ்ரீனாந்தன் கம்சிறிக்கா - 169, பாஸ்கரன் சாருஜன் 168, விமலதாஸ் பிருந்தூபிகா - 168, மஞ்சுரன் துபானிகா - 168, கிருபாகரன் கிருஷான் - 168, விஜயரட்ணம் விஜயகாந் - 168, ரவிச்சந்திரன் மதுசனா - 165, கருணாகரன் ஆஜீசன் 165, சுசிதரன் கீர்த்தனி - 164.

**கைதடி குருசாமி வித்தி.**

உமாகாந்தன் பரிதி - 180, தயானந்தன் திரிசனா - 168

**கைதடி சேதுகாவலர் வித்தி.**

விஜயகுமார் விதுசன் - 167

**கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி.**

கேதீஸ்வரன் லக்சயன் - 188, இளங்குமரன் அக்சயன் - 185, மோகன்தாஸ் பிரகாஸ் - 175.

**துன்னாலை காசிநாதர் வித்தி.**

கெ.பர்விதன் - 185, கி.தர்சன் - 176, க.சபரிசசர்மா - 175, செ.சிறிநிதி - 175, கு.ஜதுசா-170, லி.ஜதுசிகா -168.

**வதிரி திருஇருதயக் கல்லூரி**

கமலதாஸ் விகாஸ் - 170, ரவிச்சந்திரன் லதுசாயினி - 166.

**அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

கருணாகரன் சப்தவி - 190, ஸ்கந்தவேணு ஐஸ்வர்யன் - 185, உதயணன் நாரணி - 185, சந்திரகுமாரன் திஷா - 179, சிரோஸ்குமார் சிறிஸ்ரியா - 177, லோகேஸ்வரசர்மா சங்கவன் - 175, அனற்செல்வி பங்கஜன் - 175, கஜேந்திரன் ஆதித்தன் - 174, அலெக்ஸ் ரவீந்திரன் வினித்தா - 169, திருஞான சம்பந்தன் யதுசன் - 168, ரவீந்திரன் சுருதிகா - 167, ஜித்தியகரன் கஜீவனா - 167, பன்னீர்செல்வன் பரூசிகா - 167, சிவநேசன் சர்வினி - 166, புஸ்பாகரன் பிரபாஸ்ராஜ் - 165 சதீஷ் சுப்ரஜா - 165.

**நெல்லியடி மெ.மி.த.க.பா.**

தவராசா சாய்பிரியன் - 188, கருணாகரன் கவினன் -184, பிரசாத் நித்திலன் - 183, ஊமாகரன் தருண் - 182 செந்தூரன் அக்சரா - 178, ரவீந்திரன் அபரிதா - 177, கமலராஜ் சாயிரா - 177, சிவபாலன் பபீசன் - 176, ஜனார்த்தனன் ஹரிணி - 173, பத்மராஜன் பவிசன் - 173, மோகனதாஸ் கோபிகா - 172, யூட் லேஸ்டர் றோணி அக்சனா - 172, சிவநடராஜா சாருஜன் - 171, திருஞானகரன் நிசிதன் - 170, சுதாகரன் திவ்வியன் - 170, இராசமோகன் சிறி உமேசன்- 170, நிமலராஜன் அக்சயா - 169, அகிலன் தேனமுதன் - 169, பாலவதனன் அக்சயா - 168, சுதேஸ் அக்சயா - 168, தவரூபன் அபிசேக் - 168, கருணாகரன் சாருஜா - 167, பாலமுருகன் ஜெனுர்சயன் -166, பிரதீபன் ஹரிணி - 165, நவீனன் அக்சயன் - 165.

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

இராஜேந்திரன் விஷ்ணுகஜன் - 185, ஜெயதாஸ் சானியா - 181, ஜெகநாதன் மிதுஷன் - 169.

**விடத்தற்பளை கமலாசனி வித்தி.**

ஜெ.தேனுசன் - 184, பு. ஹபிசாந் - 176, சி. கதிர்நிலா - 171, பி.மிதுர்சிகா - 171.

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை**

சி.தசாந்தன் - 176, உ.ஜிலக்சியா - 173, ந.தியானா - 173, ஜெ.கிதுர்சனா - 171, சி.விமுர்த்திகா - 171, பி.தலைக்சனா - 166, செ.ஜெனிஸ்ரன் - 165.

**மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தி.**

கு.சாந்தியன் -192, ம.பவிசன் - 190, உ.வேணுசன் - 189, சு. அபிராம் - 184, த.குவிந்தன் - 183, வெ.ராகவி - 182, சி.பிரணவி -182, யோ.லக்ஸன் - 181, சு.கிரேஸ்லின் சேபா - 178, ச.அனுக்ஷயா - 177, ச.அஸ்மிதா -176, த.அம்புஜன் -176, வி.தமிழினியன் -176, ம.நளாயினி -175, கோ.மிதிலினி -174, உ.உமாசுதன் -173, கு. சனோசன் -169, ஜெ.கவின்ராம் -168, க.விஸ்ணுகோவன் -168, வி.தனுசியா -166, அ.அனோஜ் -164, கி.தீயானன் -164.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

க.கஜாகரன் -188, ம.அபிசயன் -185, கு.கஜானா - 183, கா.கிருசாயினி - 181, ர.குயிந்தன் - 180, ச.கீர்ததிகா - 180, சே.கயூரிக்கா - 180, சு.ஆத்மகாரணி-180, யே.சகிதா - 177, ஆ.அனுதர்சி - 177, து.வினுசா - 176, ஓ.கீகன் - 176 , அ.எழில்வதனன் - 175 , வி.பவித்திரன் - 174 , வை.யனுமி - 174, சி.ஜானுசன் - 173, சி.துசானி - 173, சி.கோகீசன் - 171, சோ.கிசானு - 171, சு.சங்கவி - 171, தி.மபின்சன் - 170, இ.சுபதாசன் - 169, கோ.கருண்யா - 167, மு.சஷ்மிதா- 167, ம.கேமதன் - 166, ச.தமிழின்பன் - 166, டவருஷா - 166, வ.சரண் - 165.

**தெல்லிப்பழை மகாஜனா**

சாருகா சிவனேஸ்வரன்-196, கனிவிழி சுதாஜி-195, விநாயகசீலன் மிதுனாளன்-192, ஐஸ்வர்யா முருகதாஸ்-185, தீர்த்தனா சுரேஸ்-180, வாமதேவன் ரிசபன்-179, டபீனா மதிகுமர்-176, ஜெயசீலன் பிரணவன்-175, சசிகரன் கிரிசாந்-175, நஜிதா கிருஷ்ணரூபன்-171, விதுஷா பிரதீபன்-170, முரளிதரன் டிலக்சன்-170, கஜனா சந்திரலிங்கம்-169, சாரிகா சிவனேஸ்வரன்-169, ததுவர்த்தனி பாலேந்திரன்-169, ஈஸ்வரன் தாசன்-168, ரஸ்மிதா மோகனப்பிரிபன்-165, ராகவி ஜெகதீஸ்வரன்-164.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

ஆ.அதீசன் 185, ஆருத்திரன் 179, ச.டனுசியா - 168, சு.சுஞ்சனா - 168.

**கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை**

தெ.டினோஜா - 183, பு.கம்சாயினி - 180, ற.சலோமியா - 179, நி.அபிசா - 178, ப.சந்தோஷ் 173, சி.மதுசன் 173, பெ.கிசானா - 169, ஜெ.அபினேஸ் 169, சு.சுவர்ணிகா - 169.

(4,422,9,159,173,78)

# வடமராட்சி வலயத்தில் 208 மாணவர்கள் சித்தி

வடமராட்சி, ஒக். 6

வடமராட்சிக் கல்வி வலயத்தில் 208 மாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளனர்.

கரவெட்டிக் கோட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 7 மாணவிகளும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் 8 மாணவர்களும், தேவையராளி இந்துக் கல்லூரியில் ஒருவரும், வதிரி திருஇருதயக் கல்லூரியில் 2 மாணவர்களும், கரணவாய் மகா வித்தியாலயத்தில் இருவரும், கம்பர்மலை வித்தியால யத்தில் ஒருவரும், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஒருவரும், கரணவாய் தாமோதர வித்தியாலயத்தில் 7 மாணவர்களும், கரணவாய் மணியகாரன் அ.த.க. பாடசாலையில் 8 மாணவர்களும், கரணவாய் வேதராணியேஸ்வர வித்தியாலயத்தில் 7 மாணவர்களும், கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையில் ஒருவரும், கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் 14 மாணவர்களும், நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் 25 மாணவர்களும், துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் 7 மாணவர்களும், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் 3 மாணவர்களும், வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையில் 2 மாணவர்களும், கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலையில் 2 மாணவர்களும் சித்தியெய்தினர்.

பருத்தித்துறைக் கோட்டத்தில் வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயத்தில் 5 மாணவர்களும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் ஒருவரும், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் 5 மாணவர்களும், புற்றளை மகா வித்தியாலயத்தில் 8 மாணவர்களும், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 12 மாணவர்களும், பொலிகண்டி இந்துக் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும், வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியால யத்தில் 3 மாணவர்களும், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியா லயத்தில் 3 மாணவர்களும், பருத்தித்துறை கலட்டி சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையில் ஒருவரும், புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் ஒருவரும், கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையில் 2 மாணவர்களும், கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் ஒருவரும், கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இருவரும், புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையில் ஒருவரும், தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலையில் ஒருவரும், வட இந்து ஆரம்பப் பாடசாலையில் 14 மாணவர்களும் சித்தியடைந்தனர்.

மருதங்கேணிக் கோட்டத்தில் அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் இருவரும், ஆளியவளை சி.சி.த.க. பாடசாலையில் இருவரும், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மூவரும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் மூவரும், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் ஒருவரும், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலயில் நால்வரும், செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலையில் ஒருவரும், மாமுனை அ.த.க. பாடசாலையில் இருவரும், உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையில் 14 மாணவர்களும், வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலையில் இருவரும் சித்தியெய்தினர். (ம173,7)

## தூபியைத்...

பொலிஸ் பொறுப்பதிகாரியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் வழக்கில் கட்டளை வழங்குவதற்காக எதிர்வரும் 8ஆம் திகதி வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை, தீருவிலில் இந்திய அமைதிப் படை நிலை கொண்டிருந்தபோது உயிரை மாய்த்துக் கொண்ட 12 போராளிகள் நினைவாக நினைவுத் தூபி அமைக்க வல்வெட்டித்துறை நகர சபை தீர்மானித்திருந்தது.

நேற்றுக் காலை தூபிக்கு அடிக்கல் நடுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அதற்கு எதிராக வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மதியம் பருத்தித்துறை நீதிவான் நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மன்றில் முன்னிலையான வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி குமாரசேன, நினைவுத் தூபி அமைக்கும் நடவடிக்கையானது விடுதலைப் புலிகள் தொடர்பானது. விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட இயக்கம். தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு நினைவுத் தூபி அமைப்பது சட்டவிரோதமானது. தூபி தொடர்பில் நகர சபை உறுப்பினர்களுக்குள் எதிரும், புதிருமான கருத்துக்கள் உள்ளன. வல்வெட்டித்துறை மக்கள் இரு தரப்புகளாகப் பிரிந்துள்ளனர். அதனால் அமைதிச் சீர்குலைவு ஏற்படும், சட்ட ஒழுங்கு பாதிக்கப்படும். அரச நிதியைப் பயன்படுத்தி சட்டவிரோத இயக்கத்தின் உறுப்பினர்களை நினைவுகூர முயற்சிப்பதை சட்ட ரீதியாக அனுமதிக்க முடியாது. தூபி அமைக்கப்பட்டால் அரசுக்கு எதிரான துவேசத்தை உருவாக்கிப் பொதுமக்களை அரசுக்கு எதிராகத் தூண்டி விடும் என்று தெரிவித்தார்.

நகர சபைத் தவிசாளர் சார்பாக சட்டத்தரணிகள் என்.சிறீகாந்தா, என்.சுஜீவன், என். ரஜீவன் ஆகியோர் முன்னிலையாகினர்.

சட்டத்தரணி என்.சிறீகாந்தா மன்றில் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

பொலிஸாரின் விண்ணப்பம் விரோதமானது. சட்ட அடிப்படையற்றது. பருத்தித்துறை நகர சபையில் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தனது பிரதேசத்துக்குட்ட தீருவில் பொதுப் பூங்காவில் தூபியை நிறுவுவதற்குப் பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இதுவரை எவரும் நீதிமன்றை நாடவில்லை.

நினைவுகூரப்படும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் வன்முறைச் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்கள் அல்லர். இந்திய அமைதிப் படை நிலைகொண்டிருந்த காலத்தில் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் தாமாகவே உயிரை மாய்த்துக் கொண்டவர்களாவர்.

இறந்த எவரையும் நினைவுகூர ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. அதைப் போன்று போர்ச் சூழலில் உயிரிழந்த எவரையும் நினைவு கூரவும் உரிமை உண்டு. உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாகி திலீபனுக்கு நினைவுத்தூபி அமைத்து நினைவஞ்சலிகள் நடைபெறுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டபோது யாழ்ப்பாணம் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தியாகி திலீபனின் நினைவுத் தூபிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் அரச நிதியில் அதாவ்து தலைமை அமைச்சர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. அதைப் போன்றே வடக்கு மாகாண சபை உறுப்பினரால் இந்த நினைவுத் தூபிக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு சிலரின் குறுகிய நோக்கத்துக்காக ஒரு சிலநபர்கள் அடிக்கல் நடும் நிகழ்வின்போது சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்பட்டார்கள். அவர்களை விரட்டியடிக்கவோ, கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவோ பொலிஸார் தவறியுள்ளனர். இவ்வாறு பொலிஸார் செயற்படுவது விநோதமானது என்று அவர் சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான் வழக்கை கட்டளைக்காக எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ற-26)

### வவுனியாவில் பின்தங்கியுள்ள

# குஞ்சுக்குளம் பாடசாலையிலிருந்து சித்தி பெற்ற ஒரேயோரு மாணவி

வவுனியா,ஒக் 6
வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள மிகவும் பின் தங்கிய பாடசாலையான குஞ்சுக்குளம் பண்டாரவன்னியன்வித்தியாலயத்தில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய ஒரேயொரு மாணவி 173 புள்ளிகளைப் பெற்றுசித்தியடைந்துள்ளார்.

கிங்சிலி கனிமொழி என்னும் மாணவியே இவ்வாறு 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலையில் எந்த அடிப்படை வசதியும் இன்றிய நிலையில் தனியார்கல்வி வசதியும் அற்ற நிலமை கானப்பட்டதனால் ஏனைய மாணவர்களை பெற்றோர் வேறு பாடசாலையில் இணைத்த நிலையில் இந்தபாடசாலையில் தற்போது 11 மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கின்றனர்.

இதேநேரம் இப் பாடசாலையில் 11 மாணவர்கள் கல்வி கற்கும் நிலையில் தரம் 5 இல் இந்த மாணவி மட்டுமே கற்று சித்தி பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (105)

## எழுந்து நடக்கவே முடியாத மாணவன் புலமைப் பரிசிலில் சாதனை



எழுந்து நடக்க முடியாத சூழலிலும் தனது விடாமுயற்சியுடனான திறமையினால் மாணவன் ஒருவர். புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளார்

இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், மலையகத்தில் இருக்கும் ஒரு தமிழ் மாணவர் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

லிந்துலை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் செல்வகுமார் நிரஞ்சன் என்ற சிறப்புதேவைக்குரிய மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று அங்குள்ள அனைவருக்கும் முன்மாதிரியாக திகழ்ந்துள்ளார்.

22 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய போதும், அதில் இந்த மாணவன் மட்டுமே சித்தி பெற்றுள்ளார். 18 மாணவர்கள் 70 க்கும் மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதில் செல்வகுமார் நிரஞ்சன் என்ற சிறுவன் பிறப்பி லிருந்தே முதுகு எலும்பு பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் பெற்றோரின் உதவியுடனேயே பாடசாலைக்கு வருகின்றார். இவருடைய பெற்றோர் தோட்டத்தொழில் செய்து தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர் 166 புள்ளிகளைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ள விடயம் அனைவர் மத்தியிலும் பெரிதும் பேசப்படுகின்றதுடன், குறித்த மாணவனுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

இதில், மற்றுமொரு விடயம் என்னவென்றால் இந்த மாணவனுக்கு 4 தம்பிமார்கள் இருக்கின்றார்கள். இதில் 3 பேர் ஒரே சூழில் பிறந்த குழந்தைகள் ஆகும். (222)



## சிறப்புத் தேவையுடையவருக்கு சுயதொழில் உதவி

வவுனியா, ஒக் 6
சிறப்பு தேவைக்குட்பட்ட ஒருவருக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கு என தமிழ் விருட்சம் அமைப்பினரால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா சிதம்பரபுரம், கற்குளம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமாருக்கு கோழி வளர்ப்பினை மேற்கொள்வதற்கு உதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி உதவியை லண்டனில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தயாக உறவான சதீஷ்குமார் மனோகரனால் வழங்கப்பட்டது.

இவ் உதவித்தொகையை தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டது.

## மருத்துவமனைக் கட்டுமானப்பணிகளை பார்வையிட்டார் முன்னாள் அமைச்சர்

வவுனியா,ஒக் 6
வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கனகராயன்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கிராமிய மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கடந்த புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

மருத்துவர் ப.சத்தியலிங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்தபோது கிராம மக்களின் சுகாதாரதரத்தினை மேம்படுத்தும் வகையில் கிராமிய சுகாதாரஅபிவிருத்தி திட்டத்தின் கீழ் வவுனியாவில் ஏற்கனவே நவ்வி, கணேசபுரம், சேமமடு ஆகிய கிராமங்களில், கிராமிய மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன.

தற்போது கனகராயன்குளத்தில் மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை கனகராயன்குளத்தில் சித்தமருத்துவமனை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றன. (110)





அவசிய அவசர முதலுதவி பயிற்சி செயலமர்வு வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் மணியோசை கே. அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்றது.
பாடசாலையின் பிரதிஅதிபர் சந்திரகலாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பயனுடைய இந்த செயலமர்வில் உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர். (222)

## வன்னிப் பாடசாலைகளின் புலமைப்பரிசில் முடிவுகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுக் காலை வெளியாகின. பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைத்துள்ளனர். நேற்று மாலை வரையில் கிடைக்கப் பெற்ற பாடசாலைகளின் பெறுபேறு கள் இங்கு பிரசுரமாகின்றன.

**புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை**
ருஜன்-191, செல்வகுமார் நேருஜன்-189, லிங்கேஸ்வரன் நீரஜா-188, சதீஸ்குமார் சாமீரா-186, சுதசீலன் யுசாந்-185, லட்சுமிகாந்தன் டதுர்சிகா - 184,குணாகரன் கதிர்விழி-181, சசிகரன் சுடர்சனா-180, சந்திரகுமார் கோவர்த்தனன்-178, ஜெயக்குமார் தமிழிசை - 178, நிரஞ்சன் ஆரணி-178, ஜீவராசா அக்சயா-178, செயக்குமார் கில்ஸ்ரொயிட -176, சிவானுகா குலதீபன்-174, நவநீதன் கேதுசன்-172, சபீனா விஜிதரன்- 172, எழினிகா ஜெயசுதன்- 172, ஜீவாகரன் சுகிர்தன் - 171, ஆராதனா நிக்சன்- 170, தமிழ்நிலா சிவகுமார்-170, நிவிதா அலிஸ்ரன்-169, பகீரதி சசிக்குமார்- 168, கர்னி இதயரதன் - 168, சுபாங்கன் அனுராகவன்- 168, ஜெயசீலன் கலையகன்- 167, மேகானந்தசிவம் பவிர்சன்- 166, இராசகுமார் பவானந்தன்- 166, இராசகுமார் பவானந்தன்- 166, செயஸ்ரியாம்பிள்ளை ரொக்சன்- 166, சுரேந்திரன் நிலவன்- 165, கிசோமி ரதீபன்- 164, துசாந்தன் சாருஜன்-164, உசாந்தினி உதயசீலன்-163. (T3)

**முல்லைத்தீவு விசுவநாதர் ஆரம்ப பாடசாலை**
முல்லைத்தீவு விசுவநாதர் ஆரம்ப பாடசாலையில் 34 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதி கூடிய மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலையாக இந்தப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சித்தி பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு:
ஞா.கெளசியா 191,டி.டினோஜன் 190,பா.காபிரியேல் 190, கி.அருண் 189,ந.தர்சனா 187,ச.சானுகா 186,கை.சாருதி 186, ஜெ.மிதுரன் 186, க.அபிசேகன் 185,பூ.விதுசாளினி 185,க. தனஞ்சன் 184,செ.கதிரவன் 184, வி.துவாரகன் 184,ஜீ.இசைநிலா 182,ப.தனஞ்சனா 182,தி.நங்கை 181, த.தனுசியன் 181, ப.சாகித்தியா 180, யோ.கயல்விழி 179, ச.சோலயா 179, செ.தளிர் 178,கி.மிதுனன் 175,ச.கானதி 175, சி.ஜொய்சன் 172, செ.கனிவிழி 171, சி.யாழினி 168,ஜெ.குணாளினி 167,த.தர்சாந் 167, சி.சிறீபிரியா 166, ஜெ.கீர்த்திகன் 165, ம.மகிழினி 165, ம.யாழினி 164, ஜெ.கீர்த்திகா 164, இ.சர்மிலன் 163. (222)

**வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகாவித்தி**
வவுனியா இறம்பைக்குளம் மகளீர்மகாவித்தியாலயத்தில் இம்முறை 76 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதனடிப்படையில்சரத்பிரேம்குமார் லதுசனா 193புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாவது இடம். கொ.ஏஞ்சலின் அபிகெயில் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் நான்காவது இடம். ம.ஜதுசன், ந.நயனி 191புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5ஆவது இடத்தையும், ச.சாயகி 189 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் ஒன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

**வவுனியா தமிழ்மத்திய மகா வித்தியாலயம்**
வவுனியா தமிழ்மத்திய மகாவவித்தியாலயத்தில் இம்முறை 60 பேர் புலமை பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் யெகநாதன் லதுர்சன் 193 புள்ளிகளை பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

**வவுனியா சைவபிரகாசா மகளீர்கல்லூரி**
சைவபிரகாசா மகளீர்கல்லூரியில் இம்முறை 22 பேர் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் சுதாகர் அபினுசன் 191புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5 ஆவது இடத்தையும், சிவகணேசன் ஆதித்யன் 190 புள்ளிகளைபெற்று 8 ஆவது இடத்தையும்பெற்றுள்ளனர்.

**புளியங்குளம் ஆரம்ப பாடசாலை**
புளியங்குளம் ஆரம்பபாடசாலையில் இம்முறை நான்கு பேர் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் தர்மராயா கானுயன் 183, யெயகணேசன் தேனுயன் 175, சுந்தரலிங்கம் புகழவன் 169, கோவிந்தராயன் கயலவன் 164 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

**வவுனியா சேமமடு சணரமுகாந்தா வித்தியாலயம்**
வவுனியா சேமமடு சணரமுகாந்தா வித்தியாலயத்தில் 30 வருடத்திற்கு பிறகு இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். மாணிக்கவாசகர் அபிலன் 174 , இலங்கேஸ்வரன் கிரிசாலினி 167 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயம்**
வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் இம்முறை பிறகு 5 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சி. கோமகள் 182,சி. துளசிவாணன்170, பா.அகல்யா167 பா. ஆரவி166, ஆ. ஆரவி 167 புள்ளிகளை பெற்றுள்ளனர். இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலையில் இம்முறை மூன்று மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் இராசநாயகம் யதுசா 164 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். (110)

# தேக்கு மரங்கள் பல கடத்தப்படுகின்றன நடவடிக்கை இல்லையெனக் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஒக். 6

**பழையமுறிகண்டி, தேராவில் பகுதியில் விடுதலைப் புலிகளால் நட்டுப் பேணப்பட்டு வந்த தேக்கம் காடுகள் வகை தொகையின்றி அறுத்து தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணம் நோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றன என்று கூறப்படுகிறது. இது தொடர்பில் அதிகாரிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

வன்னிப் பிரதேசம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மற்றும் பழையமுறுகண்டி உள்ளிட்ட பல பகுதிகளிலும் தேக்கம் மரங்கள் நட்டுப் பராமரிக்கப்பட்டன. அவ்வாறு பராமரிக்கப்பட்ட வனப்பகுதிகள் போரின் பின்னர் வனவளத்திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளது.

இவ்வாறு வனவளப்பகுதியின் ஆளுகையில் உள்ள பிரதேசத்தில் பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகருதி ஒரு மரம் தறிக்கப்பட்டாலும் குறித்த திணைக்க ளத்தால் கைது செய்யப்படுவதோடு குறித்த வனப் பகுதிகளில் கால்நடைகள் மேச்சலுக்குச் செல்லவும் வனவளத் திணைக்களத்தினர் தடை விதித்துள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி பகுதிகளில் 1997 முதல் 2000ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளால் நட்டப்பட்டு பராமரித்த தேக்கம் மரங்கள் தறிக்கப்பட்டு பெரு மரங்கள் நடுவே மறைத்தும் சிறு மரங்கள் வெளித் தெரியும் வண்ணமும் கடந்த இரு நாள்களாக பகல்வேளையில் தென்னிலங்கை நோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு மரங்கள் எடுத்துச் செல்லப்படுவது தொடர்பில் எந்தத் திணைக்களமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தேராவில் பகுதியில் நீண்ட காலமாகமுற்றியமரங்களை அகற்றி மீள் சுழற்சியில் மரம் நாட்டி உரிய திட்டத்தின் கீழ் மரக்கூட்டுத் தாபனத்துக்கு அவை வழங்கப்பட்டன. இதனடிப்படையில் அங்கிருந்து மரங்கள் அகற்றப்படுகின்றன. இப் பகுதியில் இன்னமும் சுமார் 20 மரங்கள் அகற்றப்பட வேண்டியுள்ளன. இவை நெடுங்கேணி ஊடாக வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இதேநேரம் பழைய முறிகண்டி, ஒலுமடுப் பகுதியில் இருந்து மரம் தறிப்பதற்கோ அவை யாழ்ப்பாணம்எடுத்துச்செல்வதற்கோ எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை - என்றார்.

(4.105)



## வவுனியா நகர சபையினரின் சோலைவரி அறவீடு ஆரம்பம்

வவுனியா, ஒக். 6

கடந்த பல வருடங்களாகச் சோலை வரி பெற்றுக்கொள்ளாத வர்த்தகர்களுக்கு எதிராக வவுனியா நகரசபை உத்தியோகத்தர்கள் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.

வவுனியா நகரசபையின் தீர்மானத்துக்கு அமைய நகரசபைச் செயலாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை வவுனியா நகரசபைக்குச் சோலை வரி நிலுவை செலுத்தப்படாதவர்களுக்கு எதிராக நகரசபைக் கட்டளைச் சட்ட அத்தியாயம் 255 பிரிவு 170 இன் பிரகர்ரம் நகரசபை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

ஆடம்பரப் பொருள்கள் கையேற்கப்பட்டு அவற்றை ஏல விற்பனை செய்வதன் மூலமாகச் சோலை வரி நிலுவையைச்சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு நகரிலுள்ள பல வியாபார நிலையங்களுக்கு எதிராக நேற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4)



## தேசிய நத்தார் விழா தொடர்பில் மன்னாரில் கலந்துரையாடல்



மன்னார், ஒக். 6

தேசிய நத்தார் விழா இந்த முறை மன்னார் மாவட்டத்தில் இடம் பெறவுள்ள நிலையில், அது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் இமானுவேல் அமரதுங்க, கிறிஸ்தவ விவகார இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் அலுவிகார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை, நகர சபையின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கத்தோலிக்கக் குருக்கள் உள்ளடங்கலாக பாதுகாப்புத் தரப்பினர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

தேசிய நத்தார் தின நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தேசிய நத்தார் தின நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய நத்தார் தின நிகழ்வில் கலந்துகொள்ள மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள் எனப் பல தரப்பட்டவர்கள் மன்னாருக்கு பயணிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தமுறை நத்தார் விழாவை அரசுடன் இணைந்து மன்னார் மறைமாவட்டத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விழாவில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கத்தோலிக்க, கிறிஸ்துவ மற்றும் பொது மக்கள் அதிகாரிகள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (4.56.60)

## விளையாட்டு மைதானத்துக்கு உரிமை கோரும் உப தவிசாளர்

வவுனியா, ஒக். 6

வவுனியா சோபாளப்புளியங்குளம் பகுதியில் விளையாட்டு மைதானத்துக்கு ஒதுக்கப்பட்ட காணி ஒன்றுக்கு வவுனியா தமிழ் தெற்குப் பிரதேச சபை உப தவிசாளர் மகேந்திரன் உரிமை கோருகிறார் என்று இளஞ்செழியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் சிதம்பரநாதன் நவராஜா குற்றஞ்சாட்டுகிறார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா சோபாளபுளியங்குளம் தமிழ் மக்களின் பூர்வீக பகுதியாகும். இங்கு பூர்வீகமாக வசித்து வந்த பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவ்வாறு 40 ஏக்கர் காணி உரிமையாளர் ஒருவர் நீண்டகாலமாக வெளிநாடு ஒன்றில் வசித்து வருகின்றார். இந்த நிலையில் அவரின் காணியை அபகரிப்புச் செய்வதற்குப் பலர் முயன்று வருகின்றார்கள். எமது பகுதியிலுள்ள இளையோருக்கு விளையாட்டு மைதானம் இல்லை. இதையடுத்து பல முயற்சிகளின் பின்னர் பிரதேச செயலாளர் எமது கிராம அலுவலர் ஊடாகக் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கும் அறிவித்திருந்தார்.

இளஞ்செழியன் விளையாட்டுக்கழகத்துக்கு 4 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அந்தக் காணிக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் சிலரின் தலையீடுகளால் தாமதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எமது பகுதியிலுள்ள இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்கு இளஞ்செழியன் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது பகுதி மக்கள் போர்க் காலத்தின்போது பல இன்னல்களையும் இழப்புகளையும் சந்தித்துள்ளார்கள். இந்தக் காணியில் வசித்துவந்த உரிமையாளர் போர்க் காலத்தில் வெளிநாடு சென்றுவிட்டார். இந்தநிலையில் அவர் திரும்பி வராத பட்சத்தில் இந்தக் காணியை அரசுடமையாக்கி பொதுத் தேவைகளுக்கு அனுமதிப்பதற்குப் பிரதேச செயலகத்தால் முடிவு எட்டப்பட்டது.

இந்தநிலையில் அந்தக் காணியின் ஒரு பகுதியை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உப தவிசாளர் மகேந்திரன் தான் வாங்கியுள்ளேன் என்றும் எமது விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்பட்ட காணியைப் பெற்றுக்கொள்வதற்கு அவரால் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார். எனவே காணியைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்குப் பெற்றுத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இளஞ்செழியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவரின் குற்றச்சாட்டுத் தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச உப தவிசாளர் மகேந்திரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது.

"குறித்த விளையாட்டுக் கழகத்துக்கும் எனக்கும் ஒருவரிடமிருந்து காணி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்களையும் நான் வைத்திருக்கின்றேன். குறித்த விளையாட்டுக்கழகம் அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்கள் விளையாடுவதற்காக மைதானத்துக்குக் காணி வழங்குமாறு கோரும் பட்சத்தில், அவர்களின் கோரிக்கைக்குச் சாதகமான பதில் வழங்கத் தயாராக உள்ளேன்" என்று தெரிவித்தார். (4)



தலைமன்னாரில் சுற்றுலா மேம்படுத்தலில்

# கடற்படையினரின் தடை குறித்து அரச தலைவரின் கவனத்துக்கு!

## அமைச்சர் அமரதுங்க தெரிவித்தார்

தலைமன்னார், ஒக். 6

தலைமன்னாரில் சுற்றுல்லாத்துறையை மேம்படுத்தக் கடற்படையினர் தடையாக உள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில், அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்கிறேன் என்று அமைச்சர் ஜோன் இம்மானுவேல் அமரதுங்க தெரிவித்தார்.



தலைமன்னார் கடற்கரை பூங்கா கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது எனது கையில் ஒரு கடிதம் கிடைத்துள்ளது. அதாவது கடல் சுற்றுல்லா விடயமாகப் பயிற்சிகள் பெற்றும் சுற்றுல்லாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்கான படகுகள் எங்களிடம் கைவசம் இருந்தும் கடற்படையினர் எங்களை தடுத்து வருகின்றனர் என்று அதில் முறையிடப்பட்டுள்ளது. இது விடயமாக நான் கவலை அடைகின்றேன். இந்தக் கடிதத்தை நான் கொழும்புக்கு எடுத்துச் சென்று இது விடயமாகத் தீவிர நடவடிக்கை எடுப்பேன் என்று உங்களுக்குக் கூறுகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தமட்டில் சுற்றுலாத் துறைக்குப் பெரும் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு இருக்கின்றனர். இதை நாங்கள் நோக்கும்போது கொழும்பு மற்றும் தென் பகுதியிலே தான் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த உல்லாச ப்பயணிகளை வட பகுதிக்கும் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்கள் இங்கு வருகை தரும்பொழுது சிறு வியாபாரிகள் நன்மையடைவர். கொழும்பில் சுற்றுல்லாப் பயணிகள் முச்சக்கர வண்டில்களில்தான் கூடுதலாகப் பயணிக்கின்றனர்.

அவர்கள் வந்தால் இங்குள்ள முச்சக்கர வண்டிகள் வைத்திருக்கும் பாமர மக்களும் பயன்பெறும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. இப்படியானவர்கள் வந்தாலும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதுதான் எமது நடவடிக்கையாக இருக்கின்றது.

**சுற்றுலாவிகள் வீடுகளில் தங்கவும் நடவடிக்கை**

இங்குள்ள வீடுகளிலும் உல்லாசப் பயணிகளைத் தங்கவைத்து அவர்கள் மூலமாக இங்குள்ளவர்கள் வருமானத்தை ஈட்டும் நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். இந்தத் திட்டத்தை மெருகூட்டும் முகமாக நாங்கள் வங்கிகளில் இலகு கடன் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். தற்பொழுது சுற்றுலாப் பயணிகளிடம் ஆர்வம் காணப்படுகிறது. இங்குள்ள கலாசாரம், விழுமியங்களைத் தெரிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வம்காட்டி வருகின்றார்கள்.

இங்கு அழகுப்படுத்தப்பட்டுள்ள கடற்கரைப் பூங்காவில் எத்தனை கட்டடங்கள் வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் இவற்றை சரியான முறையில் பராமரிக்காவிட்டால் எல்லாம் வீணாகிவிடும். நான் கண்ட அனுபவத்தின்படி இவற்றைப் பிரதேச சபைகள் சரியான முறையில் பராமரிப்பதில்லை. இதைக் கவனத்தில் எடுத்துத்தான் நான் இங்குள்ள பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்பது, இதைத் தனியார் துறையினரி டம் ஒப்படையுங்கள். அப்பொழுதுதான் இங்குள்ள மலசலகூடங்கள் ஏனையவைகளைப் பாவிக்கக் கூடியதாக இருக்கும். இவற்றை பாதுகாத்துக் கொள்வது பொதுமக்களின் முக்கியகடமை.

**கப்பற் போக்குவரத்துக்கு வலியுறுத்துங்கள்**

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்குமிடையே கப்பல் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்கத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். இது நடைபெறுமாகில் இந்தியாவிலிருந்து பெருந்தொகையான மக்கள் இங்கு வருவார்கள். பலாலி விமான சேவையைத் தற்பொழுது மக்கள் சேவையாக மாற்றுவதற்ககான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதை நாங்கள் செம்மையாக நடைமுறைப்படுத்தினால் இந்தியாவிலிருந்து பலாலிக்குப் பிரயாணிகள் நேரடியாக வரக்கூடியதாக இருக்கும். சுற்றுல்லாப் பயணிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் பட்சத்தில் அதிகளவு சுற்றுல்லாப் பயணிகள் வடக்குக்கு வர வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் அதற்கு இங்கு சமாதானம் இருக்க வேண்டும். அதைவிடுத்துக் கொலைகள், கொள்ளைகள் மற்றும் வேறு அசம்பாவிதங்கள் இருக்குமானால் இவைகள் ஒன்றும் நடைபெறாது. இதனால் இங்குள்ள பாமர மக்கள்தான் பாதிப்படைவர்.

**எந்த உரிமை?**

முதலமைச்சர் கூறுகிறார், உரிமையைத் தாருங்கள் பின் எல்லாம் நல்லதாக நடக்கும் என்று. உரிமை என்பது பலவிதம். அதில் எந்த உரிமையை இவர் கேட்கின்றார்.

அரசதைலைவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சிறிது சிறிதாக நிலங்களை விடுவித்து வருகின்றார். வடக்கு கிழக்குப் பகுதியில் சமாதானம் நிலவுமாகில் நிறைய அபிவிருத்திகளைச் செய்யலாம்.

**பாதுகாப்பு சரியாக இருப்பின் படையினர் தேவையில்லை**

பாதுகாப்பு படையினர் இருப்பது பாதுகாப்புக்காக. பாதுகாப்பு இங்கு சரியாக இருக்குமாகில் இதன் தேவைப்பாடுகள் இங்கு வேண்டியதில்லை.

ஆனால் நான் கேள்விப்படுகின்றேன் சிறு குழுக்கள் சில தேவையற்ற விதத்தில் நடந்து வருகின்றன என்று. இது தொடருமாகில் பாமர மக்கள்தான் பாதிப்படைவர்.

சமாதானத்துக்கு ஒருவர் மட்டுமல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இது நடைமுறைப்படுத்தப்படுமாகில் இந்தச் சமூகத்தை நல்ல முறையில் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

**மடுவில் 300 வீடுகள்**

மடுத் தேவாலயப் பகுதிக்கு இந்திய அரசின் உதவியுடன் 300 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன்.

**அரசியல்வாதிகள் ஒன்றுசேரவேண்டும்**

நாம் அரசியல் கட்சிகளைப்பற்றி பேச வேண்டியதில்லை. எல்லா அரசியல்வாதிகளும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய அவசியம் இங்கு இருக்கின்றது. இது ஒரு நல்ல நிகழ்வாக இருப்பதால்தான் மெதுமையான மழைத் துளிகள் விழுந்து கொண்டிருக்கின்றன -என்றார். (4.60)

# மூடுந்தில் மறைத்துக் கடத்திய கஞ்சா வவுனியாவில் சிக்கியது

## சந்தேகநபர்கள் மூவர் கைது

வவுனியா, ஒக்.6

வவுனியா பொலிஸாரின் திடீர்ச் சோதனையில் 7 கிலோ 924 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அவற்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

வன்னி மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர அபயவிக்கரமவின் கீழ் செயற்படும்சிறப்புப்போதைப் பொருள் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் நசீம் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் காமினி, கொன்ஸ்டபிள்களான சிந்தக்க, அசேல, நிரோசன், பந்துல ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவினரே நேற்றுமுன்தினம் காலை ஓமந்தைப் பாடசாலைக்கு முன்பாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மூடுந்து ரக வாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிட்ட போது கஞ்சா கைப்பற்றப்பட்டது. மூடுந்து வாகனத்தில் பயணித்த கிண்ணியாவைச் சேர்ந்த 3 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். மூடு ந்து வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.



கிளிநொச்சியில் இருந்து திருகோணமலைக்குக் கஞ்சாவைக் கடத்திச் செல்ல முயன்றமை விசாரணைக ளில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-110)






# மது விற்பனை நிலையத்தை அகற்றுமாறு கோரிப் பேரணி

## வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன அரச தலைவருக்கு மனு

பருத்தித்துறை, ஒக். 6

பருத்தித்துறை நகரின் மத்தியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தை அகற்றக்கோரி அமைதிப்பேரணி நேற்று நடத்தப்பட்டது. பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து ஆரம்பமமபான பேரணி மத்திய பேருந்து நிலையம் ஊடாக பருத்தித்துறை யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் உள்ள பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்ததது.

மதுபானசாலையை அகற்றகோரி வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு நூற்றுக்கணக்கான ஆண்கள் பெண்கள் உட்பட வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை நகரசபைத்தலைவர் யோ.இருதராஜா மற்றும் நகரசபை உறுப்பினர்கள் பேரணியில் கலந்துகொண்டிருந்தனர். பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோவில் கொட்டடி சித்தி விநாயகர் கோவில் தர்மகர்த்தா சபையினர், பருத்தித்துறை வர்த்தர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளிட்ட 16 பொது அமைப்புகள் இந்தப்பேரணிக்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

பேரணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நகரில் தேநீர்ச் சாலைகள், உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. ஆனால் முதன்மை வீதியிலுள்ள குறித்த மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டிருந் தது.

இந்த விற்பனை நிலையம் அமைந்துள்ள வீதி ஊடாக பேரணி அமைதியாக சென்றது. பருத்தித்துறைப் பொலிஸார் வீதிப்போக்குவரத்துகளைக் கண்காணித்தனர். முற்பகல் 9.15 மணிக்கு ஆரம்பமான பேரணி அரை மணி நேரத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. பேரணி செயலகத்தை நெருங்கியவேளை முதன்மை வீதியோரம் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியால மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்து நின்றனர்.

வீதியில் மதுபான விற்பனை, பாடசாலையில் மது பாவனைக்கு எதிரான போதனை, மது என்னும் அரக்கன்

மரணத்தூதன், போதையற்ற மனித சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோம், மதுஒழிக மதுப்பிரயர்கள் ஒழிக, மது அருந்துபவர்களை ஒழிப்போம் போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளைத் தாங்கியவாறு பேரணிக்கு வலுச்சேர்த்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அமைதிப் பேரணியில் கலந்து கொண்டோர், மதப் புனித்தைச் சீரழிக்கும் மதுபான நிலையத்தை ஆலயச் சூழலில் இருந்து அகற்று, பாதசாரிகளுக்கு இடையூறாகவுள்ள மதுபானசாலையை அகற்று, ஆலயம், பள்ளிவாசல், சாயிநிலையம் ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ள மதுபான சாலையை அகற்று' போன்ற வாசகங்களுடன் கூடிய சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

பேரணி முடிவில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிறியிடம் பேரணி மனுக் கொடுக்கப்பட்டது. போராட்டகாரர்கள் சார்பாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் யோ. இருதராஜா அரசதலைவருக்குக் கையளிக்கும் வகையில் பருத்தித்துறை நகரமத்தியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் நகரவேண்டும் இது நகரில் உள்ள 16 பொது அமைப்புகளின் கோரிக்கை என்று தெரிவித்தார்.

அதற்கு 18 அமைப்புகள் ஆதரவு வழங்குவதாகக்கூறிக் கையொப்பமிட்டிருந்தனர். அதன் பிரதிகள் தலைமை அமைச்சர், நிதி அமைச்சர், வடக்கு முதலமைச்சர், மாவட்டச் செயலர், பொலிஸ்மா அதிபர், கொழும்பு மது வரி ஆணையாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த மது விற்பனை நிலைய்த்தை மூடுமாறு கோரி முன்னர் பல தடவைகள் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது. (4,173,160)

வடக்கு

# கல்வி அமைச்சரின் அசமந்தத்தால் பறிபோகும் தொழில்நுட்பக் கல்லூரி

## மாகாண சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

கொழும்பு அரசினால் வரவு செலவுத் திட்டத்தில், மீசாலையில் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்குரிய பாடசாலைக் காணியை வழங்குவதற்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் அனுமதி வழங்கவில்லை. இதனால் அந்தத் திட்டம் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 133ஆவது அமர்வில், சிறப்புக் கவனவீர்பை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மீசாலையில் 560 மில்லியன் ரூபா செலவில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயக் காணியை வழங்குவதற்கு பாடசாலைச் சமூகமும், அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் இணக்கம் தெரிவித்திருந்தன. தொழில்நுட்ப கல்லூரிக்கான இயக்குநர், பிரதேச செயலரிடம் அந்தக் காணியை முறைப்படி கையளிக்க கோரியிருந்தார்.

பிரதேச செயலர், வலயக் கல்விப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தார். வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சருக்கு கடிதம் அனுப்பி 6 மாதங்கள் ஆகின்றன. ஆனால் இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

அந்தத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்பட்டால், 5 ஆயிரம் மாணவர்கள் கற்கக் கூடிய சூழல் ஏற்படும். எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இந்த விடயத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், இதில் பேசிக் கொண்டிருக்கவேண்டியதில்லை. சபையின் தீர்மானமாக வடக்கு மாகாண தலைமைச் செயலரை, கல்வி அமைச்சின் செயலரிடம் அனுமதியை வாங்குமாறு கோரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அவ்வாறு செய்ய முடியாது. நான் இதனை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்புகின்றேன். பிரதியை வடக்கு மாகாண தலைமைச் செயலருக்கு அனுப்பி வைக்கின்றேன் - என்றார். (5,26)

# பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவை வழங்கவும்

## வடக்கு மாகாணசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்.6

முல்லைத்தீவு மாவட்டத்திலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டோருக்குக் கொழும்பு அரசின் சமூகசேவைகள் அமைச்சினால் வழங்கப்படும் கொடுப்பனவை உடனடியாக வழங்கவேண்டும் என்றும், அந்தக் கொடுப்பனவை அதிகரித்து வழங்கவேண்டும் என்றும் வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 133 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், போர்க் காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட சிறப்புத் தேவையுடையவர்கள் ஆயிரத்து 278 பேருக்கும், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 857 பேருக்கும், சிறப்பு உதவிக் கொடுப்பனவுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கவேண்டியுள்ளது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையிலும், வறுமைக்கு உட்பட்ட நிலையிலும் வாழ்ந்து வரும் இவர்கள் வருமானம் இல்லாத நிலையில் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளார்கள். இந்தக் குடும்பங்களை மீட்டெடுத்து நலிவுற்றுள்ள அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தக் கொடுப்பனவை உடனடியாக வழங்கவேண்டும் என்று கொழும்பு அரசின் சமூகசேவைகள் அமைச்சைக் கோரும் தீர்மான வரைவை முன்வைத்தார்.

அவர் தனது வரைவு மீதான விவாதத்தில், சமூகத்தில் முதியோர் மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள். கணவனை இழந்த நிலையில் மனைவியும், மனைவியை இழந்த நிலையில் கணவனும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவாக 250 ரூபாவும், 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2ஆயிரம் ரூபாவும் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது தவிர சிறப்புத் தேவையுடையவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா அரசு கொடுப்பனவாக வழங்கி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் சீராக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் கொடுப்பனவை 9 ஆயிரத்து 967 பேர் முல்லைத்தீவில் பெறுகின்றனர்.

முதியோர் கொடுப்பனவும், சிறப்புத் தேவைக்குட்பட்டோர் கொடுப்பனவும் கொழும்பு அரசால் வழங்கப்படுகிறது. இது சீராக வழங்கப்படவில்லை.

சிறப்புத் தேவைக்குட்பட்டோர் கொடுப்பனவு மாவட்டத்தில் 913 பேருக்கு வழங்கப்படுகின்றது. ஆயிரத்து 278 பேருக்கு இன்னும் வழங்க வேண்டியுள்ளது. முதியோர் கொடுப்பனவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 947 பேருக்கு வழங்கப்படுகிறது. இன்னும் 857 பேருக்கு வழங்க வேண்டியுள்ளது.

அரசானது ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அதுவும் வாழ்க்கையில் மிகவும் நலிவடைந்தவர்கள் பாதிக்கப்பட்டுப் பல வகையான துன்பங்களுடன் வாழ்ந்து வரும் இவர்களை இந்தக் கொடுப்பவுகளிலிருந்து ஒதுக்கி வைப்பது பொருத்தமற்றதாகவே கருதுகின்றேன் என்றார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமல்ல வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இதே பிரச்சினை இருக்கின்றது. எனவே வடக்குக்குரிய பிரச்சினையாக இந்தத் தீர்மான வரைவை மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அத்துடன் வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரித்து வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

இந்தத் திருத்தங்களுடன் தீர்மான வரைவை அனுப்பி வைப்பதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (5,26)



# தமிழர் மரபுரிமை பேரவையினரும் ஐ.நா. அதிகாரிகளும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.6

முல்லைத்தீவில் மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையினருக்கும் ஐ.நாவின் இலங்கைக்கான மூத்த மனித உரிமை ஆலோசகர் ஜீஆன் பெர்ணான்டஸ் ஜோர்டன் மற்றும் ஐ.நாவின் நிலைமாறு கால நீதிக்கான ஆலோசகர் ஸ்ரெலாஅஸ்கேவ் றினாட் ஆகியோருக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

மகாவலி தொடர்பாகவும், தொல்பொருள், வனவளம், வனஜீவராசிகள் போன்ற திணைக்களங்களின் அதிகார சபைகளின் நில அபகரிப்புத் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அந்தக் குழுவினர் உறுதியளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# அரசியல்க் கைதிகளை விடுவிக்குமாறு துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.6

அரசியல்க் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் துண்டுப்பிரசுர விநியோகம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30க்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண நகரின் தலைமைப் பேருந்து நிலையத்தில் இது இடம்பெறவுள்ளது.

அரசியல்க் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல்க் கட்சிகளின் ஏற்பாட்டில் இது இடம் பெறவுள்ளது. (4)

# முல்லைத்தீவில் வனவள திணைக்களம் காட்டாட்சி!

## வடக்கு மாகாணசபையில் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.6

முல்லைத்தீவு மாவட்ட எல்லைக் கிராமங்களில் வனவளத் திணைக்களத்தினர் சர்வாதிகாரத்துடன் செயற்படுகின்றனர். அங்குள்ள மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை வனவளத் திணைக்களத்தினர் நிறுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவனவீர்ப்பு முன்வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 133ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் அன்று தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் இந்தக் கவனவீர்ப்பை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வனவளத் திணைக்களத்தினர் தாம் நினைத்தபடியே ஏதும் செய்யலாம் என்றாற் போல் மாவட்டத்தில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட பல இடங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து காடுகளை அழித்து குடியேற்றலாம். அவர்களுக்குக் காணிகளையும் வழங்கலாம் என்றது போன்று செயற்படுகின்றனர். ஆனால், உண்மையாக இந்தக் காணிகளின் பூர்வீக உரிமையாளர்களான தமிழர் காணிகளை மட்டும் பறிக்கலாம் அல்லது தடுக்கலாம். இதுதான் வனவளத் திணைக்களத்தினரின் செயலாக முல்லைத்தீவில் காணக் கூடியதாக உள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் 15 ஆயிரத்து 356 ஏக்கர் காணிகளுக்கு தாங்கள் எல்லைகள் இட்டுள்ளதாக வனவளத் திணைக்கள அதிகாரிகள், 2016ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்கள். இந்த ஏக்கர் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம். 4 ஆயிரத்து 35 குடும்பங்களின் வாழ்வாதார 13 ஆயிரத்து 32 ஏக்கர் நிலங்களும் இதற்குள் உள்ளடங்கும்.

செம்மலை மக்களின் வயிற்றுப் பசியைப் போக்கும் வாழ்வாதாரத்துக்குரிய நிலங்கள் புளியமுனைப் பகுதியில் உள்ளன. 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து உப உணவுப் பயிர்ச்செய்கை இந்தக் காணிகளில் செய்து வந்தார்கள். போர் நடைபெற்ற 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இங்கு பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலை இருந்தது.

கிட்டத்தட்ட 35 ஆண்டுகளின் பின்பு தற்போது இங்கு பயிர்ச்செய்கை செய்து வருகிறார்கள். கடந்த மாதம் அந்தப் பகுதிக்குச் சென்ற வனவளத் திணைக்களத்தினர் முன்பு எல்லைகள் இட்டிராத இடங்களில் அங்காங்கே ஒழுங்கீனமற்ற முறையில் 'எப்' என்ற அடையாளத்தை இட்டு இந்த இடங்களுக்குள் நுழையக் கூடாது என்றும் அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்துள்ளார்கள்.

இந்த அறிவித்தல்களால் வயிற்றுப் பசிக்காக வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொண்டிருந்த 40 குடும்பங்களின் 100 ஏக்கர் வரையான காணிகளில் தொழில் செய்ய முடியாத நிலையில் தவிக்கின்றார்கள். இன்னும் இரண்டு வார காலத்துக்குள் கச்சான் சோளம் ஆகியன பயிரிட வேண்டிய நிலையில் இந்தத் தடுப்பானது மக்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இந்தக் குறைபாடுகளை நேரில் வந்து பார்வையிடும்படி என்னிடம் கேட்டுக் கொண்டதற்கமைய கடந்த முதலாம் திகதி நான் அங்கு சென்று மக்களுடன் இடங்களைப் பார்வையிட்டேன். காணிகள் சிலவற்றுக்கு ஆவணங்கள் உள்ளன. ஒவ்வொரு காணிகளிலும் ஒன்று அல்லது இரண்டு பெரிய மரங்கள் உள்ளன. இவை ஏத்துக்காவல் மற்றும் நிழல்களுக்காக முன்பு தொடக்கம் இருந்தவை எனவும் தெரிவித்தார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளாக தாம் உப உணவுப் பயிர்ச்செய்கை செய்து வரும் நிலையில் இதனை ஏற்றுக் கொண்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் பரிந்துரையில் விவசாயக் கிணறுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பார்வையிட்டு பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தினேன். ஆனால், தான் இந்தியா செல்வதாகவும் வந்தவுடன் இது விடங்களைப் பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அவை கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். இந்த மக்களுடைய வாழ்க்கையில் வயிற்றுப் பசியில் கைவைக்காது அவர்களுடைய சொந்த நிலங்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு சம்மந்தப்பட்டவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ரவிகரன் குறிப்பிட்டார்.

வனவளத் திணைக்களத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சுட்டிக் காட்டி, முல்லைத்தீவு மாவட்ட செயலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் மற்றும் வனவளத் திணைக்களத்துக்கும் இதனை அனுப்பி வைப்பதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (5,26)

# இடைக்கால அரசை அமைக்க சு.க.வுக்கு எண்ணமில்லை

## துமிந்த திஸாநாயக்க



கொழும்பு, ஒக 6

சுதந்திர கட்சிக்கு இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கான எண்ணம் இல்லை. அத்தோடு 2020 வரை தேசிய அரசே தொடரும் என்று அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இணைந்து இடைக்கால அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருந்தமை தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கு இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்ற யோசனை ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் முன்வைக் கப்பட்டது.எனினும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களால் அது நிராகரிக்கப் பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# சுமந்திரன் கொலை முயற்சி: ஐவர் மீது குற்றப் பத்திரிகை

கொழும்பு, ஒக்.6

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐவருக்கும் எதிராக நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றில் தமிழ் மொழியில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் ஜானகிய ராஜரத்ன முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. தமது வழக்கை யாழ்ப்பாணத்துக்கு மாற்ற வேண்டும் என்று பிரதிவாதிகள் விடுத்த கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார். தேவை ஏற்படும் பட்சத்தில் அரச செலவில் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்து தரமுடியும் என்றும் நீதிவான் குறிப்பிட்டார். வழக்கு விசாரணைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினார் என்று முன்னாள் போராளிகளான ஐவர் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

பிரமுகர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற)

# அம்பாந்தோட்டையைச் சீனா இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியாது

## என்கிறார் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர்

கொழும்பு, ஒக 6

அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு கடன்பொறியில்லை என தெரிவித்துள்ள சீனாவிற்கான இலங்கை தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு சீனா இராணுவ நோக்கங்களிற்காக துறைமுகத்தை பயன்படுத்த முடியாது எனவும் தெரிவித்தர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையைக் கடன்பொறிக்குள் சிக்கவைப்பதற்காகவே சீனா நிதியுதவி செய்தது என யாராவது தெரிவிப்பார்கள் என்றால் அது தவறான விடயம்.

சீனாவிடமிருந்து பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கை சிரமப்பட்டது உண்மை. இலங்கைத் துறைமுகத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சீனா உதவியது.

துறைமுகத்தை தங்களிடம் கையளிக்குமாறு சீனா அரசு எங்களை ஒரு போதும் கேட்கவில்லை. இலங்கையே அவ்வாறான யோசனையை முன்வைத்தது .

இலங்கையை பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்து இது பொருளாதார ரீதியான முயற்சியே என சீனாவிற்குத் தெரிவித்து வருகின்றது. இலங்கையின் உள்விவகாரங்களில் எவரையும் தலையிட அனுமதிக்க முடியாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினதும் இந்து சமுத்திரத்தினது பாதுகாப்பும் இலங்கை படையினரிற்கு முக்கியமான விடயம் எனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

# பன்னாட்டுச் சமூகத்திடம் இலங்கையின் நீதித்துறை படிக்க ஏராளம் உள்ளன

## பன்னாட்டு நீதிபதிகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக 6**

**நீதித்துறையைப் பொறுத்தவரையில் தீர்ப்புக்களை வழங்குகின்ற விடயங்களில் பன்னாட்டுச் சமூகத்துடன் அனுபவங்களைக் கற்றுக்கொள்வது இலங்கை உட்பட எல்லா நாடுகளுக்கும் அவசியமானது என பன்னாட்டு நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

'சமத்துவம் மற்றும் பொது நேர்மைத்துவத்தை ஊக்குவித்தல் : அரசியல் யாப்பு நீதிமன்றங்களின் வகிபாகம் 'என்ற தலைப்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான மாநாட்டில் பங்கேற்றிருக்கும் மூன்று பன்னாட்டு நீதிபதிகள் இந்தக் கருத்தை வலியுறுத்தினர்.

இனத்துவக் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் கொன்ராட் அடனோர் ஸ்டிப்டுங் அமைப்பின் ஆசியப்பிராந்தியத்திற்கான சட்டத்தின் ஆட்சி நிகழ்ச்சித்திட்டம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு கொழும்பிலுள்ள ஜெட்விங் செவன் விடுதியில் நடைபெறுகின்றது.

கொலம்பியா அரசியல்யாப்பு நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதியரசர் அலெஜாண்ட்ரோ லினாரஸ் கன்டிலோ. தென் ஆபிரிக்க அரசியல் யாப்பு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எட்வின் கமரன் மற்றும் தென்கொரிய அரசியல்யாப்பு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி இல்வொன் காங் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள தென் கொரியாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி இல்வொன் காங் கருத்துத் தெரிவிக்கையில்.

ஒவ்வொரு ஆண்டும் தென் கொரிய நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் அமெரிக்கா. கனடா. இத்தாலி. ஸ்பெயின். பிரான்ஸ். லண்டன். ஜேர்மனி எனப் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனர். இதன் போது அந்த நாடுகளிலுள்ள நீதித்துறை எவ்வாறு வழக்குகளைக் கையாள்கின்றது என ஆராய்கின்றனர். இந்த நாடுகளுக்கு மட்டுமன்றி சீனா இலங்கை இந்தியா பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கும் தென்கொரிய நீதிபதிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். எந்தவொரு நாடுமே நீதிமன்ற வழக்குகளை கையாள்வதற்கான முற்று முழுதான அனுபவத்தை ஆற்றலை தம்மகத்தே கொண்டிருப்பதில்லை. அந்தவகையில் இலங்கையும் கூட ஏனைய நாடுகளின் நீதித்துறையிடமிருந்தும் கற்கவேண்டிய விடயங்கள் அதிகம் உள்ளன. ' எனக் குறிப்பிட்டார். தென் கொரியாவில் முன்னாள் அரச தலைவர் பார்க் தனது தோழியுடன் இணைந்து ஊழல்மோசடியில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டவுடன் அவரைப் பதவியில் இருந்து அகற்றுதில் தென் கொரியாவின் அரசியல்யாப்பு நீதிமன்றம் ஆற்றிய பங்கு மற்றும் தென் ஆபிரிக்காவில் முன்னாள் அரச தலைவர் ஜேக்கப் சூமாவை நிதிமோசடி விடயத்தில் பதவியில் இருந்து அகற்றுவதில் அந்நாட்டு அரசியல்யாப்பு நீதிமன்றம் ஆற்றிய பங்களிப்புப் போன்ற விடயங்களும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது. பக்கச்சார்பற்றவகையில் நடுநிலைமையுடனான தீர்ப்புக்களை வழங்குதல் .பன்முகத்தன்மையை நீதிபதிகள் குழாமில் உறுதிப்படுத்துதல் .தொடர்ச்சியான முறையில் தராதரத்தை பேணுதல் போன்றன நீதிமன்றங்கள் மீது மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கச் செய்வதில் முக்கிய பங்கினை ஆற்ற முடியும் எனவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் தயாரிக்கப்பட்டுவருகின்ற உத்தேச புதிய அரசியல் யாப்பில் அரசியல்யாப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்ற யோசனையும் உள்ளடக்கப்பட் டுள்ளது.

# கல்வித்துறையிலுள்ள தொழில் பற்றாக்குறைகளுக்கு டிசெம்பர் மாத இறுதிக்குள் தீர்வு

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக் 6

கல்வித் துறையில் காணப்படும் தொழில் பற்றாகுறைகளுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டுக் கற்பித்தல் துறையில் திறமையை வெளிகாட்டிய ஆசிரியர்கள் மற்றும் சிறந்த அதிபர்களுக்கு 'குரு பிரதிபா பிரபா" விருது வழங்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சர் தலைமையில்.பண்டாரநாயக்க பன்னாட்டு ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தின் இறுதிக்குள் அதிபர்கள் ஆயிரத்து 948 பேரையும், ஆசிரியர்கள் ஆயிரம் பேர் மற்றும் கல்வி நிர்வாக சேவைப்பிரிவிக்கு 480 பேர் வரையானவர்கள் இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் காணப்படும் சம்பளப் பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொடுக்கப்படும்.

நாளுக்கு நாள் அறிவாற்றலின் வேகம் வளர்ந்த வண்ணமே உள்ளது. தற்போதைய அளவில் அறிவாற்றல் விருத்தி 13 மாதங்களில் இரண்டு மடங்காக அதிகரிப்பதாக பன்னாட்டு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதற்கு ஏற்றாற்போன்று ஆசிரியர்களும் தொழிற்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமது அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# ஞானசாரதேரரின் மேன் முறையீட்டு மனு நிராகரிப்பு


கொழும்பு, ஒக் 6

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் தனது தண்டனைக்கு எதிராக செய்துள்ள மேன் முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணை நீதியரசர்களான ஈவா வனசுந்தர, நலின் பெரேரா மற்றும் பிரசன்ன ஜயவர்தன ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்குக் கடுமையான உழைப்புடன் 6 வருடங்களில் அனுபவிக்கும் படியாக 19 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்டனைக்கு எதிராக மேன் முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஞானசார தேரரால் விடுக்கப் பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.



இந்நிலையில் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஞானசார தேரரால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடந்த 2016 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் போது. நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அப்போது ஹோமாகம நீதவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்றது.

# புதிய முறையிலேயே தேர்தலை நடத்தவேண்டும்

சுதந்திரக் கட்சி திட்டவட்டமாக அறிவித்தது



கொழும்பு, ஒக 6

புதிய முறைமையிலேயே தேர்தலை நடத்தவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவிலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய முறையில் தேர்தலை நடத்துவதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. புதிய முறையில் தேர்தலை நடத்துவதற்காக எல்லை வரம்பு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தலைமை அமைச்சர் தலைமையில் ஐவர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இறுதி அறிக்கையை வழங்குவதற்கு மேலும் இரு மாதங்கள் கோரியுள்ளனர். அதனை வழங்குதவதற்கு நாம் தயாராவே உள்ளோம்.

தேர்தல் பிற்போடக்கூடாது என்பதில் நாமும் உறுதியாகவே உள்ளோம். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை. ஆனால் மீண்டும் பழைய முறையில் தேர்தல் நடத்துவதற்கு நாம் இணங்கப்போவதில்லை. எகவே ஐவர் கொண்ட குழுவானது விரைந்து அறிக்கையை அளிக்க தயாராக வேண்டும் - என்றார். (31)

# வடக்கில் 4 பொலிஸ் பிரிவுகளில் மட்டுமே ஆவா குழு



**கொழும்பு, ஒக். 6**

**வடக்கு மாகாணத்தில் உள்ள 53 பொலிஸ் பிரிவுகளில் நான்கு பொலிஸ் பிரிவுகளில் மாத்திரமே ஆவா குழு செயற்படுவதாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

சட்டம் ஒழுங்கு அமைச்சில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பாகங்களைப் போன்றே வடக்கு மாகாணத்திலும் மிக அமைதியான நிலமைகளே காணப்படுகின்றன. 2011ஆம் ஆண்டு தான் ஆவா குழு உருவானது.

அதன் பின்னர் அந்தக் குழுவில் சில தலைவர்கள் உருவானர்கள். அதன் பின்னரே பல்வேறு மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இருப்பினும் ஆவா குழுவினால் எவ்விதமான கொலைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை. ஆனால் தனிப்பட்ட மோதல்கள் காரணமாக நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் இரண்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. வன்முறைச் சம்பவங்களின் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். ஏதோவொருவகையில் விடுக்கப்படுபவர்கள் மீண்டும் வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர்.

ஆவா குழுவில் பல தலைவர்கள் உருவாகியமையால் அதனுள் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதனால் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. தற்போது ஆவாக்குழுவுக்குள்ளேயே மோதல்கள் நடைபெறுகின்றன. ஆவா குழுவிலிருந்து வெளியேறியவர்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக அறியக் கிடைத்துள்ளது. வட்க்கில் 6 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபட்டள்ளனர். வடக்கின் நிலமைகள் அமைதியாகவே உள்ளன.

தொழில்வாய்ப்பின்மையும், வெளிநாடுகளில் இருந்து பணம் கிடைக்கப் பெறுவதாலுமே ஆவா போன்ற வன்முறை அமைப்புக்கள் உயிர்ப்புடன் இருக்கின்றன - என்றார். (31)

# மைத்திரி, கோத்தா கொலைச் சதி சில நாள்களுக்குள் அறிக்கை தயார்

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ச கொலைச்சதி தொடர்பான விசாரணை அறிக்கை சில நாள்களுக்குள் பகிரங்கப்படுத்தப்படும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

படுகொலைச் சதி தொடர்பிலான விசாரணைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது குரல்ப் பதிவு தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன. அத்துடன் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். ஆகவே இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குள் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவோம். அதன்போது யார் பின்னணியில் உள்ளார்கள் என்பது வெளியாகும்.

பொலிஸ்மா அதிபர் இங்கு வருகை தருவதாக இருந்த போதும் பொலிஸ் ஆணைக்குழுவுக்குச் சென்றமையினாலேயே அவர் வருகை தரவில்லை. கடந்த காலத்தில் பிரதேசசபை அரசியல்வாதிகளின் கைப்பிடிக்குள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இருக்கும் நிலமைகள் காணப்பட்டிருந்தது. ஆனால் இன்று அவ்வாறான நிலமைகள் மாற்றமடைந்துள்ளன. ஆகவே பொலிஸ் மா அதிபரையும், முழு பொலிஸ் சேவையையும் குற்றம் சாட்டும் வகையில் ஊடகங்கள் செயற்படுகின்றன - என்றார். (31)

# ஒரு நாளுக்கு 105 வாகன விபத்துகள்; சராசரியாக எட்டுப் பேர் சாவு

கொழும்பு, ஒக்.6

இலங்கையில் நாளாந்தம் வாகன விபத்துக்களால் 7 தொடக்கம் 8 பேர் வரை உயிரிழப்பதாகப் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பாதுகாப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அரச நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சில் நேற்றுமுன்தினம் அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தலமையில் நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நாளாந்தம் 100 தொடக்கம் 105 வாகன விபத்துச் சம்பவங்கள் பதிவாகின்றன. அதில் ஒரு நாளைக்கு சராசரியாக 7 முதல் 8 பேர் உயிரிழக்கின்றனர். 20 பேர் வரையில் காயமடைகின்றனர்.

வருடத்துக்கு வாகன விபத்துக்களால் சுமார் 3 ஆயிரம் பேருக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

ஒரு உயிரிழப்பை ஏற்படுத்தும் விபத்துச் சம்பவம் தொடர்பிலான முழுமையான விசாரணைகளுக்கு அரசு ஒரு மில்லியன் ரூபாவைச் செலவழிக்கின்றது. அப்படியானால் வருடத்துக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி விபத்துக்களின் பின்னரான நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படுகின்றது. விசாரணையாளர்கள், நீதிமன்ற விசாரணை, அரச இரசாயன பகுப்பாய்வு போன்ற செலவுகள் இதில் உள்ளடங்கும்.

இவ்வாறான விபத்துக்களைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

தண்டப்பணம் அறவிடும் முறைமையை இலத்திரனியல் முறையில் செயற்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். கடன் அட்டை, தொலைபேசி ஊடாக தண்டப்பணம் அறவிடும் வகையில் இந்த நடவடிக்கையை நாம் திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று சிசிரிவிகள் ஊடாக அவதானித்துப் போக்குவரத்துக் குற்றங்களை முன்னெடுப்போர் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும், போக்குவரத்து குற்றங்களில் ஈடுபடுவோரின் சாரதி அனுமதிப் பத்திரத்தில் புள்ளி முறையில் செயற்படுவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றன - என்றார்.

# புலிகள் போன்ற ஓர் அமைப்பு 100 ஆண்டுகளில் உருவாக முடியாது

கூறுகின்றார் நளின் பண்டார



கொழும்பு,ஒக். 6

விடுதலைப் புலிகளைப் போன்ற ஓர் அமைப்பு வடக்கில் எழுச்சி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று இலங்கையின் சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் சட்டம், ஒழுங்கு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பின் போது வடக்கில் செயற்படும் ஆவா குழு தொடர்பாக, மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொசான் பெர்னான்டோ விளக்கமளித்தார்.

# இனமுறுகலை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி

கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.6

நாட்டின் தற்போதைய நிலமைகளை வைத்துப்பார்க்கின்றபோது அரசு இனமுறுகலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை புலனாகின்றன என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெகான் ஷேரசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு அதிகாரத்துக்கு வருகின்றபோது அளுத்கம சம்பவம் தொடர்பில் சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகள் நடத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தது. ஆனால் அரசுக்கு அதற்கான திரணியற்ற (துணிவு) நிலையிலேயே உள்ளது. அந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கும் இரு அமைச்சர்கள் தற்போதைய அரசிலும் அமைச்சர்களாகவே இருக்கின்றார்கள். பொலிஸ் ஊழியர் ஒருவர் நடந்துகொண்ட முறைமை காரணமாகக் கடந்த புதன்கிழமை அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஆனால் அரச தலைவர், மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரைப் படுகொலை செய்வதற்கான சதி தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளபோதும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் இடைநிறுத்தம் செய்யப்படவில்லை.

அதேபோன்று பொலிஸ் மா அதிபர் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் 12 மில்லியன் காசோலை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதும் பொலிஸ் மா அதிபர் இடைநிறுத்தப்படவில்லை. இவ்வாறான பொலிஸ் மா அதிபரைக் கொண்ட பொலிஸ் தரப்பினால் இந்த நாட்டில் சுயாதீனமான விசாரணையொன்றை முன்னெடுக்க முடியும் என்று கருதுகின்றீர்களா?

2017ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கொலைச் சம்பவங்கள் 97 இடம்பெற்றுள்ளன. 2018ஆம் அண்டு முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் கொலைச் சம்பவங்கள் 327 இடம்பெற்றுள்ளன. ஆகவே இந்தப் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான தரப்பினால் எதனையும் செய்யமுயாது. அரச தலைவரே அதனை பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஆகவே தலைமை அமைச்சரை பொலிஸ்மா அதிபரும் பொலிஸ்மா அதிபரை தலைமை அமைச்சரும் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாதுகாத்துக்கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (31)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முதல்வர் விக்னேஸ்வரனின் அரசியல் எதிர்காலம்

தன்னுடைய அரசியல் பயணத்தின் அடுத்த கட்டத்தில் தான் தனித்து ஒரு கட்சியை இப்போதைக்குத் தொடங்கப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். “மக்கள்இயக்கத்தினைவலுப்படுத்திமக்களுடன்இணைந்து செயற்படுவதே எனது நோக்கம்” என்று தெரிவித்திருக்கிறார் அவர்.

தன்னைச் சந்தித்துப் பேசிய அமெரிக்கத் துணைத் தூதுவர் றொபேர்ட் கில்ரனிடம் தான் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தியிருந்தார் என்று கூறியிருக்கிறார் முதலமைச்சர். இதன் மூலம், வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் இந்த மாதத்துடன் முடிவுக்கு வரும் நிலையில் முதலமைச்சர் என்ன செய்யப்போகிறார் என்கிற அரசியல் எதிர்பார்ப்புகள் எல்லாவற்றுக்கும் அவர் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

குறிப்பாக அவர் என்ன செய்யப்போகிறார் என்கிற, எத்தகையை தலைமைத்துவத்தைத் தமிழ் மக்களுக்கு வழங்கப் போகிறார், தற்போது பதவியிலுள்ள மைத்திரி – ரணில் அரசுக்கு மாற்றான பாதையில் தமிழர்களின் அரசியலை வழிநடத்திச் செல்வதன் மூலம் மேற்குலக நாடுகளின் கரிசனைகளுக்கு சவால் விடுவாரா என்கிற மேற்கு நாடுகளின் கேள்விகள் பலவற்றுக்கும் பதிலளித்திருக்கிறார் முதலமைச்சர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தனி வழியே பிரிந்து செல்வதற்கான ஆசை முதலமைச்சருக்கு இருந்தாலும் தன்னைஒருநேர்மையாள்னாகவும்தூய்மையாளனாகவும் அவர் கட்டியெழுப்பிக் கொண்ட விம்பம் அதனைச் செய்வதற்கு அவருக்கு இடமளிக்காது. அதே நேரத்தில் தன்னைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தயாராக இருக்கும் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டமைப்புக்கு எதிரான அரசியலை முன்னெடுத்துச் சென்றால் அந்தக் கட்சிகள் தன்னை நடுவழியில் அம்போ என்று தவிக்கவிட்டுச் சென்றுவிடும் என்பதையும் புரியாதவரல்லர் முதலமைச்சர்.

அத்தோடு ஒரு அரசியல் கட்சியைத் தலைமை தாங்கி நடப்பது என்பது இலகுவான காரியமல்ல. அதற்குத் தனித் திறமையும் சாணக்கியமும் சூக்கும புத்தியும் அவசியம். நீதியைத் தராசில் போட்டு நிறுப்பதைப் போன்று விடயங்களை அணுகும் முதலமைச்சரின் அணுகுமுறைக்கு இவையெல்லாம் கிட்டவும் நெருங்கமுடியாதவை. எனவே ஒரு அரசியல் கட்சியை ஆரம்பித்து அதனை வழிநடத்தி முன்னெடுத்துச் சென்று வெற்றியைப் பெறுவதென்பது, இந்த வயதில் சாதாரணமானது அல்ல என்பதும் முதலமைச்சருக்குத் தெளிவாகியிருக்கும்.

அதனடிப்படையிலேயே அவர் தமிழ் மக்கள் பேரவை என்கிற அமைப்பின் ஊடாகத் தனது அரசியலை நகர்த்துவது என்கிற முடிவை எடுத்திருப்பார். இந்த நிலைப்பாட்டின் மூலம் அவரால் இரண்டு காரியங்களைச் சாதிக்க முடியும். ஒன்று கூட்டமைப்புக்கு எதிரான அரசியலின் தலைமைச் சக்தியாகத் தன்னைத் தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்வது. இரண்டாவது தான் அரசியலில் இருந்து அந்நியப்பட்டுப் போகாமல் தனக்கான தலைமைத்துவ வாய்ப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வது. இதன் மூலம் சில வருடங்களின் பின்னர் அரசியல் களநிலவரங்களுக்கு ஏற்ப மீண்டும் முன்னணி அரசியல் பதவிகளுக்குப் போட்டி போடக்கூடிய தனது வலுவைச் சேமித்துக்கொள்வது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இப்போதைக்குக் கூட்டமைப்புக்கு எதிரான ஓர் அரசியல் கட்சியைத் தொடங்காமல் விட்டதன் மூலம் தமிழ் அரசியலின் பாலபாடமான “துரோகி” என்கிற பட்டத்தைத் தாங்குவதில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர். அவருடைய அரசியல் பயணத்தில் அவர் சாணக்கியமாக எடுத்திருக்கக்கூடிய ஒரு முடிவாக இதனைக் கொள்ளலாம். இது மக்கள் மத்தியில் அவருக்கு இருக்கும் செல்வாக்கை வலுப்படுத்துவதற்கும் உதவும். ஆனால் அவரது இந்த முடிவு அவரை நம்பி, அவரின் கீழ் குளிர்காயும் எதிர்பார்ப்புடன் இருந்த பல கட்சிகளுக்கு ஏமாற்றத்தையும் விசனத்தையும் கொடுக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை.

இவற்றையெல்லாம் சமாளித்து தன்னை அடுத்துவரும் சில வருடங்களில் நிலைநிறுத்திக்கொள்ளும் விதத்தில்தான் முதலமைச்சரின் அரசியல் வெற்றி தங்கியிருக்கிறது.

# நாட்டின் பொருளாதார மீட்சி விரைவில் சாத்தியமாகுமா?

சேரலாதன்



இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடருமேயானால் மக்கள் மீள முடியாத வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டு விடுவார்கள். நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக தலைமை அமைச்சர் வெளிப்படையாக எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு நிலைமை எல்லை மீறிச் சென்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது .

போர் ஓய்ந்து 10 ஆண்டுகளை நெருங்கி வரும் நிலையில், நாடு தனது பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மெல்ல மெல்ல மீண்டெழுந்திருக்க வேண்டும். ஆனால் மீண்டெழுவதற்குப் பதிலாக மேன்மேலும் வீழ்ச்சியைக் காணமுடிகின்றது. இலங்கை ரூபாவின் மதிப்பு அமெரிக்க டொலருக்கு எதிராகப் பெரும் வீழ்ச்சியைக் காண்பித்து இருக்கின்றது. இதனால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. நாட்டின் உற்பத்தி என்றுமில்லாத அளவுக்குக் குறைவான நிலையில் காணப்படுவதால் இறக்குமதிகளின் அளவு அதிகரித்துள்ளது. உறை பொருள்களை மட்டுமல்லாது அநேகமான ஏனைய பொருள்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை நாட்டுக்குப் பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

### பழங்கால நெற்களஞ்சியம்

மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த நாடு ஒரு நெற் களஞ்சியமாக விளங்கியது. அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையே அப்போது எழவில்லை. பிற நாடுகளுக்கு அதை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் நாடு இருந்தது. மன்னர்கள் விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெறும் பொருட்டு ஏராளமான குளங்களை வெட்டிப் பராமரித்ததால் நீருக்குத் தட்டுப்பாடு காணப்படவில்லை. ஆனால், இன்று அத்தகையதொரு நிலை காணப்படவில்லை. நாட்டின் சில பகுதிகளில் மகாவலி நீர் கிடைக்கும் போது வேறு பகுதிகள் வறட்சியின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றன.

வடபகுதியிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. இங்கு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அரசு அக்கறை காட்டுவதில்லை. மழை பெய்தால் விவசாய முயற்சிகளை இங்கு மேற்கொள்ள முடியாது என்பதுடன் குடி தண்ணீரும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். ஆனால் மகாவலி நீரை வடக்கே திருப்பி விடுவதில் அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே செயற்பட்டு வருகின்றது.

போர் இடம் பெற்ற போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்குப் பல நாடுகள் இலங்கைக்கு உதவின. இந்த நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். ஆனால், இலங்கையின் அவல நிலையைச் சீனா தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. இலங்கைக்குப் பெரும் தொகைப் பணத்தைக் கடனாக வழங்கிக் கடன் பொறிக்குள் மீளமுடியாதவாறு அந்த நாட்டைச் சிக்க வைத்துள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் வசமாகியுள்ளது.


கொழும்புத் துறைமுக நகரும் சீனாவுக்கே வழங்கப்பட்டுவிட்டது. இதைவிட நாட்டின் பெரிய அபிவிருத்தித் திட்டங்களில் அந்த நாடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இதனால் சீனாவை மீறிச் செயற்பட முடியாததொரு பொறிக்குள் இலங்கை மாட்டிக் கொண்டுவிட்டது. இந்த நாட்டில் இயற்கை வளங்களுக்குக் குறைவில்லை. நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ளதால் கடல் வளமும் நிறையவே உள்ளது. ஆனால் இவை உரிய வகையில் பயன்படுத்தப்படுவதில்லை . இதனால் பொருளாதார ரீதியிலான நன்மைகளையும் பெற முடியவில்லை. இதைவிட ஊழல் மற்றும் மோசடிகளால் நாடு சீரழிந்து காணப்படுகின்றது. பொருளாதார வீழ்ச்சிக்கு இவற்றையும் காரணமாகக் கூற முடியும்.

### ஊழல் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது

ஊழல், மோசடியாளர்கள் தண்டனை பெறுவதிலிருந்து தப்பி விடுவதால் இத்தகைய குற்றங்கள் பெருகிச் செல்கின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார மீட்சியென்பது ஆட்சியாளர்களால் மட்டுமே தீர்மானிக்கக் கூடிய ஒன்றல்ல. மக்களுக்கும் இதில் பெரும் பங்கு உள்ளது. பொருளாதாரத்தில் மீட்சி பெறும் வகையில் சிக்கனமாக வாழ்வதற்கு அவர்கள் பழகிக்கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும். எதற்கெடுத்தாலும் அரசை நம்பியிராது தமது தேவைகளை இயன்றளவு பூர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவை ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றினாலும் காலப் போக்கில் பழக்கப்பட்டுவிடும். அரசியல்வாதிகள் சிக்கனத்தைக் கடைப்பிடித்து மக்களுக்கு முன்னுதாரமாகத் திகழ வேண்டும்.

ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வதையும், வெளிநாடுகளுக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொள்வதையும் அவர்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அது மட்டுமல்லாது பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு ஆடம்பர விருந்துகளை நடத்துவதும் நிறுத்தப்படல் வேண்டும். சுருக்கமாகக் கூறினால் உற்பத்திகளை பெருக்குவதும், இறக்குமதிகளை குறைப்பதும், வெளிநாடுகளிலிருந்து கடன்களை வாங்குவதைத் தவிர்ப்பதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடியன. கட்டுப்பாடுகள் இன்றிய வகையில் வாகனங்களை இறக்குமதி கொள்வதால் எரிபொருள்களை இறக்குமதி கொள்வதற்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இதையும் ஓரளவு கட்டுப்படுத்துதல் வேண்டும். ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் கடுமையான தண்டனையை வழங்குவதன் மூலமாக அவர்களையும் கட்டுப்படுத்திட முடியும். ஆட்சியாளர்கள் பொய்யாக செயற்படுவதும், நாட்டு மக்கள் நாட்டின் நிலையறிந்து நகர்ந்து கொள்வதும் அவசியமாகும். இவை மீறப்படுமானால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வெறும் கனவாகவே மாறிவிடும்.




# இறுதிப் போரும் கருணாநிதியும்

தேவநாயகம் தேவானந்த்

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-42

தொன்னூறுகளின் தொடக்கத்தில் பல முக்கிய வரலாற்றுச் சம்பவங்கள் இடம்பெற்றன. 1989ஆம் ஆண்டில் இந்திய அரசில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புலிகளைக் கருணாநிதி ஊக்குவிப்பதாகக்கூறி 1991ஆம் ஆண்டு ஜனவரி 30இல் கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது. இது நடந்து நான்கு மாதங்களுக்குப் பின்னர் ராஜீவ்காந்தி தமிழகத்தில் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் இந்திய நிலைப்பாடும் தமிழக நிலைப்பாடும் முற்று முழுதாகப் புலிகளுக்கு எதிராக மாறியது.

இதே வேளை, புலிகள் முப்படை அமைத்துத் தம்மை மரபுவழி இராணுவமாக நிலைநாட்டிக் கொண்டிருந்தனர். கடற்புலிகள் 1992ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டனர். வான்புலிகள் (விமானப்படை) உருவாக்கப்பட்டனர். மூன்று படைகளைக் கொண்ட ஒரே ஒரு போராளி அமைப்பு என்ற பெயரைப் புலிகள் பெற்றார்கள். இதே வேளை தமிழ்நாட்டில் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரையிலும், 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலும் தமிழகத்தில் கருணாநிதி முதல்வராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் கருணாநிதி புலிகளுக்கு ஆதரவாக இருக்கவில்லை. ஆனால், தனித் தமிழ் ஈழமே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பதை மட்டும் அவர் அடிக்கடி நிலைநிறுத்திக் கொண்டிருந்தார்.



### கருணாநிதியின் தீர்வு யோசனை

2000ஆம் ஆண்டில் மத்தியில் வாஜ்பாய் அரசுடன் கருணாநிதி கூட்டணியில் இருந்தபோது இலங்கையில் செக்கஸ்லோவாகியா மாதிரியில் தீர்வு காணலாம் என யோசனை கூறியிருந்தார். 2002ஆம் ஆண்டில் நோர்வேயின் முயற்சியால் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது பிரபாகரன் வெளிப்பட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். இது பன்னாட்டு அளவில் முக்கியமான சம்பவமாகப் பதிவாகியது. பன்னாட்டு ஊடகங்கள் பலவும் பிரபாகரனின் பத்திரிகையாளர் சந்திப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தன. இதன்போது, ராஜீவ் கொலையைப் பிரபாகரன் 'ஒரு துன்பியல் சம்பவம்' என்று குறிப்பிட்டார். நோர்வேயின் அமைதி முயற்சிகள் வழக்கம் போல் வெற்றி பெறவில்லை. இருதரப்பினர் இடையிலும் மோதல் தவிர்க்க முடியாதது ஆனது.



### கருணாநிதி மீது கடும் அதிருப்தி

2005ஆம் ஆண்டில் மகிந்த அதிபர் ஆனதன் பின்னர் நோர்வேயின் அமைதி முயற்சி முற்றிலுமாக முடிவுக்கு வந்தது. புலிகளின் படைப் பிரிவில் இருந்த கருணா அம்மான், 2004ஆம் ஆண்டு மார்ச்சில் பிரபாகரனிடமிருந்து பிரிந்து சென்றார். இது புலிகள் அமைப்புக்குப் பெரிய சவாலாக அமைந்தது. 2006ஆம் ஆண்டில் மீண்டும் போர் ஆரம்பமானது. அது 2009ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. புலிகள் தங்கள் ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்தார்கள். இந்தக் கால கட்டம் தான் ஈழ விடுதலைப்போராட்டத்தின் இறுதிப் போராகக் குறிப்பிடப்படுகிறது. மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. பல ஆயிரக்கணக்கான போராளிகளும், பொது மக்களும் கொல்லப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில் இந்திய மத்திய அரசில் அங்கம் வகித்த கருணாநிதி ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கவில்லை என்ற விமர்சனத்துக்கு ஆளானார். 2008-2009ஆம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களை காப்பாற்றும் தகுதி நிலையில் இருந்தும் கருணாநிதி போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது அவர் மீதான விமர்சனம் ஆகும்.

### ஈழத் தமிழருக்கு ஆதரவான போராட்டம்

இலங்கைத் தமிழர்களைக் காக்கவும், இந்திய அரசின் துரோகத்தைத் தடுக்கவும், இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படுத்தவும் கோரி, இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கம், தமிழகமெங்கும் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாளன்று பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தது. அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க அரசு 'பொது வேலை நிறுத்தம் கூடாது, உச்சநீதிமன்றம் இதற்குத் தடை விதித்து இருக்கிறது என்று, தமிழக அரசின் பெயரால் அறிக்கை வெளியிட்டார். ஆனால், இந்தியாவின் உச்சநீதிமன்றத்தில், தலைமை நீதிபதியும் மற்றும் இரண்டு நீதிபதிகளும் அடங்கிய அமர்வில் மக்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதைத் தடுக்க முடியாது என்றும் அதற்குத் தடை விதிக்க முடியாது என்றும் தீர்ப்பளித்தனர்.

இதிலிருந்து ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான சூழல் தமிழகத்தில் உருவானது. இளைஞர்கள் ஈழ ஆதரவுப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். தமிழ்நாட்டில் மொழிப்போராட்டத்துக்குப் பின்னர் ஏற்பட்ட பேரெழுச்சியாக ஈழத் தமிழர் ஆதரவுப் பொராட்டம் பார்க்கப்பட்டது. தி.மு.க அரசுக்கு இது பெரும் தலையிடியாக அமைந்தது. முதல்வர் கலைஞர் கருணாநிதி ஈழ ஆதரவுச் செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார். இருந்தாலும் கருணாநிதி மற்றும் தி.மு.காவுக்கு எதிரான அலை தமிழகத்தில் விஸ்வரூபம் எடுத்தது.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

### மோசடிகளின் உறைவிடமாக மாறியுள்ள வடக்கு மாகாணசபை

வடக்குமாகாணசபையில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக அறியும்போது மனதில் இனம் புரியாத வேதனைகள் எழுகின்றன. வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட போது வட பகுதி மக்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டனர். எமக்கென ஓர் அரசு அமையப்போகின்றது. எமது துன்பங்களுக்கு ஒரு விடிவு கிடைத்துவிடுமென அவர்கள் நம்பினர். ஆனால் அவர்களது நம்பிக்கை வீண்போய்விட்டது. முதலமைச்சர் விக்னேஸ்வரனும் மக்கள் எதிர்பார்ப்புக்களைப் போன்று நடந்து கொள்ளவில்லை. கூட்டமைப்பினுள் இருந்து கொண்டே அதற்கு எதிராக அவர் செயல்படுகிறார். மாகாணசபையில் குழப்பங்கள் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளார். மாகாணசபையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகளுக்குப் பொறுப்புக் கூற மேண்டிய முதலமைச்சர் அந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. ஏற்கனவே நான்கு மாகாண அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் தற்போது ஐந்தாவது அமைச்சர் மீதும் மோசடிக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் தமது அங்கிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அந்த அமைச்சர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது மிகவும் வெட்கக் கேடான விடயமாகும். இதே போன்று ஏனைய மாகாணசபை உறுப்பினர்களும் நடந்திருக்கக் கூடுமென்று சந்தேகம் மக்களிடம் எமுந்துள்ளது. ஏனேன்றால் மாகாணாசபை உறுப்பினராக வந்ததன் பின்னர் சில உறுப்பினர்களின் நிதி உதவி தொடர்பாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது வடக்குமாகாணசபை சில மோசடியாளர்களுக்கு உதவி புரிவதாத் தோன்றுகின்றது. மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதும் தெளிவாகத் தெரிகின்றது.

*மா. ஈஸ்வரமூர்த்தி. பன்னாலை,தெல்லிப்பளை*

### சிந்தித்துச் செயற்படுவோமா?

சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குவது தொடர்பாடல் சேவை. தொடர்பாடல் மூலமே எமது சமூகக் கட்டுமானம் சிறப்பாக மேலோங்கி நிற்கின்றது. அந்த வகையில் தொடர்பாடல் சாதனமாக விளங்கும் கடிதத்தின் (தபால்) பங்கு இன்றியமையாதது. இந்தச் சேவையில் மழை,வெயில் பாராது, உடல் வருத்தம் பாராது சிறப்பாகச் செயற்பட்டு வரும் எம் தபால் ஊழியர்கள் பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்து நடப்போமா? மணிக்கணக்கில் சைக்கிள் மிதித்து மழை,வெயிலிலும் கடிதங்களை சுமந்து வந்து எமது வீடுகளுக்கு முன்வந்து நின்று மணியடிக்கும்போது, நாம் வேறு வேலைகளில் ஈடுபடுவதும் அவர்களை பலமணி நேரம் தாமதிக்க வைப்பதும் வேதனையைத் தருகின்றது. சில வீடுகளில் ஆள்களில் இல்லாத நிலமையால், அவர்கள் அலைய வேண்டிய நிலமையும் ஏற்படுகின்றது.

இதைச் சரிசெய்து அவர்களையும் மனிதர்களாக மதிப்போமா? உங்கள் வீட்டு வாயிலினிலே சிறிய தபால் பெட்டியை அனைவரும் வைப்பதற்கு முன்வாருங்கள். அத்துடன் நீங்கள் அஞ்சல் முகவரியிடும் போது உங்கள் வீட்டு இலக்கத்தையும் குறிப்புடுவீர்களானால் அஞ்சல் ஊழியர்களின் வீணான அலைச்சலும் தவிர்க்கப்படும்

*பொ.தவராசலிங்கம் , கொக்குவில்.*



# 2018ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல்



ஒஸ்லோ.ஒக்.6
2018ஆம் ஆண்டு அமைதிக்கானநோபல் பரிசு டென்னிஸ் முக்வேஜா மற்றும் நாடியா முராத் ஆகிய இருவருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றன. அந்த வகையில், 2018ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று அறிவிக்கப்பட்டது. கொங்கோ நாட்டைச் சேந்த டென்னிஸ் முக்வேஜா மற்றும் ஈராக் நாட்டைச் சேர்ந்த நாடியா முராத் ஆகியோருக்கு இந்த அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. கொங்கோ நாட்டைச் சேர்ந்த மருத்துவரான டென்னிஸ் முக்வேஜா, போர்களில் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக போராடியவர். ஈராக் நாட்டை சேர்ந்த நாடியா முராத், ஈராக்கில் உள்ள சிறுபான்மை இனத்தவரான யாஷிதி இனப் பெண்களின் உரிமைக்காகப் போராடியவர். வருகின்ற 8ஆம் திகதி பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி காலமானார் 'கடவுளின் துகள்' கண்டு பிடித்தவர்

வோஷிங்டன். ஒக். 06
'கடவுளின் துகள்' கண்டுபிடித்த அமெரிக்காவைச் சேர்ந்த பிரபலமான இயற்பியல் விஞ்ஞானி லியோன் லெடர்மேன் காலமானார். அமெரிக்காவை சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி லியோன் லெடர்மேன் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 96. இடாஹோ மாகாணத்தில் ரெக்ஸ்பர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் அவரது உயிர் பிரிந்தது. அவர் 'முவான் நியுட்ரினோ' கண்டுபிடிப்புக்காக, வேறு 2 விஞ்ஞானிகளுடன் இணைந்து 1988ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்'கடவுளின் துகள்' என்று பிரபலமாக அழைக்கப்படும் கண்டுபிடிப்பையும் இவர் தான் கண்டுபிடித்துள்ளார். லியோன் லெடர்மேனுக்கு மனைவியும், 3 பிள்ளைகளும் உள்ளனர்.

# "இனப்படுகொலைக்கு இருந்ததால் வரவேற்கப்ப

## சூகியின் குடியுரிமையை நீக்கிய க

ஒட்டோவா.ஒக்.6
மியன்மாரில் ரொஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தது இனப்படுகொலை. நாம் அதை அவ்வாறுதான் கூற வேண்டும் என்றுகூறியுள்ளது கனடா. இதற்கு முன்பாகவே அது மியன்மாரின் தலைவர் சூகிக்கு வழங்கியிருந்த குடியுரிமையை நீக்கியிருந்தது.

ரொஹிங்யாமக்கள்விவகாரத்தை மியன்மாரின் தலைவர் சூகி கையாண்ட விதத்தை விமர்சித்த கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூட்டோ, ''கனடாவின் கௌரவக் குடியுரிமைக்குச் சூகி தகுதியானவரா?" என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

ரொஹிங்கியா இஸ்லாமியர்களுக்கு எதிராக நடந்த வன்முறையைத் தடுக்கத் தவறியதன் காரணமாகச் சூகிக்கு வழங்கப்பட்ட கனாடாவின் குடியுரிமையைத் திரும்பப் பெறுவதற்காகக் கனடா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒரு மனதாக வாக்களிப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

சூகிக்கு வழங்கிய குடியுரிமையை திரும்பப் பெறுவதாகக் கனடா அதிகார பூர்வமாக அறிவித்தது. அத்துடன், 'அங்கு நடந்த அட்டூழியங்கள் என்ன என்பதை நாம் உணர வேண்டும். இது இனப்படுகொலை. நாம் அதை அவ்வாறே அழைக்க வேண்டும். இந்த உலகம் சூகியிடம் மியான்மாரில் ஜனநாயகம் மற்றும் அமைதிக்கான நம்பிக்கையை எதிர்பார்த்தது. ஆனால் அது நடக்கவில்லை. உலகெங்கிலும் உள்ளவர்களுக்கு ஓர் அறிகுறியை நாங்கள் அனுப்புகிறோம். நீங்கள் இனப்படுகொலைக்குக் கூட்டாளியாக இருந்தல் நிச்சயம் கனடாவால் வரவேற்கப்படமாட்டீர்கள்' என்று கனடாவின் செனற்சபை உறுப்பினர் ஒருவர் கூறியமையைப் பன்னாட்டு ஊடகங்கள் வெளிப்ப





டுத்தி நிற்கின்றன
கனடா அரசின்
பட்டம் ஆங் சா
டது. கனடா அர
இந்தப் பட்டம
குறிப்பிடத்தக்க

**பின்னணி**

பௌத்த மதத்
யாக வாழு
ரோஹிஞ்சா
எதிரான வன்
பெரும்பா

# தென்கொரிய முன்னாள் அதிபருக்கு 15 ஆ



சியோல், ஒக். 6
தென்கொரியாவில் லீ மயுங்பாக் அதிபராக இருந்தபோது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி இலஞ்ச ஊழலில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

சியோல் நீதிமன்றத்தில் விசாரணை இடம் பெற்று வந்தது. இந்தக் வழக்கின் வாதப் பிரதிவாதங்கள் நிறைவடைந்த நிலையில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. லீ மயுங்பாக் மீதான ஊழல் குற்றச்சாட்டு நிரூபணமானதால் லீ மயுங்பாக்கிற்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதுதவிர 13 பில்லியன் வொன் (தென்கொரிய பணம்) அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காகத் தன் மீது லஞ்ச ஊழல் வழக்குத் தொடரப்பட்டதாக லீ தெரிவித்தார். அவருக்கு லஞ்சம் எதுவும் கொடுக்கவில்லை என குற்றம்சாட்டப்பட்ட 'சாம்சங்' நிறுவனமும் கூறியுள்ளது. தென் கொரியாவில் ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை பெறும் 4ஆவது முன்னாள் தலைவர் லீ என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பாரீஸில் மாதத்தில் ஒரு நாள் மகிழுந்துகள் பாவனைத் தடை

பாரீஸ், ஒக். 6
காற்று மாசுஅடைவதைக் கட்டுப்படுத்தும் நேக்கத்துடன் பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் மாதம் தோறும் முதல் ஞாயிறு அன்று மகிழுந்துகளைப் பாவிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலேயே பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் தான் காற்று மிகவும் அதிகமாக மாசுபட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாகப் பல்வேறு நடவடிக்கைகளைப் பாரிஸ் நகர நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாதத்தின் முதல் ஞாயிற்றுகிழமைகளில் நகரின் முக்கிய பகுதிகளில் மகிழுந்துகளின் பாவனைத் தடை செய்யப்பட்டுள்ளது. காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இரண்டு சக்கர வாகனங்கள், மிதி வண்டிகள் மற்றும் சாலையோர நடைபாதை ஆகியவற்றை அன்று ஒரு நாள் மட்டும் பொதுமக்கள் பயன்படுத்தும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், விநியேக வாகனங்கள், மருத்துவ அவசர வாகனங்களுக்கு இந்தத் தடையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

# து உடந்தையாக
# கப்பட மாட்டீர்கள்”

## ய கனடா கருத்து





த்தி நிற்கின்றன. 2007ஆம் ஆண்டு ...னடா அரசின் கௌரவ குடியுரிமைப் ...ட்டம் ஆங் சாங் சூகிக்கு வழங்கப்பட்...து. கனடா அரசு சிலருக்கு மட்டுமே ...ந்தப் பட்டத்தை வழங்கியுள்ளமை ...றிப்பிடத்தக்கது.

**...ன்னணி**

...பௌத்த மதத்தினர் பெரும்பான்மை ...ாக வாழும் மியான்மரில், ...ரோஹிஞ்சா இஸ்லாமியர்களுக்கு ...திரான வன்முறைகளை பௌத்த ...பெரும்பான்மையினருடன் இணைந்து மியன்மார் அரச படைகளும் நிகழ்த்தியிருந்தன. இதனால், அங்கிருந்து இலட்சக்கணக்கான ரொஹிங்கியா முஸ்லிம்கள் பக்கத்து நாடான பங்களாதேஷுல் அகதிகளாகக் குடியேறினர். மியான்மர் இராணுவம் வன்முறையில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று, சூகிக்குத் தொடர்ந்து பன்னாட்டு அழுத்தம் இருந்தாலும், வன்முறைகள் நடக்கவில்லை என்றே அவர் மறுத்து வந்தார். இது பெரும் விவகாரமாக மாறியிருந்தது. இந்த நிலையில் தான் 2007ஆம் ஆண்டில் ஆங் சாங் சூகிக்குத் தான் வழங்கியிருந்த கௌரவ குடியுரிமையைத் திரும்பப் பெற்றிருந்தது கனடா.

# 15 ஆண்டுகள் சிறை






# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

டோக்கியோ.ஒக்.6

இந்தோனேசியாவின் சுலாவேசித் தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமும், சும்பா தீவில் பூகம்பமும், அதன் பின்பான சுனாமியால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள நிலையில் நேற்று அதிகாலை ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 ஆகப் பதிவாகியுள்ளது என்று அமெரிக்கப் புவியில் மையம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் ஹொக்கைடோ பிரதேசத்தின் சில பகுதிகளில் மட்டும் குறைந்தது 5 ஆகவும் உச்சபட்சமாக 7ஆகவும் ஜப்பானிய தீவிர ரிக்டர் அதிர்வு பதிவாகியுள்ளதாக ஜப்பானிய வானியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ஓர் அட்சரேகைக்கு வடக்கே 42.6 டிகிரியிலும் தெற்கே 142.0 டிகிரியிலும் 30 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலைகொண்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் உடனடியாக வெளி வரவில்லை. சுனாமி எச்சரிக்கையும் வெளியிடப்படவில்லை.

# கரும்புத் தோட்டத்தில் வீழ்ந்தது விமானம்

வானில் பறந்துகொண்டிருந்த இந்திய விமானப் படையின் விமானம் ஒன்று கரும்புத் தோட்டத்தில் வீழ்ந்தது. இதில் பயணித்த இரண்டு விமானிகள் உயிர் தப்பினர்.

உத்தரப் பிரதேசம் பாக்பத் மாவட்டத்தில் இன்று காலை இந்திய விமானப் படையின் சிறிய ரக விமானம் ஒன்று வானில் பறந்து கொண்டிருந்தது. திடீரென ஏற்பட்ட இயநதரக் கோளாறினால் திடீரென அது கட்டுப்பாட்டை இழந்தது

இதனால் அதில் பறந்துகொண்டிருந்த இரண்டு விமானிகளும் உடனே எச்சரிக்கை அடைந்தனர். பாராசூட்டை அணிந்துகொண்டு விமானத்தில் இருந்து கீழே குதித்தனர். சிறிது தூரம் கட்டுப்பாடின்றிப் பறந்த விமானம் பின்னர் கரும்புத் தோட்டத்தில் வீழ்ந்தது. விமானப் படை விமானிகள் இருவரும் காயங்கள் இல்லாமல் உயிர்தப்பியுள்ளனர்.




இந்தியப் பாதுகாப்புத் துறைக்கென்று தனியே உள்ள அதிகாரிகள் குழு உத்தியோகபூர்வ விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

# “நாட்டை விட்டு வெளியேறுங்கள்” பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களுக்குப் பாகிஸ்தான் உத்தரவு

இஸ்லமாபாத், ஒக். 6

பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களை தங்கள் செயல்பாடுகளை முடித்துக் கொண்டு 60 நாள்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டிருக்கிறது.



பாகிஸ்தானின் இந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமான 'ஆக்சன் எய்ட்' ,பாகிஸ்தானின் பொதுச் சமூகம் மீதான சமீபத்திய தாக்குதல்கள் குறித்த கவலையை இந்த முடிவு அதிகரிக்கிறது" எனக் கூறியுள் ளது. பாகிஸ்தானின் உள்துறை அமைச்சகம் இது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் 'ஆக்சன் எய்ட்' நிறுவனத்துக்கு உள்துறை அமைச்சு எழுதிய கடிதம் ஊடகங்களின் பார்வைக்கு வந்துள்ளது. அதில் அந்த நிறுவனம் பாகிஸ்தானின் தொண்டு நிறுவன வேலையைத் தொடர, பதிவு செய்வதற்காக ஆறு மாத காலத்தில் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. நாட்டை விட்டுப் பதினெட்டுத் தொண்டு நிறுவனங்கள் வெளியேற்றப்படுவதாக 'ஆக்சன் எய்ட' நிறுவனம் பி.ப.pசி யிடம் தெரிவித்தது. பாகிஸ்தானில் கருத்துச் சுதந்திரத்துக்காகப் பரப்புரை செய்பவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களிடையே கவலைகள் அதிகரித்து வந்த நிலையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஒசாமா பின்லேடனைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்காவின் சி.ஐ.ஏ நிறுவனம் தடுப்பூசித் திட்டத்தின் பேரில் பாகிஸ்த்தானுக்குள் நுழைந்து செயல்பட்டு வந்தது 2011 இல் அது கண்டறியப்பட்டபிறகு, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மீதான பாகிஸ்தான் உளவுத்துறையின் சந்தேகங்கள் அதிகரித்து வந்தன


ஆக்சன் எய்ட் மற்றும் சில பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்கள் பாகிஸ்தானில் இருந்து வெளியேறவேண்டும் என கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அரசு உத்தரவிட்டிருந்தது. ஆனால் மேற்குலக அரசுகளின் அழுத்தம் காரணமாக அந்நிறுவனங்கள் தொடர்ந்தும் பாகிஸ்தானின் பணிபுரிய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. தொண்டு நிறுவனங்கள் அரசின் முடிவு குறித்து மேல் முறையீடு செய்தன. ஆக்சன் எய்ட் மற்றும் 'பிளான் இன்டர்நெஷனல்' ஆகிய தொண்டு நிறுவனங்கள் தற்போது அரசிடம் இருந்து கடிதம் கிடைத்துள்ளதாகவும் தங்களது மேல் முறையீடு தோல்வியடைந்துள்ளதாகவும் ஆனால் அதற்கான காரணங்களை அரசு விளக்கவில்லை என்றும் உறுதி செய்திருக்கின்றன.


# 'ட்ரம்ப் அலேர்ட்' அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை




நியூயோர்க்.ஒக்.6

கிட்டத்தட்ட 225 மில்லியன் அமெரிக்கர்களுக்கு (அலைபேசிப் பயனாளர்களுக்கு) 'அதிபர் எச்சரிக்கை' முன் எச்சரிக்கை என்ற பெயரில் அலைபேசியில் குறுந்தகவல் மூலமான அறிவிப்பு வந்திருக்கிறது. இந்த அறிவிப்பை எதிர்பாராத அமெரிக்கர்கள் போதிய தெளிவு இல்லாமல் குழப்பத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். இந்த 'ட்ரம்ப் அலேர்ட்' அறிவிப்பு அவசர காலங்களில் மக்களை முன் கூட்டியே எச்சரிக்கை செய்யும் வண்ணம் செய்திகளை அனுப்படுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சோதனை முறை என்றும், ஏவுகணைத் தாக்குதல், தீவிரவாதத் தாக்குதல் மற்றும் இயற்கைப் பேரிடர் காலங்களில் மக்களுக்கு தகவல் அளிப்பதற்கு இது பயன்படும் என்றும் இதற்கு 'ட்ரம்ப் அலேர்ட்' என்றும் பெயரிட்டப்பட்டாலும் இதற்கும் அதிபர் ட்ரம்புக்கும் நேரடித் தொடர்பில்லை என்றும் இதை மத்திய அவசர மேலாண்மை இயக்குகிறது என்றும் பின்னர் பொது மக்களுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது.





சினிமா

# நவீன் இயக்கத்தில் அருண் விஜய்!

மூடர் கூடம் படத்தின் மூலம் இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும், நடிகராகவும் அறிமுகமானவர் நவீன். தற்போது அலாவுதீனின் அற்புத கேமரா என்ற படத்தை இயக்கி நடித்துள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக கயல் ஆனந்தி நடித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, விஜய் ஆண்டனியை நாயகனாக வைத்து ஒரு படத்தை இயக்குகிறார். இந்த படத்தில் நடிகர் அருண் விஜய் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.



twitter.com/TrollCopytwitz

வெறும்
கேள்விக்குறிகளாலும்,
ஆச்சரியக்குறிகளாலும்
நிரப்பப்பட்ட புத்தகம்
#வாழ்க்கை



twitter.com/azam_twitz

எமக்குச் செய்த உதவி கடுகளவாய்
இருந்தாலும் அதை தக்க சமயத்தில்
செய்வது மலையளவு
சந்தோஷத்தை தரும்!!!

## ஒரு சிறுவனின் சந்தோசத்துக்காக தன்னையே சிறுமியாக மாற்றிக் கொண்ட தாய் அன்னை திரேசா



**ஆசிரியர்** : உன் பெயர் என்னப்பா?
**மாணவன்** : பசுவுக்கு உடம்பு சரியில்லை.
**ஆசிரியர்** : என்னப்பா சொல்கிறாய்? புரியவில்லை?
**மாணவன்**: என் பெயர் 'கெள' 'சிக்' சேர்!
**ஆசிரியர்** : சரி, இப்படித் தூய தமிழ்ல பேசி என்னைக் கொல்ல வேண்டாம். ஆங்கிலத்திலேயே பதில் சொல்லுப்பா.
**மாணவன்** : சரி சேர்..
**ஆசிரியர்** : உன்னுடைய அப்பா பெயர் என்ன?
**மாணவன்**: ' KING COW MILK' சேர்!
**ஆசிரியர்** : ஏண்டா மறுபடியும் படுத்துறாய்? தமிழிலையே சொல்லுடா!
**மாணவன்** : எங்க அப்பா பெயர் 'ராஜ' 'கோ' 'பால்' சேர்.
**ஆசிரியர்** : கடவுளே என்னைக் காப்பாற்று! இனிமே சத்தியமா உங்கிட்ட எதுவுமே கேட்க மாட்டேன்.



## நாளை

**07.10.2018**

ஞாயிற்றுக்கிழமை

**புரட்டாதி 21**

திதி: திரயோதசி பி.ப. 1.07 வரை
நட்சத்திரம்; பூரம் பி.ப. 3.15
சுபநேரம்: 9.02 – 10.32 வரை
ராகுகாலம்: 4.32– 6.02 வரை



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் எண்ணமும் செயலும் முரண்படலாம். குடும்பத்தினரின் உதவி நம்பிக்கையளிக்கும். தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும்.

**இடபம்:** பேச்சு, செயலில் உற்சாகம் வளரும். மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மிதுனம்:** அவசர கதியில் பேசி அவதிப்பட நேரிடலாம். நிதானமும், பொறுமையும் அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** நீதி நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**சிங்கம்:** அறிமுகமில்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் ஓரளவுக்கு இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**கன்னி:** அனைவரையும் அன்பால் அரவணைப்பீர்கள். தாமதமான செயலும் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும்.

**துலாம்:** முன்னர் செய்த உதவிக்கு நன்மை தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவீர்கள். இலாப மேலீடு உயரும்.

**விருச்சிகம்:** உங்கள் மனம் சங்கடப்படும் வகையில் சிலர் செயல்படுவர். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். இலாபம் உயரும்.

**தனுசு:** சிலர் உங்களிடம் பகட்டாக நடந்து கொள்வர். முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும்.

**மகரம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். துன்பமயமான சூழல் இஷ்டதெய்வ அருள் பலத்தால் விலகும்.

**கும்பம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். நேர்மையான வழியில் வெற்றி நடை போடுவீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும்.

**மீனம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு அணுகுவர். சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயல்படுவீர்கள். தேவைப்படும் வருமானம் சீராக இருக்கும்.

# பேஸ்புக் கவிதைகள்

- வராந்தாவிலேயே
இருந்த
வயதான தந்தை
இறந்த பின்
ஹோலுக்குள் வந்தார்
ஒளிப்படமாய்...!

- பறித்த மலரை
ஆண்டவனுக்குச்
சூட்டினாலென்ன?
கல்லறையில்
வைத்தாலென்ன?
மலருக்கென்னவோ
பறித்ததுமே வந்துவிட்டது
சாவு!

- வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே...!
வேலிக்கு அடியில்
ஊடுருவும் என் வேர்களை
என்ன செய்வாய்...?

- சர்க்கரை இல்லை...
கொழுப்பு இல்லை...
எஜமானரோடு
வோக்கிங் போகுது
ஜிம்மி...!"

- புறாக்கள் வளர்க்கும்
எதிர் வீட்டுக்காரர்
என்னிடமிருந்து
பறிக்கிறார்
பூனை வளர்க்கும்
சுதந்திரத்தை...."

## மரங்கள்



அன்று
வீட்டுக்கு ஒரு வீரன்
தேவை
என்றார்கள்,
வீரர்களை வளர்த்தோம்!

இன்று
வீட்டுக்கு ஒரு மரம்
வளப்பீர் என்கிறார்கள்
மரங்களை
வளர்க்கின்றார்...


# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 4 | | 2 | 8 |
| | 4 | 6 | | 3 | | | | |
| | | | | | | | | 5 |
| | 5 | 8 | | 2 | 6 | | | |
| | | | | | | | | |
| | | | 4 | 9 | | 5 | 7 | |
| 2 | | 3 | | | | | | |
| | | | | 1 | | 3 | 9 | |
| 4 | 7 | | 3 | | 9 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 5 | 8 | 7 | 1 | 6 | 2 | 4 |
| 1 | 8 | 7 | 2 | 4 | 6 | 3 | 9 | 5 |
| 2 | 6 | 4 | 3 | 9 | 5 | 8 | 7 | 1 |
| 7 | 5 | 9 | 4 | 3 | 8 | 1 | 6 | 2 |
| 8 | 4 | 3 | 6 | 1 | 2 | 9 | 5 | 7 |
| 6 | 1 | 2 | 7 | 5 | 9 | 4 | 8 | 3 |
| 3 | 7 | 6 | 9 | 2 | 4 | 5 | 1 | 8 |
| 5 | 2 | 8 | 1 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 4 | 9 | 1 | 5 | 8 | 7 | 2 | 3 | 6 |

நேற்றைய விடை




# அப்பாவைப் பற்றி மகன் கூறுவது

5 வயதில் : அப்பாவால் செய்ய முடியாதது எதுவும் இல்லை.
7 வயதில் : என் அப்பாவுக்குப் பல விடயங்கள் தெரியும். அவை பற்றி நன்கு அறிந்துள்ளார்.
10 வயதில்: என் அப்பாவுக்கு எல்லா விடயங்கள் பற்றியும் நன்கு தெரியும்.
12 வயதில்: என் அப்பாவுக்கு ஒன்றுமே தெரியாது.
14 வயதில் : அவரா? அவருக்குக் காலம் மாறியதே தெரியாது. அது எங்கே புரிகிறது.
21 வயதில் : என்ன? அந்தாளிடம் போய் யோசனை கேட்பதா?
35 வயதில்: அவருக்கு ஏதோ கொஞ்சம் கொஞ்சம் தெரியும்.
40 வயதில் : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லை.
45 வயதில்: அவரின் யோசனையைக் கேட்டுவிட்டுப் பின் முடிவு எடுக்க லாம்.
50வயதில்: தந்தையார் இதுபோன்ற விடயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?
55 வயதில்: இந்த வேளையில் எனது தந்தையார் இல்லாதது உண்மையிலேயே கவலையாக இருக்கின்றது. ஏனென்றால் அவரின் ஆலோசனைகளைக் கேட்க முடியாமல் போய்விட்டதே. அவர் இன்னும் கொஞ்சக் காலம் எம்மோடு வாழ்ந்திருக்கலாம்.
60 வயதில்: எனது வயதில் அவருடைய அறிவும் அனுவமும் எங்கே? எனக்கேன் இது இல்லாது போய்விட்டது?

# ஆசிரியர் தினம்

- இன்று நாடெங்கிலும் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. சமூகத்தில் மதிப்புமிக்க பணிகளில் போற்றுதற்கரிய பணியாக என்றென்றும் விளங்குவது ஆசிரியப் பணியேயாகும்.
- நாட்டுக்கு ஏற்ற குடிமக்களை உருவாக்கிக் கொடுப்போர் ஆசிரியர்களே.
- பிள்ளைகளுக்கு பெற்றோருக்கு அடுத்ததாக ஆசிரியர்களே நல்ல பாதுகாவலர்களாகவும், வழிகாட்டிகளாகவும், அன்பான அன்னையர்களாவும், உற்ற நண்பர்களாகவும் விளங்குகிறார்கள்.
- ஆசிரியர்கள் வெறும் புத்தகக் கல்வியை மட்டும் மாணவர்களும் ஊட்டுபவர்களல்லர்.
- நல்லொழுக்கம், பண்பு, ஆன்மிகம், சமூகத்தின் வாழ்வியல் முறைமைகள், பொது அறிவு போன்ற அனைத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களை நாட்டின் நாளைய நல்ல தலைவர்களாக ஆக்கும் பணியை செய்கின்றனர்.
- ஆசிரியர்கள் தன்னலமற்ற தியாக மனப்பான்மை கொண்டவர்களாக மட்டுமல்ல, கற்பிக்கும் தொழிலை நேசிப்பவர்களாகவும் வாழ்கிறார்கள்.
- ஒரு மனிதனுக்குள் இருக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்து அவனை சமூகத்திற்கு ஒரு மனிதனாக அடையாளம் காட்டுபவர் ஆசிரியரே.
- மாணவர் சமூகத்துக்குத் தேவையான 'அன்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி' என அனைத்தையும் மாணவர்களுக்குக் கற்றுத் தந்து அவர்களை நல்லவர்களாக, பண்பாளர்களாக, சிறப்பானவர்களாக , அறிஞர்களாக, மேதைகளாக உயர்த்தும் உத்தம பணியைச் செய்யும் ஆசிரியர்களை மதிப்புறுத்த வேண்டியது மாணவர்களின் கடமை மட்டுமல்ல ஒரு சமுதாயத்தின் தலையாய கடமையுமாகும்.
- ஒக்ரோபர் 5ஆம் திகதியே உலக ஆசிரியர் தினமாக அறிவிக்கப்பட்டிருப்பினும் இந்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் தினம் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது.



# நுனிப்புல் மேயாதீர்கள்



சில வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும் தமது குட்டிகளுடன் புல்வெளி ஒன்றில் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கே நின்ற செம்மறி ஆட்டுக் குட்டிகள் புற்களின் நுனிக் கொழுந்துகளைத் தேடித் தேடி மேய்ந்து கொண்டிருந்தன. இதனைக் கவனித்த வெள்ளாடு, "எனதருமை செம்மறிக் குட்டிகளே! இப்படி நுனிக் கொழுந்துகளைப் பார்த்துப் பார்த்தக் கடிக்காதீர்கள். இன்று ஒருவருக்கு மட்டுமே உணவாகும் நுனிப்புற்கள் நாளைக்குத் தழைத்து வளர்ந்தால் நம் அனைவருக்கும் உணவாகும் அல்லவா?" என்றது.

அதைக் கேட்ட செம்மறி ஆடு, "நீ உன் வேலையைப் பார், என் குட்டிகளுக்கு எவை விருப்பமோ அவற்றை அவை உண்ணட்டும். நீ அதைச் சாப்பிடு. இதைச் சாப்பிடாதே என்று கட்டளையிட வேண்டாம்" என்றது கோபமாக. "இந்தக் காலத்தில் நல்லதைச் சொன்னால் யார்தான் ஏற்றுக் கொள்கிறார்கள்" என மனம் நொந்தபடியே தன் குட்டிகள் நுனிக்கொழுந்துகளைக் கடிக்க விடாது கவனமாகப் பார்த்துக் கொண்டது அந்த வெள்ளாடு.

சில நாள்கள் சென்றன. செம்மறி ஆடுகள் மேய்ந்த இடத்தில் ஒரு இலை, தழை கூடக் காணப்படவில்லை. நுனிக் கொழுந்துகள் கடிபட்ட செடிகள் தழைக்க நாளாகும்.

ஆனால் வெள்ளாடுகள் மேய்ந்த இடங்களில் பசுமை தெரிந்தது. நுனிக் கொழுந்துகள் கடிக்கப்படாது காக்கப் பட்டதால் இப்பொழுது அவைகள் மேயும் பக்குவத்தில் தழைத்து வளர்ந்திருந்தன. வெள்ளாடுகள் வழக்கம் போல எந்தத் தடைகளுமின்றி புற்களை மேயத் தொடங்கின.

ஆனால் செம்மறி ஆடுகளோ செய்வது அறியாது திகைத்து நின்றன. அடுத்தவர் பேச்சைக் கேட்பதா என நினைத்த செம்மறி ஆடுகள் தங்களுயை அடங்காத குணத்தால் இப்பொழுது தாம் திண்டாடிக் கொண்டிருப்பதை உணர்ந்தன. அருகில் கிடைத்த உணவைப் பாதுகாக்கத் தெரியாமையால் அவை வேறு இடம் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று. இன்றைக்கு நிறைய உணவு கிடைக்கிறது என்பதற்காக அவற்றை வீணாக்கக் கூடாது.

அது எம்முடைய நாளைய உணவாகக் கூட இருக்கலாம் என்பதை செம்மறி ஆடுகள் உணர்ந்தபடி வேறு இடம் தேடி அலைந்துதிரிந்தன.

# துள்ளி எழுவாய் மகனே!

எழுந்திடு மகனே எழுந்திடு
எந்தன் செல்வா எழுந்திடு
பொழுது புலர்ந்தது எழுந்திடு
பூமி வெளுத்தது எழுந்திடு

பூக்கள் இதழ்களை விரித்துமே
புன்னகை அழகைக் காட்டுதே
ஈக்கள் பறந்தே வருகுதே
இருந்து தேனை அருந்துதே


பறவைகள் எழுந்து பறக்குதே
பால்தர பசுவும் அழைக்குதே
உறவினைக் காகம் தேடுதே
உறக்கம் துறந்தே எழுந்திடு

குளித்து வந்து உன் கைகளைக்
கூப்பி கடவுளை வணங்கிடு
வெண்மை ஆடை அணிந்திடு
சுவைத்து உணவை அருந்திடு

பள்ளிக்குச் செல்லும் நேரம் இதே
பையினில் புத்தகம் சேர்த்தெடு
பள்ளம் வெள்ளம் பாதையிலே
பார்த்து பள்ளி ஏகிடுவாய்

ஆசான் சொல்லித் தருகின்ற
அனைத்தையும் மனதில் பதித்திடுவாய்
பாசாங்கின்றி படித்து விட்டு
பள்ளிவிட வீடு சேர்ந்திடுவாய்.

# வர்ணம் தீட்டுவோம்



# ஆக்க மலர்ச்சிச் சிந்தனையும் கூட்டிணைவும் உடைய ஆசிரியர்களாக மாற்றம் பெறுவோம்

நடேசு தயாளன்

கல்வியினுடைய இலக்கு என்பது உள்ளார்ந்த அனைத்துவிதமான திறனாளுமைகள் தொடர்பான விருத்தியின் உள்ளடக்கமாக அமைந்துள்ளது. அந்தவகையிலே பிள்ளைகள் கண்டு கொண்டுள்ள விருத்தியில் அறிகைசார் எண்ணக்கருவின் தெரிவும் பிரயோகமும் அவசியமானதாகின்றது.

ஆசிரியரானவர் தனித்து தகவல்களை வழங்கும் முகாமையாளராக அன்றி, அதற்கு அப்பாலும் அசைவியக்கம் பெற வேண்டும். இங்கு முழுமையான விழுமிய இயல்புகளின் உள்ளடக்கங்களையும் மாணவர்களிடம் பரிமாறி அவற்றை வளர்க்க உறுதுணைபுரிய வேண்டும். ஆசிரியரானவர் கல்விச் செயன்முறைக்கும் மாணவர்களுக்கும் இடையேயான பாலமாகவும், தொடர்பாளராகவும் விளங்க வேண்டும்.



### 21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியத்துவம்

21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியத்துவமானது எதிர்காலம் தொடர்பான தீர்க்க தரிசனம் உடையதாக விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியரானவர் கற்பித்தல் தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய தெளிவான அறிவுடையவராக விளங்குதல் வேண்டும். இங்கு புதிய தொழில் உலகுக்குப் பொருந்திவரக் கூடிய வகையில் மாணவர்களை உருவாக்குவதற்கான திட்டமிடல்களை முன்னெடுத்தல் அவசியமாகின்றது.

### தொழில்நுட்பம்

ஆசிரியர் என்பவர் புதிய தொழில்நுட்பங்களை கையாள்வதில் திறனுடையவராகவும் பாடம், ஒப்படை வகைப்படுத்தல் என எத்தகைய செயற்பாடாயினும் சிறந்த கல்வியை மாணவர்களிடத்தே செயற்படுத்தத்தக்க வகையில், நவீன தொழில்நுட்பங்களுடாக கற்பித்தலை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடையவராகவும் இருக்க வேண்டும். சிறந்த ஆசிரியர் கல்விக்கான கற்பித்தல் சாதனங்களை சமநிலையாகக் கையாளும் திறன் கொண்டவராக, வகுப்பறையை இயக்குமாற்றல் உடையவராக விளங்குவார். அத்துடன் கற்பித்தலின் போது எத்தகைய சாதனம் மாணவரிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விளங்கிக் கொண்டவராகவும் இருப்பார்.

### திறன் விருத்தி

ஆசிரியர் தான்சார்ந்த தனது தொழிற்குழுவினருடன் சேர்ந்து இயங்கும் திறனுடையவராக இருத்தல் வேண்டும். ஏனையோருடன் சேர்ந்து இயங்குதல் என்பது, 21 ஆம் நூற்றாண்டுக்கான திறனாகப் பார்க்கப்படுகின்றது. ஆசிரியரது அறிவும் சிந்தனையும் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கு இது அவசியமாகின்றது. இன்றைய ஆசிரியரானவர் பிள்ளைகளுடைய தேவைகளுடன் ஒன்றித்தவராகவும், மாணவர்களையும் தன்னையும் கலைத்திட்டத்துடன் இணைத்து அவர்களிடையே ஆக்க மலர்ச்சிச் சிந்தனையை வளர்ப்பவராகவும் இருக்க வேண்டும்.

ஆசிரியரானவர் வாழ்க்கை நீடித்த கல்வியை மேற்கொள்பவராகவும், சமூகஞ்சார் பிரச்சினைகளில் நெருங்கிய தொடர்பைப் பேணுபவராகவும் விளங்கும் அதேவேளை காலமாற்றத்தின் நிகழ்வுகளுக்குப் பொருந்தக் கூடியவராகவும் திகழ வேண்டும்.

இன்றைய காலக் கற்பித்தல் சாதனங்களானவை முன்னைய காலங்களை விடவும் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன. 'கரும்பலகை, வெண்கட்டி, கணினி' என்பவற்றுக்குப் பதிலாக 'திறன் பலகையும்', பாடப்புத்தகத்துக்குப் பதிலாக 'இலத்திரனியல் பாடநூல்களும்' வகுப்பறையில் இடம்பிடித்துள்ள காலநகர்வையும் ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### ஆளுமை

இன்றைய ஆசிரியர்களிடத்தே, 'விமர்சனப் பாங்கான சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கும் உத்தி, கூட்டிணைவு, தொடர்பாடல், கணினி எழுத்தறிவு, குடியுரிமை, மாணவர் தலைமைத்துவம், ஆக்கமலர்ச்சிச் சிந்தனை' என்பவை அதிகளவில் இருக்க வேண்டும்.

மாணவர்கள் வேறுபட்ட ஆளுமைத் திறனுடையவர்களாக விளங்குகின்றனர். வேறுபட்ட தேவைகளையும் இலக்குகளையும் உடையவர்களாகத் திகழ்கின்றனர். இவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவுறுத்தல்களை வழங்குதல் என்பதற்கு அப்பால், தமக்குப் பொருத்தமான தெரிவை மேற்கொள்வதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இதனூடே சுதந்திரமான தகவல் திரட்டுமாற்றல் மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்கப்படும்.

ஆளுமை தொடர்பான ஆய்வு என்பது இன்றைய உலகில் அதிக சிந்தனைக்குரிய விடயமாக மாற்றங்கண்டுள்ளது.

'மனிதனுடைய ஆளுமையை எவ்வாறு வளர்த்தெடுக்கலாம், ஆளுமைச் சிதைவுக்குரிய காரணிகள் எவை, கல்விக்கும் ஆளுமைக்குமிடையிலான தொடர்புகள் எத்தகையது, மனித ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் இடையிலான தொடர்புகள் எத்தகையது, சமூகமயமாக்கலில் அதன் பங்களிப்பு எத்தகையது' என்றவாறாக ஆளுமை தொடர்பான ஆய்வின் நோக்கு நிலை மாற்றமடைந்து செல்கிறது. இந்த விடயங்கள் குறித்து இன்றைய ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.



### ஆசிரியர்களுக்கான பார்வைப்புலம்

பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஆசிரியர் ஒருவர் தனது பார்வைப் புலத்தைச் செலுத்த வேண்டும்.

- •ஒருவரது நடத்தைக்குப் பின்னணியாகவுள்ள காரணிகள் எவை.
- •சமூகச் சூழலை விளங்கிக் கொண்டு ஆற்றலுக்கேற்ப அவர் துலங்கும் முறை எத்தகையது.
- •ஒவ்வொருவரதும் தனியாள் வேறுபாடுகள் எத்தகையது.
- •குழந்தை நிலையில் இருந்து முதிர்ச்சி நிலைவரை ஒருவரது ஆற்றல்களும் செயற்பாடுகளும் எவ்வாறு வளர்ந்து செல்கின்றன.

பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு செயன்முறையும் மாணவரிடையே ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புவதாக அமைந்து காணப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் உன்னதமான வெற்றியை அடைந்து கொள்வதற்கு ஆசிரியரது பங்குபற்றுதல் மிகவும் அவசியமானதாகின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு மாணவனதும் ஆளுமை விருத்திச் செயன்முறையில் ஆசிரியரது பங்களிப்பு உன்னதமாக இருக்க வேண்டும்.

இதற்காக குழுக் கலந்துரையாடல் விவாதத்துக்கான கள நிலமைகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. தவிர பாடசாலைத் தலைவர்களும் அதற்கான செயற்பாடுகளில் பங்குகொள்ள வேண்டும். இங்கு நுண்ணறிவுத் திறன் கூடிய மாணவனது பங்களிப்பு அதிகமாக இருப்பதோடு ஏனைய மாணவர்களது பங்களிப்பு குறைவானதாகவும் அமைந்து காணப்படுகின்றது. இந்தச் சந்தரப்பத்தில் ஆசிரியரது தலையீடு இன்றியமையாததாகின்றது. இதன் மூலம் ஏனைய மாணவர்களையும் பங்காளராக மாற்ற முடியும்.

### ஆசிரியர்கள் பெற வேண்டிய அவதானமும் முயற்சியும்

மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில், பிள்ளையினது ஆளுமைத் திறன் விருத்தியில் ஆசிரியரது பங்களிப்பு முக்கியமானதாகும். பிள்ளையினுடைய உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு விருத்தி செய்வதனூடாக அவனிடத்தில் சிறப்பான ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புதல் வேண்டும். இன்றைய ஆசிரியரானவர் பிள்ளைகளிடம் பின்வரும் திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- •மனித விழுமியங்களையும் பெறுமானங்களையும் மாணவர்களிடையே வளர்த்தல்.
- •மாணவர்களிடையே நேர்மறையான மனப்பாங்கை கட்டியெழுப்புதல்.
- •சவால்களை வெற்றிகொள்ளும் திறனை பிள்ளைகளிடம் வளர்த்தல்.
- •மாற்றத்துக்கான முற்போக்குச் சிந்தனையை மாணவர்களிடம் கட்டியெழுப்புதல்.

வகுப்பறைக்குள்ளும், வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியான நபராக ஆசிரியர் விளங்க வேண்டியது அவசியமானதாகும். சமய, சமூக, இன, பால்நிலை வேறுபாடுகளை எவ்வாறு இணக்க நிலையில் சமூகத்தின் மேல் நோக்கிய எழுச்சிக்கு ஏற்றவிதமாகக் கையாளலாம் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். வகை கூறலுக்கும், தியாக மனப்பாங்கிற்கும் ஏற்றவிதமாக தன்னை வளர்த்தெடுக்கும் ஆசிரியராலேயே நல்ல சமூகக் குடிமக்களை நாட்டுக்காக வழங்க முடியும்.

### ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய இயல்பு

மாணவர்கள் சிறந்த அடைவுகளைப் பெற்றுக் கொள்வதில் ஆசிரியரது உயர்வான கற்றல் நிலைகள் அவசியமானது என்பதற்கப்பால், அவர்களது நேர்மறையான மனப்பாங்கு அவசியமாகின்றது. மிக உயர்வான செயலாற்றல் கொண்ட ஆசிரியர்களிடம் பின்வரும் இயல்புகள் காணப்படும்.

- •இலக்கு நோக்கிய தூண்டல்களை வழங்க கூடிய கற்றல் சூழலை உருவாக்கலும் அதை முகாமை செய்தலும்.
- •கலைத்திட்டத்தினால் வழங்க எதிர்பார்க்கப்படும் அறிவு, திறன் மனப்பாங்கு என்பவற்றை வழங்கக் கூடிய பாடத் திட்டமிடலை மேற்கொள்ளல்.
- •கற்பித்தல் குறிக்கோளையும் கற்றல் வெளியீடுகளையும் இனங்கண்டு கொள்ளல்.
- •கற்றலில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை கற்போனிடம் தூண்டும் திறன்.
- •பிள்ளைகளிடம் ஒழுக்க மனப்பாங்கைக் கட்டியெழுப்புவதோடு அவர்களுடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல்.
- •மாணவர் குழுக்களை உருவாக்கி முகாமை செய்வதோடு வெவ்வேறுபட்ட கற்றல் தேவைகளையும் நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
- •பிள்ளைகளுடைய கற்றல் செயற்றிறனை தூண்டுவதனூடாக சமூக, கலாசார, மனவெழுச்சி சார் அபிலாசைகளை ஒழுங்கமைந்த முறையில் கட்டியெழுப்புதல்.
- •பிள்ளைகள் கண்டுகொண்டுள்ள முன்னேற்ற நிலை தொடர்பில் தொடர் பதிவுகளைப் பேணல்.
- •பிள்ளைகளுடைய சமூகக் கல்வி, மனவெழுச்சி சார்பான விடயங்கள் தொடர்பில் தொடர் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்துதல்.
- •கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்கு உரித்தான வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அந்தச் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நுட்பங்களைக் கையாளக்கூடிய திறன்.
- •இதற்காக வாய்ப்புக்களை இனங்காணல், தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துதல்.

இத்தகைய மனப்பாங்கும், செயல்விருத்தியும் கொண்ட ஆசிரியர்களே சிறந்த சமூகக் கட்டமைப்பின் உருவாக்கத்துக்குப் பங்காற்றலாம் என்பதை ஆசிரியர் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகவும், அழைப்பாணையாகவும் அமைந்துள்ளது.

**கட்டுரையாளர்: அதிபர், யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**LIBRARY**

**Senior Assistant Librarian Grade I / Senior Assistant Librarian Grade II / Assistant Librarian**

**Note 1:**
Preference will be given to those who have degree from Social Sciences / Humanities / Computer Science & Technology with IT Skills for the Post of Senior Assistant Librarian Grade I / Senior Assistant Librarian Grade II / Assistant Librarian.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Assistant Librarian Grade I | Rs. 91, 310 - 7X2, 170 - 106, 500/- p.m. |
| Senior Assistant Librarian Grade II | Rs. 79, 360 - 11X1, 630 - 97, 290/- p.m. |
| Assistant Librarian | Rs. 54, 600 - 10X1, 335 - 67,950/- p.m. |

**Note 2**
The above salary scales for permanent positions are fully operative w.e.f. 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No. 17/2016(v) Dated 01.05.2018.

In addition to the above salary,
1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i. Academic allowance
      Senior Assistant Librarian Gr.I / Gr. II - 151%
      Assistant Librarian - 115%
   ii. Research allowance 35% (based on the research activity)
   iii. Additional monthly allowance 20%
2. Cost of living allowance of Rs. 7, 800/= p.m.

**Statutory benefits:**
I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Assistant Librarian Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments.
IV. Employees' Trust Fund benifits.
V. Free Medical Services

**Closing dates**
Application should reach us on or before **09.11.2018**
Applications for the above posts shall be sent to the **Deputy Registrar / Academic Establishments,** University of Jaffna, Sri Lanka with the certified photocopies of the educational & professional qualifications **(with Statement of the Degrees and service certificates.)**

Application forms and other details will be available in the University web site **www.jfn.ac.lk**. Those who wish to send the appplication forms downloaded from the university website should accompany the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/= credited to the Peoples Bank Account No.: **162-1-001-6 0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self addressed stamped envelope 23 X 10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank Slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System / Goverment Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received. Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
**University of Jaffna, Sri Lanka.** 05.10.2018

## வேலையாள்கள் தேவை

லேபர் (கூலி) வேலையாள்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 0833 461

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/தர்மபுரம் இலக்கம் 01, அ.த.க.பாடசாலையில்
2018 ஆம் ஆண்டு
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி
181 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 46 ஆவதாகவும்
பாடசாலை நிலையில் 03 ஆவது நிலையிலும்
சித்தியடைந்த

செல்வி **சந்திரகுமார் மகிழ்நிலா**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு
அவருக்கு கல்வி கற்பித்த
அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்
அப்பா (சந்திரகுமார் - குட்டி),
அம்மா (விமலேஸ்வரி - கங்கா), சகோதரி (மதுரிகா) தர்மபுரம்.

தென்மாரட்சி மண்ணின் மைந்தன்
யாழ். போதனா மருத்துவமனை
இருதய நெஞ்சறை
சத்திரசிகிச்சை நிபுணர்.
வைத்திய கலாநிதி
**சிதம்பரநாதன் முகுந்தன்**
அவர்களின்
பணிகளை நயந்து தென்மராட்சி மக்கள்
முன்னெடுக்கும்.



## மதிப்பளிப்பு விழா

காலம் - 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணி
இடம் - தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபம்
தலைமை - செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் (விழாக்குழுத் தலைவர்)
முதன்மையுரை - வடமாகாண முதலமைச்சர் த.வி. விக்னேஸ்வரன்

அனைவரையும் அன்போடு அழைக்கிறோம் : விழாக்குழுவினர்.
விளம்பர அனுசரணை - R.S. செலக்சன், நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி செல்லத்துரை

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)**

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி செல்லத்துரை கடந்த 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பையா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ருக்குமணி மற்றும் நவமணி, கனகமணி, பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், இராசையா, முத்தம்மா, காலஞ்சென்றவர்களான தங்கம்மா, நடராஜா, சுப்பிரமணியம் மற்றும் துரைசிங்கம் காலஞ்சென்ற கனகசபை மற்றும் தங்கராணி ஆகியோரின் மைத்துனியும், செல்வராஜன் (கனடா), வித்தியாதரன் (கனடா), மணிமேகலா (கனடா), மணிமேகலை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவதாரணி (கனடா), நிரஞ்சனி (கனடா), புவேந்திரலிங்கம் (கனடா), யோகரமணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்திகா, குருதீபன், திவ்யா, பிறிந்தா ஆகியோரின் அப்பம்மாவும், தீபிகா, அவனிஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கனடா மொன்றியலில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு கொள்ள
55. Gince Street, Montreal.
(St,Lauvent) OC, Canada.

தகவல்
குடும்பத்தினர்.

514 228 1888, 141 649 95101,
514 442 4281, 190 520 12714, 613 985 90985

# ஆண்டுகள் ஆறுதனில் ஆறாத காயத்துடன்



## ஜெயக்குமார் கீர்த்திகன்

(கொக்குவில் இந்துவின் மைந்தன் -
A/L 2014 கலைப்பிரிவு)

அன்னை மடியில் 16.06.1995 | ஆண்டவன் அடியில் 06.10.2012

எம் குல விளக்கே கீர்த்தி!
ஆண்டுகள் ஆறு ஆனதோ நீ பிரிந்து -
எம்மால்
ஆற முடியவில்லை உன் பிரிவின் துயரை
ஆனாலும் நீ எம்முடனேயுள்ளாய் ஐயா
எந்நாளும் எம்வீட்டில் உன் பேச்சே
நாம் வாழும்வரை நீயிருப்பாய் எம்முடனே
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கை

இல.9, நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில். (CS/00)(11,17)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04. 12. 1925 | மறைவு 03. 10. 2018



## திருமதி. ஜெயமணி செல்லையா

நவாலியைப்பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா, கன்பெராவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி. ஜெயமணி செல்லையா அவர்கள் 03.10.2018 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்கள். அன்னார் காலஞ்சென்ற யேக்கப் Master இன் அன்புப்புதல்வியும், காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் திரு. அ. செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், ஜெயராஜதேவி (தேவி-Australia), மனோரஞ்சிதம் (ரஞ்சி-Australia), சந்திரசேகரம் Denmark, தயானந்தன் வெள்ளவத்தை, நித்தியானந்தன் Canada, யோகானந்தன் Australia, ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற திரு. செல்வராசா, காலஞ்சென்ற திரு. ராமச்சந்திரன்,திருமதி. ஜீவமலர், திருமதி. தனகாம்பிகை, திருமதி. தமிழ்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பேரப்பிள்ளைகளான சுஜீவன், சஜனி, மதுரா, தயானி, நிலானி, கீதா, சஞ்சீவன், லீன்டா, மரியா, நிஷாந்தினி, ரஜீவன், தினேஷ், ரதினி, ஆகியோரின் பேத்தியுமாவார்.அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06.10.2018 சனிக்கிழமை காலை 10.30 இற்கு Viiwood Park Crematorium, Mitchell, Canberra வில் இடம்பெறும்.

தகவல்:- மகன் தயானந்தன் Tel: 011-2364844

---

சாமியே சரணம் ஐயப்பா



## ஐயப்பன் தேவஸ்தானம்

இல.166, ஜெயந்தி நகர்
பிரதான வீதி. கிளிநொச்சி.

### ஐயப்பனின் 18 படிக்கான அடிக்கல் நாட்டு விழா

**காலம் - 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் - 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அடிக்கல் நாட்டு விழா இடம் பெறும்.**

கிளிநொச்சி மாவட்ட அந்தணர்களின் ஆசீர்வாதத்துடன் சாமியே சரணம் ஐயப்பா என்ற கோசத்துடன் இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறும். இவ் அடிக்கல் நாட்டு விழாவிற்கு அனைவரையும் கலந்து சிறப்பித்து ஐயப்பனின் அருட் கடாட்சத்தினை பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய நிர்வாக சபை ஐயப்பன் தேவஸ்தானம்,**
**இல. 166, ஜெயந்தி நகர், பிரதான வீதி, கிளிநொச்சி.**

---

## Neilly Davies Consulting Engineers Lanka (Pvt) Ltd

### EXPRESSION OF INTEREST

Australia வில் கடந்த 40 வருடகாலமாக நிமிர்ந்து கால் பதித்து நிற்கும் "Neilly Davies Consulting Engineers" நிறுவனமானது தனது கிளையை இன்று யாழ் மண்ணில் பதித்துள்ளது.

தம்முடன் இணைந்து பணியாற்ற விரும்பும் ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் (Consultants and Contractors) பதிவுசெய்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறது.

- *நீங்கள் Civil Engineering Design and Consultancy சேவைகளை வழங்கும் நிறுவனமா? எம்முடன் இணைந்து பணியாற்ற வாருங்கள். எங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு (Australia) பொறியியலாளர்கள் உங்களுக்காக Design and Consultancy சேவைகளை வழங்கத் தயாராகவுள்ளார்கள்.*
- *நீங்கள் Civil, Mechanical, Electrical & Plumbing கட்டுமானப் பணிகளை (Construction) செயற்படுத்தும் ஒப்பந்தக்காரர்களா? எங்களுடன் சேர்ந்து கட்டுமானப் பணிகளில் ஈடுபட இணைந்திடுங்கள்.*

ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் (Consultants and Contractors) தங்களைப் பதிவுசெய்து கொள்வதற்கான தொடர்புகளுக்கு:

**சேயோன் சிதம்பரநாதன்,**
**Construction Manager.**
Neilly Davies Consulting Engineers Lanka (Pvt) Ltd.
39, Pirappamkulam Road, Vannarponnai, Jaffna.
**Tel:** +94 21 221 4401 | **Mobile:** +94 776 408 692 | **E-Mail:** info@neillydavies.lk
**Website:** www.neillydavies.lk

neillydavies

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 * 11 * 1933 | இறப்பு 03 * 10 * 2018



திருமதி.
## திருநாவுக்கரசு கனகாம்பிகை அம்மாள்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

யாழ்ப்பாணம் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி. திருநாவுக்கரசு கனகாம்பிகை அம்மாள் ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர்கள் 03-10-2018 புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி, செல்லாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, ஞானம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், Eng. கதிர்வேல் (பொறியியலாளர், கொழும்பு), Dr.ஞானச்செல்வி (பொறியியலாளர், USA) Dr.ஞானவேல் (விரிவுரையாளர், UK), தங்கவேல் (IT Consultant சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Eng. உஷாயினி (பொறியியலாளர், கொழும்பு), Dr.பரமேஸ்வரன் (விரிவுரையாளர், USA) தர்சினி MSc. (UK) ஆகியோரின் மாமியாரும், மயூரன், விதுரன், தருண், சரண் ஆகியோரின் பேர்த்தியும், கமலாம்பிகை, விமலாம்பிகை ஆகியோரின் சகோதரியும், தில்லைநாதன், குலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கொடிகாமம் அன்னாரின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பகல் 1.00 மணியளவில் பாலாவித்தாழ்வு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**தகவல்: மகன் - 0777283122**

---

### அறைகள் நாள் வாடகைக்கு

Rs. 600 முதல் Rs. 3900 வரை
(A/C, Attached Bathroom)
Hotel Vila City 422, Galle Road, Wellawatta.
(இராமகிருஷ்ண சந்தி, Petrol Set அருகில்) தொடர்பு - 077 796 7878

### நாய்க்குட்டி விற்பனைக்கு

**லப்றடோர்** நாய்க்குட்டிகள்
(ஆண், பெண்) விற்பனைக்குண்டு.
**076 696 5112**

### கார் விற்பனைக்கு

5 சிறி தொடரிலக்கம் கொண்ட மைனர் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
**077 914 4520**
ஹரிபோல் - மருதனார்மடம் (CS/20332) (11.17)

### உடன் விற்பனைக்கு

**NP JS - XXXX** இலக்க **Super Cub - 90**
**(China) Motorbike** உடன் விற்பனைக்கு.
**077 415 9507** (CS/20275) (11.17)

### விற்பனைக்கு

ஊர்ச் சேவல்கள், கோழிகள், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
**076 630 0799** (CS/20301)(11,17)

### விற்பனைக்குண்டு

பழைய கட்டட இடிபாடு மக்கி, மண் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு-075 498 5885, 077 102 1867**

### காணி விற்பனைக்கு

**மருதனார்மடம்**
**பிரதேச சபையின்** அருகில்
K.K.S.**வீதியில் உள்ள 3 பரப்புக்காணி**
விற்பனைக்குண்டு. **வீடு கட்டவும், ரியூட்டரி நடத்தவும்** அமைதியான சூழல் உள்ளது. தரகர் தேவையில்லை
**021 224 1555, 078 632 6111**

### முகாமைத்துவ பயிற்சியாளர்களுக்கான வேலைவாய்ப்பு

சந்தைப்படுத்தல் துறைக் கணக்கீடு / மனிதவள மற்றும் வர்த்தக முகாமைத்துவம்
வர்த்தகத்துறை அனுபவம் மற்றும் திறனைப் பெற்றுக் கொள்வதற்கான தொழில்வாய்ப்பு

**தகைமைகள் :**
வர்த்தகமுகாமைத்துவம், வர்த்தகத்துறைப்பட்டமாணி B.Com. ACA, CIMA பகுதி தராதரம்
க.பொ.த. உயர்தரத்தில் வியாபார / வர்த்தக / கணக்கீடு பாடங்களில் சித்தி
ஆங்கில அறிவு மற்றும் கணினித்துறை அறிவு.
விளையாட்டுத்துறைத் திறன் கொண்டிருத்தல்.
கடுமையாகச் செயலாற்றத்தக்க திறன்.
நல்லொழுக்கப் பின்னணி.

*விண்ணப்பிக்கவும்*, K.G.Investments (Pvt) Ltd.
**இல.: 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10**
**தொலைபேசி இல. : 2421668 / 9.**
**தொலைநகல் : Kg.group.545@gmail.com**

### தரம் 04 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் - 2019

**புதிய வகுப்பு ஆரம்பம்**

*07-10-2018*
*பி.பகல் 4.00 மணி*

- அனுமதி பெறும் பிள்ளைகள் பெற்றோருடன் வருகை தரவும்
- யாழ். பிரபல ஆசிரியர்களின் கற்பித்தல்
- ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்
- வாரத்தில் 5 நாள்கள் வகுப்புகள்
- ஞாயிறு தோறும் மாதிரிப் பரீட்சை

தொடர்பு
**புதிய நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
**T.P. 077 459 8440**

### இப்பொழுது திரையில்




வடக்கு, கிழக்கு

| | | |
|---|---|---|
| | | Majestic Jaffna 10.30/1.30/4.15/7.30 pm |
| Raja Jaffna 10.30/1.30/4.30/7.00/9.30 | Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30 | Shanthi Batticaloa 10.30/2.30/6.30/9.30 |
| Vijaya Batticaloa 10.30/2.30/6.30 | G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30 | Vasanthi Vavunia 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu 10.30/2.30/6.30 | Nelson Trinco 6.30 / 9.30 | SELLAM PREMIER Chenkalady 10.00/2.00/6.00/9.45 |
| Bala Chavakachcheri 10.30/2.30/6.30 | SARASWATHY Trinco 10.30/6.30 | |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 07.12.1959 |  | 05.10.2018 |

# தணிகாசலம் ஜெயமலர்


வீராணந்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் ஜெயமலர் நேற்று (05.10.2018) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து இராசமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் மாணிக்கம் தணிகாசலத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சந்திரதாஸ், தேவதாஸ் (சவுதி அரேபியா), அகிலதாஸ் (மாகாண சபை உறுப்பினர், வடமாகாணம், உரிமையாளர் நெல்லை சில்க் நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஸ்ரீதேவி, கிருபா ஆகியோரின் மைத்துனியும் உஷா, அர்ஜின், அமலன், றொசானி, கீர்த்தனன், சர்மினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஸ்மிதா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2018) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பூவரசம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி.அகிலதாஸ்
(மாகாணசபை உறுப்பினர்,
வடமாகாணம்)

வீராணந்தோட்டம்,
கரணவாய், கரவெட்டி. 077 6511262




BRITISH COUNCIL

ஓவியம் என்றாலே
PICASSO தான்
ஆங்கிலம் என்றாலே
BRITISH COUNCIL தான்

சரியான இடத்தில் சரியானதை கற்றுக்கொள்ள உலகத்தின்
பிரபல ஆங்கில நிபுணர்களுடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள்

தற்போதே முன்பதிவு செய்யுங்கள்



# குருப்பெயர்ச்சி 2018 பலன்கள்

குருபகவான்தெய்வீக அறிவுக்கும், வேதாந்தஞானத்துக்கும், செல்வவளத்துக்கும் பொருள் சேமிப்புக்கும் காரணகர்த்தா. அந்த வகையிலே குருப்பெயர்ச்சி இடம்பெற்றுள்ளது. வக்ரநிவர்த்தி அடைகின்றகுருபகவான்துலாம்ராசியில்இருந்து விருச்சிகராசிக்குஇடம்பெயர்கிறார். மேடம்முதல்மீனம்வரை12ராசிகளுக்குமான குருப்பெயர்ச்சி பலன்களை இப்பகுதியில் நோக்குவோம்.

## 4.10.2018 – 28.10.2019




போற்றுதலுக்கும், தூற்றுதலுக்கும் அஞ்சாத நீங்கள், யாருக்காகவும் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாதவர்கள். முன் வைத்த காலைப் பின் வைக்காமல் முன்னேறும் குணமுடைய நீங்கள் திடீரென்று முடிவெடுத்து எதிரிகளை திக்குமுக்காடச் செய்துவிடுவீர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு உங்களின் புதிய முயற்சிகளை முடக்கி வைத்தாரே! எந்த ஒரு வேலைகளையும் முதல் கட்டத்திலேயே முடிக்க முடியாமல் அலைக்கழித்தாரே! எதை செய்தாலும் அதில் ஒரு தயக்கத்தையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தினாரே! தந்தையாருக்கு மருத்துவச் செலவுகளையும், அவருடன் கருத்து மோதல்களையும் ஏற்படுத்திய குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால் சந்தர்ப்ப சூழ்நிலையறிந்து செயல்படும் சாமர்த்தியத்தை கற்றுக் கொள்வீர்கள். உங்களின் பலம் எது, பலவீனம் எது என்பதை தெரிந்து கொள்வது நல்லது.

கணவன்மனைவிக்குள் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிசெய்வார்கள். உன் சொந்தம், என் சொந்தம் என்று மோதிக் கொள்ளாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உணர்ச்சி வசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். வீடு கட்ட அரசின் அனுமதி தாமதமாக கிடைக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் அதிகமாகும்.

வீடு, மனை வாங்கும் போது தாய் பத்திரத்தை சரி பார்த்து வாங்குவது நல்லது. கூடாப்பழக்கவழக்கங்கள் இலவசமாகதொற்றவாய்ப்பிருக்கிறது. நல்லவர்களின் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். போக்குவரத்து விதிகளை மீறி வாகனத்தை இயக்க வேண்டாம். சின்னச்சின்ன அபராதம் செலுத்த வேண்டிவரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினையில் நேரத்தை வீணடிக்காதீர்கள்.

### குருபகவானின் பார்வைப் பலன்கள்

குரு உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டை பார்ப்பதால் அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். பயணங்களால் பயனுண்டு. மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் வரும். குரு உங்கள் உத்யோகஸ்தானத்தை பார்ப்பதால் சிலருக்கு புது வேலை கிடைக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். குரு 12ஆம் வீட்டை பார்ப்பதால் புகழ்பெற்ற புண்ணியதலங்கள் சென்று வருவீர்கள். வீட்டில் கூடுதல் அறை கட்டுவீர்கள்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் பூர்வ புண்யாதிபதியும் அஷ்டமாதிபதியுமான குருபகவான் தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால் குலதெய்வக் கோயிலை புதுப்பிக்க உதவுவீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பு வரும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். வாகனத்தை மாற்றுவீர்கள்.

21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் சஷ்டமசப்தமாதிபதியான சனி பகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பிறர் மீது நம்பிக்கையின்மை, அசதி, சோர்வு, சுபச் செலவுகள் வந்து போகும். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்பி வீட்டிற்குள் அழைத்து வர வேண்டாம். மறதியால் விலை உயர்ந்த பொருள்களை இழக்க நேரிடும்.

வேலைச்சுமையால் மனைவி கோபப்படுவார். பழைய கசப்பான சம்பவங்களை மனைவியிடம் விவாதிக்காதீர்கள். அவரின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். 20.12.2018 முதல் 12.03.2019 மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை தனாதிபதியும் லாபாதிபதியான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் மனஅழுத்தம், ரென்ஷன் அதிகரிக்கும். சில சமயங்களில் தனிமைப்படுத்தப் பட்டதைப் போல் உணர்வீர்கள். பணப்பற்றாக் குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். வாகனத்தை இயக்கும் போது அலைபேசியை தவிர்ப்பது நல்லது.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.3.2019 முதல் 18.5.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 5ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால் பணவரவு உண்டு. செல்வாக்கு அதிகரிக்கும். மகளுக்கு திருமணம் கூடி வரும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாகும். மகனுக்கு இருந்த கூடாபழக்க வழக்கங்கள் நீங்கும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூல நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலக்கட்டத்தில் திடீர் திருப்பம் உண்டாகும். பிள்ளைகளின் உயர் கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் பலிதமாகும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

சிலர் வீடுமாற வேண்டுமென்று நினைப்பீர்கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். புதுப் பதவி, பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். சிலர் வீட்டில் கூடுதலாக அறை அல்லது தளம் அமைப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்து கொண்டேயிருக்கும்.




கனவிலும், கற்பனையிலும் மாறிமாறி சஞ்சரிக்கும் நீங்கள் நிஜத்தைத் தேடி அலைவீர்கள். பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் சமமாகப் பழகும் நீங்கள், பலரையும் வழிநடத்திச் செல்லும்அளவிற்குப்பட்டறிவுகொண்டவர்கள். விட்டுக்கொடுக்கும் மனது கொண்ட நீங்கள், எல்லோரையும் அன்பால் அரவணைப்பவர்கள். இதுவரை உங்கள்ராசிக்குதனஸ்தானமான 2ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு பணப்புழக்கத்தையும், சமூகத்தில் அந்தஸ்தையும், வசதி, வாய்ப்புகளையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தந்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019வரைராசிக்கு3ஆம்வீட்டில்அமர்வதால்எதையும் திட்டமிட்டுசெய்யப்பாருங்கள். எந்தஒருவேலைகளையும்முதல்முயற்சியிலேயேமுடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வாயுக் கோளாறால் நெஞ்சு வலிக்கும். இளைய சகோதர வகையில் பிணக்குகள் வரும். வீண் வறட்டுகௌரவத்திற்காக சேமிப்பைகரைத்துக்கொண்டிருக்காதீர்கள். யாருக்காகவும் ஜாமீன், கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்பி வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். வாகனத்தில் செல்லும் போது தவறாமல் தலைக்கவசம் அணிந்துச் செல்லுங்கள். மற்றவர்களை நம்பி குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். கணவன் - மனைவிக்குள் சச்சரவுகள் வந்தாலும், அன்பும், அன்யோன்யமும் குறையாது. மற்றவர்களை நம்பி முக்கிய விஷயங்களை ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. தங்க நகைகளை கவனமாகக் கையாளுங்கள். அக்கம்பக்கம்வீட்டாருடன் அளவாகப்பழகுங்கள். சிலர் உங்களைநேரில்பார்க்கும்போது நல்லவர்களாகவும், பார்க்காத போது உங்களைப் பற்றி தவறாகவும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். உறவினர், நண்பர்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். இடைவெளி விட்டுப் பழகுவது நல்லது. வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். வழக்கில் வழக்கறிஞரை மாற்ற வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். வீடு கட்டுவது, வாங்குவது போன்ற முயற்சிகள் தாமதமாகி முடியும்.

### குருபகவானின் பார்வைப் பலன்கள்

குரு உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டை பார்ப்பதால் மனைவிவழியில் உதவிகள் உண்டு. கூடாப்பழக்கம் விலகும். கனவுத் தொல்லை குறையும். குரு 9ஆம் வீட்டை பார்ப்பதால் பணவரவு உண்டு. தந்தைவழி சொத்துக்கள் கைக்கு வரும். வேலை கிடைக்கும். குரு லாப வீட்டை பார்ப்பதால் மூத்த சகோதரர் ஆதரவாக இருப்பார். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018முதல்20.10.2018வரைஉங்களின்சுகசப்தமாதிபதியானகுருபகவான்தன் சாரமானவிசாகநட்சத்திரத்தில்செல்வதால்தாயாருக்குநெஞ்சுஎரிச்சல், முதுகுத்தண்டில் வலி வந்து போகும். அவருடன் வீண் விவாதங்களும் வரக்கூடும். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். கணவன்-மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். மனைவிக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் பூர்வ புண்யாதிபதியும் சஷ்டமாதிபதியுமான சனி பகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பை அறிந்து அதற்கேற்ப அவர்களை நெறிப்படுத்துவீர்கள்.

பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். சொந்த பந்தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னின்றுநடத்துவீர்கள். 20.12.2018முதல்12.03.2019மற்றும்09.08.2019முதல் 27.10.2019 வரை உங்களின் ராசியாதிபதியும்ஜீவனாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில்செல்வதால்கனிவாகப்பேசிகாரியம்சாதிப்பீர்கள். வராதுஎன்றிருந்தபணம் கைக்கு வரும். அழகு, அறிவு கூடும். குடும்பத்திலும் சந்தோஷம் குடிகொள்ளும். புதிதாக சொத்துவாங்குவீர்கள். உடல்நலம்சீராகும். நட்புவட்டம்விரிவடையும். உத்தியோகத்தில் செல்வாக்கு உயரும். பெரிய பதவியில் இருக்கும் உங்களுடைய பழைய நண்பரால் ஆதாயமடைவீர்கள்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.3.2019முதல்18.5.2019வரைகுருபகவான்அதிசாரத்தில்ராசிக்கு4ஆம்வீட்டில்கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால் அவ்வப்போது ஒரு வெறுமையை உணருவீர்கள். ஒருவிதபடபடப்பு, ஹார்மோன்பிரச்னை, தன்னலவாதத்தால்கணவன் - மனைவிக்குள் சச்சரவு வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை ஏற்படும். வேற்றுமதத்தவர்கள் உதவுவார்கள்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூல நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019முதல்08.08.2019வரைகேட்டைநட்சத்திரத்திலும்வக்ரகதியில்செல்வதால் எதிர்பார்ப்புகள்நிறைவேறும். வேற்றுமாநிலம்அல்லதுவெளிநாட்டில்வேலைஅமையும். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு வாங்குவீர்கள்.

## மைத்திரிக்கு...

தெரிவித்தார். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'சிறிலங்கா அரசே! நல்லிணக்க அரசே!அரசியல் கைதிளுக்கு பொதுமன்னிப்பு வழங்கு', 'அரசே பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல்செய்', 'தமிழ் அரசியற் கைதிகளின் கோரிக்கையை ஏற்று அவர்களை விடுதலை செய்' போன்ற கோசங்களை எழுப்பினர்.

வன்னிக் குறோஸ் அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், கிராம அமைப்புகள், விளையாட்டு கழகங்கள், வர்த்தகர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என்று பலர் கலந்து கொண்டிருந்தனர். போராட்டத்தின் முடிவில் மாவட்டச் செயலகத்தில் மனுக் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்ததாவது, தமது உயிர்களை துச்சமாக மதித்து சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரை உணவுஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் தங்களை மன்னித்து விடுவிக்க வேண்டும் அல்லது மறுவாழ்வு வழங்கி விடுவிக்க வேண்டும் என்று கோருகின்றார்கள். அவர்கள் விடுவிக்கப்படவேண்டியவர்கள். அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் அரசுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் மீண்டும் பேச்சு நடத்துவோம்.

ஜே.வி.பியினரும் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள். அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி ஆயிரக்கணக்கானவர்களை சிறையிலிருந்து விடுவித்தது. பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் குழு அமைக்கப்பட்டு அவர்கள் விடயம் ஆராயப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகள் என்பதால், இந்த விடயம் இழுத்தடிக்கப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் எதற்காகப் போராடினார்கள் என்ற உண்மைகளை கண்டறியாமல் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தமிழ் அரசியல் கைதிகளை வாட்டி வதைத்து அவர்கள் உயிருக்கு உலை வைக்கின்றார்கள். இந்த அரசின் செயற்பாட்டை நாங்கள் கண்டிக்கின்றோம். தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறு விடுவிக்கப்படாத பட்சத்தில் நாங்கள் இந்தப் போராட்டங்களை கொழும்பில் தொடரவேண்டி இருக்கும். போராடுவது மட்டுமல்ல ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடத்தில் முறையிடவேண்டியிருக்கும் என்றார். (5,ரி3)

## தேசிய...

கேயும், வெயங்கொட சென்.மேரிஸ் கல்லூரியின் குருகுலசூரிய சனுபா திமத் பெரேராவும் பெற்றுள்ளனர்.

தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை 198 புள்ளிகளைப் பெற்று சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி நவாஸ்கரன் நதி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மகேந்திரன் திகழ்ஒளிபவன் ஆகியோரும், மினுவாங்கொட ரெஜி ரணதுங்க ஆரம்பப்பாடசாலை மாணவனான சென்ஜுய் அகித்ம ஹெட்டியாராச்சியும் பெற்றுள்ளனர். இதேவேளை தமிழ் மொழி மூலமான பட்டியலில் திகழ்ஒளிபவன் மற்றும் நதி இருவரும் முதலிடத்தைப் பகிர்ந்துள்ளனர்.

தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை 197 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டம் நெளுக்குளம் சிவபுரம் ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த பாலக்குமார் ஹரித்திக்ஹனுசுஜா பெற்றுக் கொண்டுள்ளார்.

தேசிய ரீதியில் 196 புள்ளிகளைப் பெற்று 23 பேர் நான்காம் இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நேசிகா சாம்டினேஸ், கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுபா சகிர் மொஹமட், அக்கரைப்பற்று சாகிரா வித்தியாலத்தைச் சேர்ந்த தாஸ்லீம் சகால்ஜி அஹமட், மட்டக்களப்பு உன்னிச்சேனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ரி.ஜெயராஜ், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கனகலிங்கம் தேனுசன், யாழ்ப்பாணம் ஹோலிபமிலி ஹொன்மன்டைச் சேர்ந்த ஜெயந்தன் கிருஜனா, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சாருகா சிவனேஸ்வரன் ஆகியோர் நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தமிழ் பேசும் மாணவர்களாவர். (5-7-105-9-110)

## மைத்திரி...

வனமாக்கல் தேசிய நிகழ்ச்சித் திட்டமும், சுற்றாடல் மாநாடும் நேற்று மன்னாரில் நடைபெற்றது. இந்த நிகழ்வு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்து கொண்டார்.

அவர் உரையாற்றியபோது, அரசியல் கைதிகள் நீண்டகாலம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் அவர்களை விடுவிக்க வேண்டும்.

எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகவே போர் நடைபெற்றது. போராட்டத்துக்கு உதவி செய்தார்கள் என்ற காரணத்தால் சிறைகளில் தமிழ் இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசியல் கைதிகளாக 107 பேர் சிறைகளில் உள்ளனர். அவர்களில் 52 பேர் தற்போது நீதிமன்ற வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நீதிமன்றத் தண்டனை பெற்றவர்களாக 55 பேர் உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமைகள் என்ற எண்ணத்திலேயே அவர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு உதவிகள் செய்தனர். அவர்கள் தற்போது 10 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளில் தண்டனை அனுபவித்துள்ளனர். அவர்களுக்கு ஒரு ஆண்டோ, இரு ஆண்டா மறுவாழ்வு வழங்கி விடுவிக்க வேண்டும்.

தாம் தமது குடும்பங்களுடன் இணைய வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. அதற்காகவே அவர்கள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் சார்பில் நாம் கோருவது அவர்களை மறுவாழ்வளித்து விடுவிக்க வேண்டும் என்பதே.

அவர்களின் குடும்பத்தினர், பிள்ளைகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அரச தலைவர் அவர்களை மறுவாழ்வளித்து விடுவிக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களின் கோரிக்கையும் இதுவே என்று கோரிக்கை விடுத்தார்.

நிகழ்வின் இறுதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார். அவர் தனது உரையில் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஏதும் கூறுவார் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். எனினும் அவர் தனது உரையில் அரசியல் கைதிகள் விடயத்தைத் தவிர்த்துக் கொண்டார். அதனால் எதிர்பார்த்திருந்தவர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகினர்.

நிகழ்வில் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், மஹிந்த அமரவீர, மஹிந்த சமரசிங்க, பிரதியமைச்சர்கள் காதர் மஸ்தான், சிறியானி, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன், மன்னார் மாவட்டச் செயலர் சி.மோகன்றாஸ், பிரதேச செயலாளர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள், அரசஅதிகாரிகள், திணைக்களங்களின் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அல்லது குறுகிய கால மறுவாழ்வின் பின்னர் விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி அனுராதபுரம் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் 8 பேர் கடந்த மாதம் 14 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் இந்த போராட்டத்தில் மேலும் இருவர் இணைந்துக் கொண்டனர். தற்போது கண்டி போகம்பர சிறைச்சாலையில் ஆறு கைதிகளும், கொழும்பு மகசின் சிறைச்சாலையில் 43 கைதிகளும் கடந்த புதன்கிழமை முதல், உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ந-21,56,213)

## பொலிஸார்...

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாக இந்த இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பெருங்குற்றப் பிரிவினருக்கு கூண்டோடு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தார். நேற்று 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையத்தில் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவு போயுள்ளன. கடை உரிமையாளர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பெருங்குற்றப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அங்கு கடமையிலிருந்த சார்ஜன் தர அதிகாரி, பதிவேட்டுப் புத்தகத்தில் வெளியில் செல்வதற்கான பதிவுகள் எதனையும் மேற்கொள்ளாது சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார். விவரங்களைத் தனது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆனால் குற்றப் பதிவு புத்தகத்தில், தனது குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்ததை அவர் ஒட்டவில்லை. 26ஆம் திகதியே அதை ஒட்டியுள்ளார்.

இரண்டு நாள்களாக விசாரணை செய்யப்படவில்லை என்பதைக் கடை உரிமையாளர் விடயத்தை வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார். அவரின் பணிப்புக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. விசாரணை இடம்பெற்றது. விசாரணையின்போது இந்த விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பெருங்குற்றப் பிரிவில் பணியாற்றிய 17 பொலிஸாருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டது. சார்ஜன் தரத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பணி நிறுத்தம் செய்யப்பட்டார். தொடர்ந்தும் விசாரணைகள் நடந்தன. பதிவேட்டுப் புத்தகத்தில் வெளியில் செல்வதற்கான பதிவுகள் எதனையும் மேற்கொள்ளாது சம்பவ இடத்துக்குச் சென்ற சார்ஜனுடன் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் பதில் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றிய உதவிப் பொலிஸ் அதிகாரியும் சென்றார் என்பது தெரியவந்தது. அதையடுத்து அந்த அதிகாரியும் நேற்றுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அண்மையில கொடிகாமம் பகுதியில் பொலிஸ் வாகனத்தைத் திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் கவனக் குறைவாகச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் அந்த வாகனத்தில் சென்ற நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21,26)

## 6 வாள்களுடன்...

பகுதி பதற்றத்துக்கும் பரபரப்புக்கும் உள்ளானது. ரோந்து நடவடிக்கைகளிலும், சோதனை நட்வடிக்கைகளிலும் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளபோதும் 6 பேர் ஆளுக்கு ஒரு வாளுடன் அட்டகாசத்தில் ஈடுபட்டமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதி, ஓட்டுமடம் பகுதி, யாழ்ப்பாணம் பி.ஏ.தம்பி லேன் ஆகிய இடங்களிலேயே நேற்று இரவு வாள்வெட்டுக் குழு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் சேதங்களுக்கு உள்ளாகின எனத் தெரிவிக்கப்பட்டது.

நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் இரவு 8.13 மணியளவில் பட்டாரக வாகனம் ஒன்றை வழிமறித்த வாள்வெட்டுக் குழுவினர் வாகனத்தை அடித்தும், வெட்டியும் சேதங்களுக்னு உள்ளாகியுள்ளனர்.

8.20 மணியளவில் யாழ்ப்பாணம் பி.ஏ.தம்பி லேனுக்குள் நுழைந்த குழுவினர் அங்குள்ள வர்த்தக நிலையம் ஒன்றைத் தாக்கியுள்ளனர், கண்ணாடிகளை உடைத்து, பொருள்களைச் சேதப்படுத்திவிட்டு ஓரிரு நிமிடங்களில் அங்கிருந்து தப்பித்தனர். முகங்களை கறுப்புத் துணியால் மூடிக்கட்டியவாறு மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறு பேரே அந்த நாசகாரச் செயலைச் செய்துள்ளனர். அனைவரும் ஆளுக்கொருவாள்களுடன் வந்தனர் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் கூறினர். சம்பவ இடத்துக்கு சிவில் உடை தரித்த சிறப்பு அதிரடிப் படையினர் வந்தனர். அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். சிசிரிவி கமராவின் பதிவுகளைப் பெற்றனர். சிறிது நேரத்தில் யாழ்ப்பாணப் பொலிஸார் வந்தனர். அவர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இடையில் தாக்குதல் நடத்திய பின்னர் ஓட்டுமடம் பகுதியில் வீதியால் சென்ற ஒருவர் மீது வாள் வீசி அச்சுறுத்தியவாறு அந்தக் குழு சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வாள்வீச்சுக்கு உள்ளானவர் தெய்வாதீனமாகக் காயங்கள் இன்றி தப்பிக் கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவங்கள் சுமார் அரை மணி நேரத்துக்குள் நடந்துள்ளன. ஒரே குழுவே இந்த 3 சம்பவங்களில் தொடர்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்களை அடுத்துப் பொலிஸாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸாரின் சுற்றுக்காவல், சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் ஆளுக்கொரு வாளுடன் வீதிகளில் துணிவாக பயணித்து வாள்வெட்டுக்களில் குழுக்கள் ஈடுபடுவது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ந-21)

## காதைப்...

அமைப்பதற்கு எதிராகப் பொலிஸாரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது, அது தொடர்பான அழைப்பாணையை வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளரிடம் கையளிப்பதற்காக வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அங்கு சென்றிருந்தார்.

அழைப்பாணையை நகர சபைத் தவிசாளரிடம் கையளிக்க முயன்றபோது அவர் அதை வாங்க மறுத்தார். தமது அலுவலகத்துக்குக் கொண்டு வந்து தந்தாலே அழைப்பாணையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

அதையடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அந்த அழைப்பாணையைத் தமிழ் பொலிஸ் உத்தியோத்தரிடம் கொடுத்து தமிழில் உரத்து வாசிக்குமாறு கூறினார்.

அழைப்பாணையைத் தமிழில் வாசிக்கத் தொடங்க வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும், வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளரும் தமது காதுகளை இறுகப் பொத்திக் கொண்டனர். தமக்கு அழைப்பாணை வாசிப்பது கேட்கவில்லை, கேட்கவில்லை என்றனர்.

அதன்பின்னர் பொலிஸார் அழைப்பாணையை நகர சபைத் தவிசாளரின் அலுவலகத்துக்குச் சென்று கையளித்துள்ளனர். (ந-26)

கழுகு மட்டைகள் உங்களிடம் உள்ளதா ? விற்க விரும்புகிறீர்களா ?
அழையுங்கள் - 077 209 0661

### மரண அறிவித்தல்

**பாலேஸ்வரன் அருளேஸ்**



மலர்வு 20.12.1988 உதிர்வு 28.09.2018

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலேஸ்வரன் அருளேஸ் கடந்த (28.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலேஸ்வரன் மஞ்சுளா தேவி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பொன்னம்மா மற்றும் பொன்னம்பலவானார் மனோகரி தம்பதியரின் அன்புப்பேரனும்பரமேஸ்வரன், சந்திரேஸ்வரன், இராமேஸ்வரன் (ஜேர்மனி), புவனேஸ்வரன் (பிரான்ஸ்), பரிமளேஸ்வரன் (ஜேர்மனி), குகனேஸ்வரன் காலஞ்சென்றவர்களான கணேஸ்வரன், சண்முகேஸ்வரன், கிருஷ்னேஸ்வரன், வனிதா மற்றும் பூமாதேவி, சசிகலா, ஜெயந்தி, வசந்தா (ஜேர்மனி), ஜெயரஞ்சினி, கிறேஸ் (ஜேர்மனி), கலாறஞ்சினி ஆகியோரின் பெறாமகனும் ஜீவரட்ணம், வேதநாயகி, ஸ்ரீமுருகதாஸ், தெய்வநாயகி, நித்தியானந்தன், சாந்தி, சுபாஸ், வினோதினி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை ஞாயிற்றுக் கிழமை (07.10.2018) காலை நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : பெரியப்பாமார்.
077 5751094

**STUDY @ DENMARK GERMANY CANADA**

No. 1 Colleges & Universities in

G.C.E. O/L தகமையுடன் விண்ணப்பிக்கலாம்

குடியுரிமை பெறுவதற்கான இலவச ஆலோசனையும் ஆவணங்கள் தயார்படுத்தலும்

குறைந்த கட்டண வசதி

FREE IELTS Classes

BANK Balance வசதி செய்து தரப்படும்

Denimark, Germany போன்ற நாடுகளுக்கு குடும்பத்தோடு குடிபுகுவதற்கு தேவையான ஆவணங்கள் செய்துதரப்படும்.



**ASPS**

389-1/2, Galle Road, Colombo 06
22, Sri Mahabodhi Road, Dehiwala
077 33 47 332



ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் (Hungury) மற்றும் குரோசியா (Croatia) நாட்டில் உயர் கல்வியை தொடருங்கள். பகுதி நேர வேலை வாய்ப்புடன் கூடிய சிறந்த தங்குமிட வசதி. மேலும் பல நாடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இந்த விசாவில் இலகுவாக செல்லக்கூடிய நாடுகள்.

SCHENGEN COUNTRY'S

*LITHUANIA *ROMANIA *LATVIA *FRANCE *GERMANY *ITALY

Other Countries To Going High Education And Part Time Employment.
Schengen Visa, Family Visa, Student Visa மற்றும் Visit Visa களுக்கு மிகவும் நம்பகமான முறையில் குறுகிய காலத்தில் செய்து தரப்படும்.

மேலும் Visa ஆலோசனை * No Need IELTS

அனைத்து தகவல்களுக்கும் அழைக்கவும். 076 182 8223, 011 581 8122

EUROPEN BUSINESS COLLEGE
24A, 3rd Floor Rohini Road, Wellawatta Colombo - 06



ராசி அதிர்ஷ்டம்

திகதி 05.10.2018 | வெற்றி வாரம் 2377 | வர்ணம் சிவப்பு

கடகம் — வெற்றி இலக்கங்கள் 31 36 49 59 — வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 13,001,220/=

2018.10.07 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 350
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.05

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 97,024,513/-

O 04 23 69 75

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk



அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 394
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.05

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,433,780/-

வெற்றி இலக்கங்கள் 36 65 68 72 F

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk



SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 864
சீட்டிழுப்பு திகதி 2018.10.04 வியாழக்கிழமை

N 45 53 58 71

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,227,648/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



நியத ஜய Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம் 708 வர்ணம் : நீலம்
திகதி 2018.10.05

வெற்றி இலக்கங்கள் 34 41 45 55 — ஆங்கில எழுத்து I

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 16,233,912/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
தரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா /புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

**சுதர்சன் அக்சயன்**

192 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்தைப் பெற்றமையை மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறைவன் அருள்புரிவாராக.

பாராட்டி வாழ்த்துவோர் : அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, அத்தை.

*Congratulations!* *Congratulations!*

## Chundikuli Girls' College, Jaffna

### WANTED

Graduates or English trained teachers to teach the following Subjects.

i. General English in the A/L classes
ii. English Literature in Gr. 10 &11

**Requirements**


- Minimum 3 years teaching experience in General English in the G.C.E (A/L) or English literature in the Grade 10 and Grade 11 classes.
- Age: 25 - 55 years.

Salary negotiable considering qualifications and experience.
Only shortlisted candidates would be called for an interview.
Apply before 12th October 2018

Principal
Chundikuli Girls'College. Jaffna.
Tel: 021 222 2338
Email: forwardcgc@yahoo.com.

## மரண அறிவித்தல்

### Lion த.கைலாசநாதன்



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் K.K.S. வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கைலாசநாதன் (Lion ஓய்வுபெற்ற Radio grapher) கடந்த (04.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமேஸ்வரி கைலாசநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர் - யா/இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கைலாசர் (ஓய்வுபெற்ற RMP), இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் மகாலட்சுமி, திருஞானசம்பந்தர் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), கலைவாணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சோமசேகரம், சுந்தரராசா மற்றும் விஸ்வநாதன் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்), சோமாஸ்கந்தமூர்த்தி (ஜேர்மனி), ரேணுகா (London), தாமரைவாசினி, கலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விவேகானந்தன் (London), இராசபூபதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), றஜினி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகோதயம்**
**K.K.S. வீதி, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18454/15/17)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி நவரத்தினம் (காரைநகர்)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது பயிரிக்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி நவரத்தினம் நேற்று (05.10.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற முருகேசு நவரத்தினத்தின் அன்புமனைவியும் ருக்குமண்ணிதேவி, நவகிருஷ்ணராசா (முகாமையாளர் இலங்கை வங்கி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத்தாயும் ரவிச்சந்திரன் (உரிமையாளர், ரவிச்சந்திரன் பல்பொருள் வாணிபம் திருநெல்வேலி), ஜசிந்தா, (பிரதேசசெயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்புமாமியும் விதுஷன், லோஜன், டனுஷன், கஜலக்ஷிகன், ஜதுர்சா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தங்கராசா, பராசக்தி, K.K. இராமநாதன் - பாலாம்பிகை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பயிரிக்கூடல், காரைநகர்.**
**077 923 1610**

**தகவல் : நவகிருஷ்ணராசா**
**(மகன்)**

*மாவட்ட...*

இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மகேந்திரன் திகழ்ஒளிபவன் மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த நவாஸ்கரன் நதி இருவரும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணம் ஹோலிபமிலி ஹொன்மன்டைச் சேர்ந்த ஜெயந்தன் கிருஜனா, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சாருகா சிவனேஸ்வரன் ஆகிய இருவரும் 196 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பகிர்ந்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் நகரப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து 273 பேர் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 103 பேர் சித்தியடைந்துள்ளனர். ஜோன் பொஸ்கோவிலிருந்து 215 பேர் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 115 பேர் சித்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கனகலிங்கம் தேனுசன் 196 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். கிளிநொச்சி மத்திய ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த கேதீஸ்வரன் கதிர்நிலவன், தர்மபுரம் பாடசாலையைச் சேர்ந்த சந்திரபாலன் தர்மிகன் ஆகியோர் 195 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினை பகிர்ந்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 752 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 279 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கடந்த ஆண்டு 153 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி மாமடு, பழம்பாசி அ.த.க. பாடசாலை மாணவி துச்சாதனா 195 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். முல்லைத்தீவு றோ.க. பாடசாலையைச் சேர்ந்த பெலிக் மதனராசா மேரிகன் 194 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். முல்லைத்தீவு உடையார்கட்டு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஜெயரஞ்சன் தீச்சுடர் மற்றும் கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த கஜேந்திரன் தமிழரசன் இருவரும் 193 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பகிர்ந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில், மடுக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கருங்கண்டல் பாடசாலையைச் சேர்ந்த ரி.திருக்குமரன் 187 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த தயாளன் ஜேம்ஸ் தேவப்பிட்டியன் 184 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மாவிலங்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஜெ.சௌமியா 183 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில், சிவபுரம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கல்வி யிலும் பாலகுமார் ஹரித்திக்ஹன் சுஜா 197 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவரின் தந்தை சாரதியாகப் பணிபுரிகின்றார். இவரது பாடசாலை அதிகஷ்டப் பிரதேசத்துள் உள்ள பாடசாலையாகும்.

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ச. லதுசனா, வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெ.லதுசன் இருவரும் 193 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பகிர்ந்துள்ளனர். (5,6,7,8,9,159, 213,105,110,222, 214,ரி3,72)

# யாழ். வர்த்தகர்கள் சிரமமின்றி இந்தியா செல்ல நுழைவிசைவு நடைமுறை விரைவில் ஆராயப்படும்

## இந்திய துணைதூரதராக அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஒக் 6

யாழ்ப்பாண நகர் வர்த்தகர்கள் இந்தியா சென்று பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குரியவிசாநடைமுறைகளைஆராய்ந்து. சாதகமான நடவடிக்கையை முன்னெடுக்க வழிவகைகளைச் செய்து தருவேன் என்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைதூரதராக அதிகாரி எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நகர் வர்த்தகர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைதூதரக அதிகாரிகளுக்கு இடையேயான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் "எமது வியாபாரத்துக்குத் தேவையான பொருள்களை நாம் இந்தியா சென்று கொள்வனவு செய்து வருகின்றோம். நாம் நேரடியாகச் சென்று அங்கு பொருள்களைக் கொள்வனவுசெய்யமுடியாது. அங்கு உள்ள இடைத் தரகர்கள் மூலமே பொருள்களைக் கொள்வனவுசெய்யமுடியும். அதுதான் அங்குள்ள வர்தகர்களின் நம்பிக்கையாகவும் அமையும். ஆரம்பத்தில் ஒரு வருடத்தில் எத்தனை முறையும் இந்தியா சென்று வருவதற்கான விசா தரப்பட்டது. தற்போது அந்த நிலை இல்லை. 6 மாதத்துக்கானவிசாதரப்படுகிறது. அதிலும் குறிப்பிட சில தடவைகள் மாத்திரமே சென்று வரக் கூடிய நிலை காணப்படுகிறது. பல தடவைகள் விசா மறுக்கப்பட்டிருக்கிறது. நேர்முகத் தேர்வில் பல கேள்விகள் கேட்கப்பட்டுஆவணங்கள்பரிசீலிக்கப்படுகிறது. விசா சீரின்மையால்எமதுவியாபாரம்பாதிக்கப்படுகிறது என்று இந்தியத் தூதரக அதிகாரியிடம் யாழ்ப்பாண வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வர்த்தகர்களுடைய விடயம்தொடர்பில் இந்தியத்துணைத்தூதரக அதிகாரிகள் பதிலளித்தனர். அவர்கள் தெரிவித்ததாவது

தற்போதுஇந்தியாவின்வரிப்பிரிவினரின்சட்டதிட்டங்கள் இறுக்கமாகக் காணப்படுகிறது. நாம் இங்கிருந்து விசா என்ன தேவைக்கு வழங்குகிறோமோ அந்தத்தேவைகள்நிறைவு செய்யப்படாமல் இருந்தால் எமக்குப் பிரச்சினை. நாம் ஒரு வருடத்துக்கான பலதடவைகள்செல்வதற்கானவிசாவைவழங்கத்தயார். அதையயும் இப்போது வழங்கி வருகிறோம். ஆனால்நீங்கள்இந்தியாவில் இருந்துகொள்வனவு செய்யும் பொருள்களின் விவரங்கள் மற்றும் கடையின் விவரங்கள் மற்றும் வரி செலுத்தும் ஆவணங்கள் சரியாக இருக்க வேண்டும். சிலர் எமக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பற்றுச் சீட்டைத் தருவார்கள். அதில் எங்கு, எப்போது, என்ன பொருள் , எவ்வளவு வரி, எங்கு இறக்குமதி போன்ற முழுமையான விவரங்கள் இருப்பதில்லை. இந்தவிடயங்களைமுழுமைப்படுத்தித் தருபவர்களுக்கு விசா வழங்கி இருக்கிறோம். ஆனால் உங்களுக்கு நாங்கள் இயன்ற வரை 6 மாத கால விசா என்றாலும் தந்து இருக்கின்றோம். சுற்றுலா விசாவில் செல்பவர்கள் வரும் போது முப்பது ,கிலோ கிராம் வரையில் பொருள்களைக் கொண்டு வருகிறார்கள் இதனால் எமக்குத் தான் பிரச்சினை. யார் உண்மையாக வியாபாரம் செய்யப் போகிறார்கள் ,யார் சும்மா போகிறார்கள் என்று எமக்குத் தெரியவில்லை. ஆனால் உங்களுடன் கதைத்ததில் புரிகிறது உங்கள் நிலை. ஆகவே விசாவுக்காக வணிகர் கழகத்தின் ஊடாக வரும் விண்ணப்பங்களை தனியாக ஒழுங்குபடுத்தி அதற்கான நேர்முகத் தேர்வின் போது உங்களுக்கான சாதகமான விடயங்களைச் செய்வோம் என்றனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினரும் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் உப தலைவருமான இ.ஜெயசேகரம் தெரிவித்ததாவது.

நாம்போரால்பாதிக்கப்பட்டவர்கள். இப்போது தான் மீண்டு எழுகிறோம். இந்தியாவுக்கும் எமக்கும் இடையிலான உறவு எமக்கு முக்கியம். போர் நிலைமைகளில் பலர் இந்தியாவுக்குச் சென்றனர். ஆனால் இப்போது நிலை மாறியுள்ளது. வர்த்தகம், மருத்துவம், ஆன்மீகச்சுற்றுலா போன்றவற்றுக்கு எம்மவர்கள் இந்தியாவுக்குச் சென்று வருகின்றனர். நாம் எப்போதும் அங்கு பிழை செய்யவில்லை. போர் நிலையிலும் அங்கு சென்றவர்களால் ஒரு தொந்தரவும் இல்லை. இப்போது இங்கு சுமுகமான நிலை காணபடுகிறது. ஆகவே இந்த நிலையில் விசா நடைமுறைகளில் இறுக்கமான நடைமுறைகளைப் பின் பற்றுவது ஏற்றுக்கொள்ள முடியாது. காங்கேசன்துறைத் துறைமுகம் , பலாலி விமான நிலையம் புதுப் பொலிவு பெற்றால் நாம் இன்னும் எமது உறவுகளை வளர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆகவேவிசாநடைமுறைகளில் எம்மவர்களை கவனத்தில் கொள்ள வேண்டும்-என்றார். (21,7)

# மணிவண்ணனுக்கு எதிரான வழக்கை இணைக்க சபைக்கு மாற்ற உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 6

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு எதிரான வழக்கை இணக்க சபைக்கு மாற்றி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இணக்கசபையில்முறைப்பாட்டாளரும்எதிரியும் இணக்கப்பாட்டுக்கு வராவிடின்வழக்கை வரும் நவம்பர் 13ஆம் திகதி விளக்கத்துக்கு நியமிப்பதாகவும்நீதிமன்று நேற்றுக்கட்டளை வழங்கியது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி வி. மணிவண்ணனுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத்தொடர்ந்தனர். குற்றவியல்நடைமுறைச் சட்டக்கோவை 486ஆம் பிரிவின் கீழ் ஆள்ஒருவரை அச்சுறுத்தியதாகசட்டத்தரணி மணிவண்ணனுக்கு எதிராக பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முறைப்பாட்டாளர் மன்றில் தோன்றினார்.

எதிராளியான சட்டத்தரணி வி. மணிவண்ணன் மன்றில் முன்னிலையானார். அவர் சார்பில்சட்டத்தரணி கு. குருபரன் முற்பட்டார். பொலிஸாரால்முன்வைக்கப்பட்டுள்ளகுற்றப்பத்திரத்தின் அடிப்படையில் முறைப்பாட்டாளரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் மற்றும் எதிரியான சட்டத்தரணி வி. மணிவண்ணன் ஆகியோரை இணக்க சபைக்குச் சென்று இணக்கப்பாட்டுச் செல்வது தொடர்பில் ஆலோசிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வராவிடின் வழக்கை வரும் நவம்பர் 14ஆம் திகதிக்கு விளக்கத்துக்கு நியமிப்பதாக நீதிவான் கட்டளையிட்டார்.

**பின்னணி**

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பரப்புரையின் போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தமிழ் தேசி மக்கள் முன்னணி, தமிழ்தேசியப்பேரவை என்ற தேர்தல் கூட்டில் போட்டியிட்டது. அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி நல்லூர் இளஞ்கலைஞர்மண்டபத்தில்வெளியிடப்பட்டது. தேர்தல் அறிக்கையை வெளியிட்டுவைத்தபின்உரையாற்றியதமிழ்தேசிய பேரவையின் யாழ். மாநகர சபைக்கான முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன்,"தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்குச் சார்பாக பல்வேறு கட்டுரைகளை எழுதிய ஒருவரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஆக்கியிருக்கின்றார்கள். இலங்கை தேர்தல்கள்ஆணைக்குழுவில்அதிகாரியான ரட்ணஜீவன் எச். ஹூலிற்கு அரசால் வழங்கப்பட்டிருக்கின்றபணி எம்மை நீதிமன்றங்களில் நிறுத்துவதே" என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். தம்மீதான அவதூறு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் சாமுவேல் இரட்ணஜீவன் கூல், யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சட்டத்தரணிவி. மணிவண்ணன்தன்மீது அவதூறாகப்பேசியவிடயத்தைதான் ஊடகங்கள் வாயிலாக அறிந்ததாகவும் அதுதொடர்பில் உரிய விசாரணைவேண்டும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் அவர் கேட்டிருந்தார். அத்துடன், அந்தக் காலப்பகுதியில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலும் தன்னை அச்சுறுத்தும் வகையில்கருத்துக்களைத்தெரிவித்தார்என தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ண்ஜீவன் கூல் பொலிஸில் முறைப்பாடு வழங்கியிருந்தார். (21)

## அரசியல்...

அநுராதபுரம் சிறைச்சாலையிலும் மகசின் சிறைச்சாலையிலும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற கோரியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதத் தடைசட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியிருந்ததுடன் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ராஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, முன்னிலை சோசலிசக் கட்சியினர், வவுனியா மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5,110)

## அரசமைப்பு...

விட்டால் நாடுமீண்டும் வன்முறையை நோக்கிச் செல்லநேரிடும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், பிரிட்டனின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட்டிடம் எடுத்துரைத்துள்ளார்.

கொழும்புக்கு வந்துள்ள மார்க் பீல்ட், எதிர்க்கட்சித் தலைவரை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

சந்திப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப்பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. கடந்த அரசோடு ஒப்பிடுகையில் இந்த அரசின் செயற்பாடுகளில் மாற்றம் உள்ளதாக தெரிவித்த இரா.சம்பந்தன், அது மாத்திரம் போதாது என்றும் வலியுறுத்தினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன், தீர்மானத்தைநிறைவேற்றுவதற்கு அரசு இரண்டு ஆண்டு கால அவகாசம் கோரியிருந்தமையை சுட்டிக்காட்டிய அதேவேளை, தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் நிலவுவதனையும் எடுத்துரைத்தார். மேலும் மிக விரைவாக தீர்வு காணப்பட வேண்டிய படையினர் வசமுள்ள மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வந்த காணி விடுவிப்பு, நீக்கப்படும் என்று பலமுறை அரசு வாக்கு கொடுத்தும் இன்னமும் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்தது வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, இந்த விடயங்கள் தாமதங்களின்றி செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டியவை எனவும் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு இன்னமும் நிறுவப்படாமையும் கவனிக்கப்படவேண்டிய விடயம் எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், உண்மையை மறைத்து விட முடியாது எனவும் உண்மை நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு எனவும்தெரிவித்தார். அதேவேளை, உண்மையை நிலைநாட்டி கண்டறிந்து நீதி நிலை நாட்ட உண்மையை கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

புதிய அரசமைப்பு உருவாக்க நடைமுறைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் நீண்டகால அதிகாரப் பகிர்வு கோரிக்கையானது ஒரு அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகும் என்பதனை வலியுறுத்திய அதே வேளை் இந்த விடயம் தொடர்பில் கடந்த 30 ஆண்டுகாலமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையையும் எடுத்துக்காட்டினார். கடந்த காலங்களில் ஒவ்வொரு அரச தலைவரும், அரசுகளும் இது தொடர்பில் எடுத்து வந்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய இரா. சம்பந்தன், புதிய அரசமைப்பு உருவாக்கம் இனிமேலும் தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாம் பிளவுபடாத பிரிக்கமுடியாத ஒருமித்த இலங்கை நாட்டிற்குள் தீர்வொன்றினை எதிர்பார்க்கிறோம். இந்த கோரிக்கைக்கு எமது மக்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களிலே அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். மக்களது இந்த ஜனநாயகத் தீர்ப்பு மதிப்பளிக்கப்படவேண்டிய ஒன்று என்பதனையும் சுட்டிக்காட்டினார். நாங்கள் இந்த நாட்டில் சம உரிமையுள்ள குடிமக்களாக சுய மதிப்புடனும் சுய மரியாதையுடனும் வாழ விரும்புகிறோம். மக்களுக்கு தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார்.

மேலும் எமது இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவதனை நாம் விரும்பவில்லை. கடந்த காலப் போரின் நிமித்தம் அவர்கள் அநேக இழப்புகளை சந்தித்தது விட்டார்கள் என்பதனையும் எடுத்துக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இங்கு கருத்து தெரிவிக்கையில், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரச தலைவர்கள் மத்தியில் அரசியல் விருப்பு குறைவாக காணப்படுவதாகத் தெரிவித்த அதேவேளை அநேக விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும் இன்னும் ஒரு தயக்க நிலை அரச தலைவர்கள் மத்தியில் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடமுடியாது என்று வலியுறுத்திய இரா.சம்பந்தன், தவறவிடும் பட்சத்தில் ஆட்சியில் யார் இருந்தாலும் இந்த நாடு பின்னோக்கியே செல்லும் எனவும் சுட்டிக்காட்டினார். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நீண்டகால இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வினைக் காண முன்வருவது அவசியம் எனவும் அவ்வாறு இது தீர்க்கப்படாவிடில் இந்த நாடு மீண்டும் ஒரு வன்முறையை நோக்கி நகரும் எனவும் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், அரசு இணைந்து முன்மொழிந்த இந்தத் தீர்மானம் தொடர்பில் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் எனவும், இந்தத் தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அரசு தனது மக்களுக்கு நீதியை வழங்குவதிலிருந்து விலக முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானமானது மாற்றமடையாமல் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் பன்னாட்டுச் சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். கடந்த காலங்களில் பிரிட்டனின் பங்களிப்பினை பாராட்டிய இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சரியான முடிவினை அடையும் வரை மிக நெருக்கமான பன்னாட்டுப் பங்களிப்பு அவசியம் அளவும் அதனை தவிர்க்க முடியாது எனவும் வலியுறுத்தினார் என்றுள்ளது. (5)

## கலைமதி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 6
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணி வெற்றிபெற்றது.
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:22, 25:20 என்ற நேர்செற் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 6
**கூடைப்பந்தாட்டம்**
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
**கால்பந்தாட்டம்**
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணி

யாழ்ப்பாணம், ஒக். 6
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது.
கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. இதையடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## றேஞ்சர்ஸ் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 6
ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது றேஞ்சர்ஸ் அணி.
ஆதிசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய றேஞ்சர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23,422)



## யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்துத் தொடர் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 6
யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியிலான மஞ்சிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் கலைமதி, புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானங்களில் நாளை காலை தொடக்கம் மாலை வரை இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 20 கழகங்கள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம)

## கிளி. துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை

கிளிநொச்சி, ஒக். 6
கிளிநொச்சி மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறிமியர் லீக் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நாளை நடைபெறவுள்ளன.
கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மகாதீபம் அணியை எதிர்த்து பப்ரிஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனைற்ரெட் அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணி மோதவுள்ளது. (ம-23)



## யங்ஹென்றிஸ் அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 6
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## சென். லூட்ஸ் வென்றது


யாழ்ப்பாணம், ஒக். 6
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணி வெற்றிபெற்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது: 4:1 என்ற கோல் கணக்கில் சென். லூட்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கபடியில் சிறந்தவர்களாக நெல்லியடி மத்தியின் மாணவர்கள்



யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கபடித் தொடரில் 20 வயதுப்பிரிவில் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை விருதுகள் நெல்லியடி மத்திய கல்லூரியின் மாணவர்களுக்குக் கிடைத்தன.
ஆண்கள் பிரிவில் சிறந்த வீரராக ஏ.அஜித், பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக ஏ.நிலாஜினி ஆகியோர் தெரிவாகினார்கள்.
கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் வைத்து இவர்ளுக்கான மதிப்புறுத்தல் வழங்கப்பட்டது. (ம-422,108)




# அருணோதயக் கல்லூரிக்கு தேசியத்தில் 2 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கோலூன்றிப் பாய்தலில் 18 வயது ஆண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு தங்கம், வெள்ளி என்று இரண்டு பதக்கங்கள் கிடைத்தன.
கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சு.திசாந் 4.35 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், வி.றொசான் 3.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம422,108)



# ஹாட்லி மாணவனுக்கு தட்டெறிதலில் வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி. அபிசாந் வெள்ளிப்பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களிற்கான தட்டெறிதலில் பருத்துத்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.அபிசாந் 41.44 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். (ம-422,108)

# கொக்குவில் இந்துவின் துசாஜினி சிறந்த கரம் வீராங்கனை



யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கரத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் எல்.துசாஜினி சிறந்த கரம் வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரின் இறுதிநாள் நிகழ்வு கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சிறந்த கரம் வீராங்கானையாக கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எல்.துசாஜினி தெரிவு செய்யப்பட்டார். (ம422)

# இல்ல மெய்வன்மை

சாவகச்சேரி, ஒக். 6
சாவகச்சேரி மருத்துவமனை அலுவலர்களுக்கு இடையிலான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.
3 இல்லங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகளும் மென்பந்துத் துடுப்பாட்டமும் இன்று இடம்பெறவுள்ளன. பரிசளிப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)



# சிறந்த பளுதூக்கல் வீராங்கனையாக ஆசிகா

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த விஜயபாஸ்கர் ஆசிகா சிறந்த பளுதூக்கல் வீராங்கானையாகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரின் இறுதிநாள் நிகழ்வு கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்தே குறித்த விருது ஆசிகாவுக்கு அறிவிக்கப்பட்டது. (ம-422,108)



# தேசிய கோலூன்றிப் பாய்தலில் அருணோதயாவுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தனுசங்கவி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.தனுசங்கவி 2.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம422)

# இந்தியாவிடம் திணறுகிறது தீவுகள்



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் முடிவின் அடிப்படையில் இந்திய அணி மிகப் பெரும் முன்னிலை பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் நாள் முடிவில் இந்திய அணி 4 இலக்குகளை இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கோக்லி 72 ஓட்டங்களுடனும், பன்ட் 17 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். சதம் கடந்தார் கோக்லி. பன்ட் தொடர்ந்தும் அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தார். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் பன்டின் ஆட்டம் அமைந்தது. சிக்சர்கள், பவுண்டரிகள் என்று மாறிமாறி விளாசிக் கொண்டிருந்தார். பன்ட் 84 பந்துகளில் 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லி 139 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இது அவரின் 24ஆவது டெஸ்ட் சதமாகப் பதிவானது. ஜடேயா மத்திய வரிசையில் தன் பங்குக்குச் சதம் கடந்தார். 9 இலக்குகளை இழந்து 649 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இந்திய அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் பிஸ்கூ 4 இலக்குகளையும், லூயிஸ் 2 இலக்குகளையும், கபிரியேல், சேஸ், பிரீத்வைட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரர்களாக பிரீத்வைட் மற்றும் பவல். பீரீத்வைட்டை 2 ஓட்டங்களுடனும், பவலை ஓர் ஓட்டத்துடனும் வெளியேற்றினார் சமி. மேற்கிந்தியத் தீவுகள் தாறுமாறாகத் தடுமாறியது. கோப் 10 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்துவீச்சில் போல்ட்டானார். ஹெட்மயர் 10 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார். அம்பிரிஸை 12 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் ஜடேயா. மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நாள் முடிவுக்கு வந்தது. இதன்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி கைவசமுள்ள 4 இலக்குகளை வைத்து மேலதிகமாக 555 ஓட்டங்களைப் பெற்றாலேயே இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களை எட்ட முடியும். (ம)


**விற்பனைக்கு**



கூரை வேலைக்குப் பயன்படுத்துகின்ற 25 Feet நீளம் 7½ Feet உயரமுடைய Trusses 10 மற்றும் 4 inch (Cement block) சிமெண்ட் கற்கள் விற்பனைக்கு உண்டு.

071 278 4738

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

உடனடியாக பதிவு செய்யுங்கள்

அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்

0768226243

**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**கருத்தமர்வும் கலந்துரையாடலும்**

பெற்றோர்களே! மாணவர்களே!

பொருத்தமான உயர்கல்வி துறையை தேர்ந்தெடுத்து சிறந்த தொழில் துறையை தெரிவுசெய்வதற்கான கருத்தமர்வானது 07.10.2018 நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்து கருத்துரை வழங்க உள்ளார்.

இடம்:- IIS CITY CAMPUS
200,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
நேரம்:- காலை 9.30 மணி

ஆர்வமுள்ள அனைவரும் இக் கலந்துரையாடலுக்கு வருகைதந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

IIS CITY CAMPUS

மேலதிக விபரங்களுக்கு:- 071 777 5666 / 0777 570 038

**காணி தேவை**

யாழ்ப்பாணம் அராலி துறைப்பகுதியிலும் கிளிநொச்சி நகரத்தில் இருந்து முறிகண்டி பிள்ளையார் வரையான A-9 வீதியில் 150 அடி முகப்பாகக் கொண்ட காணி தேவை.

075 557 4444

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் பிரபல்யம் மிக்க புடைவையகத்துக்குப் பணியாளர்கள் (ஆண், பெண்) உடன் தேவை.


1. வயது எல்லை (18 - 30)
2. யாழ்.நகருக்கு அருகில் உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.
3. முன்னனுபவம் அத்தியாவசியம் இல்லை.
4. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

070 595 9333 (IN/7990)(11,17)


## மரண அறிவித்தல்

### கந்தையா சிவனேசலிங்கம்

*(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்)*



பிறப்பு 28.03.1948 இறப்பு 05.10.2018

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் மானிப்பாய் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவனேசலிங்கம் நேற்று (05.10.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கந்தையா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சின்னத்தம்பி நாகலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் யமுனாவின் அன்புக் கணவரும் Dr. பிரதீபா (வைத்தியர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை), Dr. பிரதீபன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. குகானந்தராசாவின் (வைத்தியர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) அன்பு மாமனாரும் அக்ஷிதாவின் அன்புப் பேரனும் சிவலிங்கம் (கனடா), சாந்தலிங்கம் (சுவிஸ்), லோகேந்திரன், நாதன், கலாவல்லி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**200, மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0212217730**

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானை (தவம்) சின்னப்பு



பிறப்பு 24.12.1946 இறப்பு 02.10.2018

அல்லாரையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை (தவம்) சின்னப்பு 02.10.2018 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - வள்ளிப்பிள்ளை (தங்கம்மா) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை சின்னப்புவின் அன்புமனைவியும், தவக்குமார் (லண்டன்), சாந்தி (பிரான்ஸ்), சிவகுமார் (சங்கானை), துஸ்யா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் செல்லம்மா (கனடா), செல்லத்துரை (உரும்பிராய்), செல்வமலர் (அல்லாரை), செல்வநாதன் (ஆனந்து - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சிதபவானி (லண்டன்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சுமித்திரா (சங்கானை), அன்பழகன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், நல்லம்மா (பூமணி), சிவசோதி, மகேஸ்வரி, யோகராசா, நாகேந்திரம் மேனகா ஆகியோரின் மைத்துனியும், விஜயராணியின் உடன்பிறவாச் சகோதரியும், ஜனுசியா, லாறன்ஜா, சபீனா, கபிலாஸ், அஜீபன், அஜீனா, அபிநயா, சஜின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு கொட்டையடிதூ இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன்கோயில் றோட், வீரபத்திரர் வீதி,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

(ACH/481)(11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 849 6379, 077 322 3111**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.